# இயேசுவின் வீரன் - தியானங்களின் தொகுப்பு

www.jesussoldierindia.wordpress.com



**www.jesussoldierindia.wordpress.com என்ற**
**தமிழ் கிறிஸ்தவ இணையதளத்தில்**
**வெளியிடப்பட்ட தியானங்கள் தொகுத்து**
**இப்புத்தகத்தில் வெளியிடப்பட்டுள்ளது**

**மார்ச் 2016**

# கர்த்தருடைய வசனம்



ஆதியிலே கர்த்தருடைய வசனம் (வார்த்தை) சகலத்தையையும் சிருஷ்டித்தது. அந்த வார்த்தை நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு ஆகியோருடன் உறவாடியது. வாக்குதத்தங்களை வாக்குபண்ணியது. மோசே, யோசுவா ஆகியோரை வாக்குதத்தங்களை நோக்கி நடத்தியது. சாமுவேல், தாவிது ஆகியோரை ஆளுகை செய்து ஆள வைத்தது. ஏசாயா, எசேக்கியேல் ஆகியோருக்கு வெளிப்பட்டது. ஆனால், அந்த வார்த்தை மாம்சமாகி, நமக்குள்ளே வாசம்பண்ணுகிறார் **(யோவான் 1:14)**.

ஏனெனில், அவர்கள் நம்மை அல்லாமல் பூரணராகாதபடி விசேஷித்த நன்மையானதொன்றைத் (வார்த்தை மாம்சமாகி) தேவன் நமக்காக முன்னதாக நயமித்திருந்தார் **(ஏபிரேயர் 11:40)**. ஆதலால், நாம் அவருக்குள் இருக்கிறோம், பிழைக்கிறோம், அசைகிறோம். அவராலன்றி, நம்மால் ஒன்றும் செய்ய கூடாது. பழைய ஏற்பாட்டில் தேவன் தமது ஆளுகையை மனிதர்கள் மத்தியில் வெளிப்படுத்தினார், ஆனால் புதிய ஏற்பாட்டில், அவர் நமக்குள்ளே ஆளுகை செய்கிறார். அந்த வார்த்தை ( வசனம்) நறுமணமாய் நம்மில் இருந்து மற்றவருக்கும் வீச வேண்டும். அல்லேலுயா! ஆமென்.

# இழப்புகளின் மத்தியில்



**இழப்புகள்** என்பது நம்மால் தாங்கிக்கொள்ள முடியாத ஒன்றாகும். அதிலும், யோபுவை போல ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வொரு காரியத்திலும் இழப்புக்கள் ஏற்படும் பொழுதும், அடி மேல் அடி விழும் பொழுதும் நாம் நிலைகொலைந்து போகிறோம். யோபுவும், அப்படியே நிலைகொலைந்தே சாம்பலில் உட்கார்ந்தார் (யோபு 2 :8). அவருடைய பல கேள்விகள் எனக்கு ஏன் இந்த துன்பம் என்று கேட்பதாகவே இருந்தது. நாமும் அப்படியே பல வேளைகளில் தேவனிடத்தில் கேட்கிறோம்.

ஆனால், யோபுவுக்கு எப்படி அதற்கு பதில் வரவில்லையோ, நமக்கும் தேவன் அநேக நேரங்களில் ஏன் என்ற நமது கேள்விக்கு பதில் அளிப்பதில்லை. ஏனெனில், திரை மறைவில் தேவனுக்கும், சாத்தானுக்கும் இடையே நடந்ததை யோபு ஒருபோதும் அறியவில்லை. தேவனும் அதை அவருக்கு அறிவிக்கவில்லை.

ஆனால், வேளை வந்தபொழுது தேவன் தமது வல்லமையை யோபுவின் வாழ்க்கையில் வெளிப்படுத்தினார். சாத்தான் யோபுவின் வாழ்க்கையில் எல்லாவற்றையும் ஒரே நாளில் எடுத்துக்கொண்டான். ஆனால் தேவன் அவை ஒவ்வொன்றையும் அவருக்கு இரட்டதனையாய் திருப்பித்தந்தார். ஏனெனில், யோபுவுக்கு ஒரு நிச்சயம் இருந்தது, அது "அவர் என்னை கொன்றுபோட்டாலும், அவர் மேல் நம்பிக்கையாய் இருப்பேன்" (யோபு 13 :15) என்பதே. ஆம், அவர் வாழ்க்கையீல் இழக்க அவர் உயீரை தவிர வேறெதுவும் இல்லை, அவர், மனைவிகூட "தேவனைத் தூஷித்து ஜிவனை விடும்" (யோபு 2 :9) என்று கூறிவிட்டாள். ஆனால், அந்த சூழ்நிலையில் மத்தியிலும் அவர் தமது நம்பிக்கையை விடவில்லை. ஏனெனில், "என் மிட்பர் உயிரோடிருக்கிறார்"

(யோபு 19 :25) என்பதை அவர் அறிந்திருந்தார். அதுமாத்திரமல்ல, நித்திய வாழ்வைக்குறித்தும் அவருக்கு நம்பிக்கை இருந்தது (யோபு 19 :26,27).

அதனால்தான், தான் இவ்வுலகத்தில் எல்லாவற்றையும் இழந்த பின்பும், தான் நத்திய வாழ்வை இழந்து போகமாட்டேன் என்ற நம்பிக்கை அவருக்குள் இருந்தது. எனவே, தேவன் இவ்வுலகத்திற்குரியவைகளையல்ல, மேலானவைகளையே தேடின யோபுவிற்கு, ஆவிக்குரிய ஆசிர்வாதங்களையும், பூமிக்குரிய நன்மைகளையும் அளவில்லாமல் அளித்தார். இறுதியில் யோபு ஒன்றையும் இழந்து போகவில்லை, தோற்றுபோனவன் பிசாசே. எனவே, நாமும் தேவனை மேலானவைகளுக்காக தேடுவோம். அப்பொழுது நமக்கு சகலமும், சம்பூரணமாய் கூடக் கொடுக்கப்படும்.நாம் ஆசிர்வதிக்கப்பட்டவர்களாய் மட்டுமல்ல, பிறருக்கு ஆசிர்வாதமாயும் இருப்போம்.

இவற்றை நான் வேத வசன போதனையாக மட்டுமல்ல, வாழ்வில் அனுபவிக்கிறவனாகவே எழுதுகிறேன். எனவே, கிறிஸ்துவுக்குள்ளான சகோதர, சகோதிரிகளே நீங்களும் இப்படியே கர்த்தருக்குள் நிலைதிருப்பீர்களாக. கிறிஸ்துவை அறியாதவர்களாய், இப்படிபட்ட நம்பிக்கை இல்லாமல் வாழ்வில் தவித்துகொண்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் கிறிஸ்துவை அறிவிப்போம். அவர்களையும் துன்ப இருளில் இருந்து விடுதலை செய்வோம். மாரநாதா! அல்லேலுயா, ஆமென்.

# தேவ பிரசன்னம்



இவ்வுலகத்தில் மனிதர்கள் எத்தனையோ காரியங்களையும், பொருள்களையும், மனிதர்களையும் நோக்கி ஓடுகிறார்கள். பிற மனிதர்களுடைய அன்பிற்காகவும், ஐக்கியத்திற்காகவும், மேலும் பல பொருள்களை அடைவதற்காகவும் பிரயாசபடுகின்றனர். ஏனெனில், அவைகள் தங்கள் வாழ்க்கையில் தங்களோடு இருக்க வேண்டும் என விரும்புகின்றனர். இவையாவும் நல்லதே. ஆனால், ஒரு மனித வாழ்க்கை பயணத்திற்கு இன்றியமையாதது **தேவ பிரசன்னமேயாகும்**.

இவ்வுலகில் நாம் விரும்புவது எதுவும் நம்மிடத்தில் இருந்தாலும், இல்லாவிட்டலும் தேவ பிரசன்னம் நமக்கு அவசியம் தேவை. ஏனெனில், தேவ பிரசன்னமே நாம் வாழும் வாழ்க்கைக்கு ஓர் அர்த்தத்தை கொடுக்கிறது. தேவ பிரசன்னமே, தேவ சத்தத்தை அனுதினமும் கேட்பதற்க்கும், தேவ உறவை ஒவ்வொரு நொடிபொழுதும் உணர்வதற்க்கும் நமக்கு வழிசெய்கிறது.

ஆதாம், ஏவாளோடு தேவ பிரசன்னம் பரிபூரணமாய், பிரத்தியட்சமாய் இருந்தது. ஆனால், அவர்களோ அதை இழந்து போனார்கள். அப்போஸ்தலர்கள் தேவ பிரசன்னத்தால் நிரம்பி இருந்தனர். ஏனெனில், கிறிஸ்து அவர்களோடு வாழ்ந்தார், அனுதினமும் அவர்களோடு பேசினார், உண்டார், உறங்கினார், பல காரியங்களை அவர்களுக்கு கற்றுக்கொடுத்தார். பூமியில், அதுவும் மாம்ச சரீரத்தில் இருக்கும்பொழுது, தேவனோடு இவ்வளவு ஐக்கியமாய் இருப்பது அவர்களுக்கு கிடைத்த பாக்கியம்.

ஆனால் கிறிஸ்து பரமேற வேண்டிய வேளை வந்தபொழுதோ, பரிசுத்த ஆவியானவரின் முலமாய் தமது பிரசன்னத்தை அவர்களுக்கு வெளிபடுத்தினார். பெந்தெகொஸ்தே நாளில் சிஷர்கள் ஆவியை பெற்றபொழுது, அவர்கள்

ஆண்டவராகிய கிறிஸ்து இயேசு தங்களோடு இருக்கிறார் என்ற நம்பிக்கையை வல்லமையாய் வெளிபடுத்தினர். "வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்" (அப் 3:6) என்று அப்.பேதுருவால் தைரியமாய் கூற முடிந்தது.

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதிரிகளே கிறிஸ்துவின் பிரசன்னத்தை ஒவ்வொரு நொடிபொழுதும் நம் வாழ்வில் காண வாஞ்சிப்போமாக. ஆண்டவரின் பிரசன்னத்தோடு நம் வாழ்க்கையில் ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்கும்பொழுது, நம் வாழ்வில் நாம் ஒருபோதும் இடறி விழமாட்டோம். பிற மனிதர்களின் ஐக்கியத்தை காட்டிலும், வாழ்வில் நாம் பெற்றிருக்கும் அல்லது பெற வாஞ்சிக்கும் எந்த பொருட்கள் தரும் சந்தோஷத்தை காட்டிலும், தேவ பிரசன்னம் நமக்கு அளவில்லாத சமாதானத்தையும், சந்தோஷத்தையும் எப்பொழுதும் தரும்.

கிறிஸ்துவின் வருகையில் நாம் வாஞ்சிப்பதும் இந்த தேவ பிரசன்னத்தையே. ஆம், **கிறிஸ்து வரப்போவது நம்மை அவரோடு எப்பொழுதும் வைத்துக்கொள்ளவே**. அதிலும், மரணத்தை காணாமல் மகிமை அடைந்த சரீரத்தோடு, அவரண்டை சேர்வது மேலான பாக்கியம். அப்படிபட்ட மேலான பாக்கியத்தை பெற, நாம் அப்.பவுலை போல எப்பொழுதும் தேவ பிரசன்னத்தால் நிரம்பி இருக்க வேண்டும். அப்.பவுல் கைது செய்யப்பட்டு பலவித துன்பத்திற்குள்ளாக சென்ற வேளையிலும் அவரோடு இருந்த தேவ பிரசன்னம் சொல்லிமுடியாது. பின்வரும் வசனத்தை தியானித்து பாருங்கள்.

"மிகுந்த கலகம் உண்டானபோது, பவுல் அவர்களால் பீறுண்டுபோவானென்று சேனாபதி பயந்து, போர்ச்சேவகர் போய், அவனை அவர்கள் நடுவிலிருந்து இழுத்துக் கோட்டைக்குக் கொண்டுபோகும்படி கட்டளையிட்டான். **அன்று இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று** : பவுலே, திடன் கொள்; நீ என்னைக் குறித்து எருசலேமிலே சாட்சிகொடுத்தது போல ரோமாவிலும் சாட்சிகொடுக்க வேண்டும் என்றார்" (அப் 23: 10,11).

பவுல் ஒருபக்கம் மரணபோராட்டத்தில் இருந்தார், கிறிஸ்துவை போல பவுலையும் கொலை செய்து விடவேண்டும் என யூதர்கள் எண்ணினர் (அப் 23: 12). அப்படிபட்ட சூழ்நிலையின் மத்தியிலும், கர்த்தராகிய இயேசு, அண்ட சராசரங்களையும் தமது கட்டுபாட்டுக்குள் வைத்திருக்கிறவர், சகல ஜீவராசிகளுக்கும் ஜீவனை கொடுத்து வாழ வைத்து கொண்டிருப்பவர், **அந்த ஒரு மனிதனின் (பவுல்) அருகே வந்து நின்று** அவனோடு பேசுவதே, தேவ பிரசன்னத்தின் மகிமையும் மகத்துவமாகும். ஆம், பவுலுக்கு ஆண்டவர் ஏதோ உறக்கத்தில் தரிசனம் தரவில்லை, தமது வார்த்தையை மட்டும் அனுப்பவில்லை. அதிலும் மேலாக, பவுல் அருகே வந்து நின்று ஒரு தாயைப் போல அவரை தேற்றுகிறார், திடப்படுத்துகிறார்.

இப்படிபட்ட அனுபவமே நமக்கும் தேவை. தேவனோடு அவருடைய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவரோடு நித்திய காலமும் இருப்பது போலவே,

**இவ்வுலகில் வாழ்கின்ற இந்த நாட்களிலேயே, பவுலை போல நாமும் தேவ பிரசன்னத்தை அனுபவிப்போமானால், அதுவே இவ்வுலகில் நாம் பெறும் மேலான பாக்கியமாகும்**. கர்த்தர்தாமே அப்படிப்பட்ட கிருபையை நம் ஒவ்வொருவருக்கும் அருள்வாராக. அல்லேலுயா, ஆமென்.

# கர்த்தருடைய கரம்



**கர்த்தருடைய கரம்** இஸ்ரவேல் மக்களை எகிப்தில் இருந்து கானானுக்கு நடத்தி சென்றது. கர்த்தருடைய கரத்தினால் நடத்தபடுவது என்பது தேவனுடைய முழு ஆளுகைக்குள் நாம் இருப்பதை குறிக்கிறது. ஆம், கர்த்தருடைய கரத்தினால் நடத்தப்படும் பொழுது நமது சுயசித்தத்திற்கு அங்கு இடமில்லை. நம்முடைய வழிகளுக்கும், எண்ணங்களுக்கும் மேலாக தேவனுடைய வழிகளும், எண்ணங்களும் (சித்தங்களும்) நம்முடைய வாழ்வில் நிறைவேறும். இஸ்ரவேல் மக்களை ஆண்டவர் நடத்தி சென்ற பாதையை அவர்களால் விளங்கி கொள்ள முடியவில்லை. சிவந்த சமுத்திரம் போன்ற தடைகளும், மாரா போன்ற கசப்புகளும், அவர்கள் பாதையில் வந்தபொழுது அவர்களால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால் தேவனே அவர்களை அவ்வழியில் கரம்பிடித்து நடத்தி சென்றார். மேலும் எதிரிகள் அவர்களை எதிர்த்த போதும், அவர்கள் விரும்பின இறைச்சி கிடைக்காத போதும், அவர்கள் செல்கின்ற பாதை தேவனால் வழிநடத்தப்படுகின்ற பாதை என்பதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எகிப்தில் தொடங்கி அவர்கள் வழிபிராயணத்தில் எத்தனையோ அற்புதங்களை தேவன் மோசே மூலமாக செய்தபொழுதும், அவர்கள் தேவனுக்கும், மோசேக்கும் கீழ்படியவில்லை. அதைக் காட்டிலும் தாங்கள் விட்டு வந்த எகிப்திற்கே திரும்ப வேண்டும் என்பது அவர்கள் எண்ணமாயிருந்தது.

நம்முடைய வாழ்க்கை பயணத்திலும், கர்த்தருடைய கரம் நம்மோடிருக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். பாவத்தில் இருந்து நம்மை மீட்டெடுத்து நித்திய ஜீவவாழ்வை நோக்கி தேவன் நம்மை நடத்திக் கொண்டருக்கிறார் என்பதையும் நாம் அறிவோம். தேவன் வனாந்திரத்தில்

இஸ்ரவேல் மக்களை போஷித்து, பாதுகாத்து வந்தது போல நம்மையும் இவ்வுலக வாழ்வில் போஷித்து, பாதுகாத்து வருகிறார். ஆண்டவர் இஸ்ரவேல் மக்களை போஷித்து காபாற்றினது வனாந்திரத்தில் வாழ்வதற்காக அல்ல, வாக்குத்தத்த தேசமாகிய கானானை சென்று அடைவதற்காகதான். நம்மையும் தேவன் இவ்வுலகில் சகல நன்மைகளையும் கொடுத்து காப்பாற்றுவது பரம கானானாகிய பரலோகத்திற்கு வழிநடத்தி செல்வதற்கே. இப்படிப்பட்ட ஓர் உன்னதமான வாழ்க்கை பயணத்தில் நம்மைதேவன் வழிநடத்தி வருகிற வேளையில் நமக்கும் சிவந்த சமுத்திரம் போன்ற தடைகளும், மாரா போன்ற கசப்பான அனுபவங்களும் ஏற்படுகிறது.

ஆனால் நாம் கர்த்தருடைய கரத்தை உறுதியாய் பிடித்துக்கொள்வோமானால், தேவன் நிச்சயமாக இப்படிப்பட்ட ஒவ்வொரு சூழ்நிலையிலும் நம்மை வழுவாது கரம்பிடித்து நடத்திசெல்வார். ஏனெனில் **"நான் உன்னை விட்டுவிலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை"** (எபி 13:5) என்று அவர் சொல்லியிருக்கிறாரே. மேலும் இஸ்ரவேல் மக்களை போல நாமும் சில காரியங்களை இச்சித்து பாதை விலகி போகும் பொழுதும், நம்மை கரம்பிடித்து **"வழி இதுவே இதிலே நடவுங்கள்"** (ஏசா 30:21) என்று வழி நடத்துகிறவரும் அவரே. பிரதான மேய்ப்பராகிய அவர் பின்னே அவர் சத்தத்துக்கு செவிக்கொடுத்து செல்வோமானால் நாம் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவோம் (யோ 10:3,9). அவர் கரத்தில் உள்ள கோலும், தடியும் நம்மை தேற்றும் (சங் 23:4).

அவரே நம்மை நீதியின் பாதையில் நடத்துகிறவர் (சங் 23:3). "நீதியின் பாதையில் ஜீவன் உண்டு; அந்த பாதையில் மரணம் இல்லை" (நீதி 12:28). உன்னதப்பாட்டு 5:4 கூறுகிறது "என் நேசர் தமது கையைக் கதவுத் துவாரத்தின் வழியாய் நீட்டினார், அப்பொழுது என் உள்ளம் அவர் நிமித்தம் பொங்கினது". ஒரு வேளை **நீங்கள் கர்த்தருடைய அன்பை அறிந்திருந்தும் அவரை விட்டு விலகி (வழி விலகி) இருப்பீர்கள் என்றால், அவருடைய கரம் உங்களை நோக்கி நீட்டப்படுகிறது**, அவர் உங்களை விட்டு போகும்முன்னே அவர் கரத்தை பற்றிக்கொள்ளுங்கள். வெளிப்படுத்தல் 3:20 கூறுவது போல "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்" என்று **உங்கள் இதய கதவை தட்டிக்கொண்டிருப்பதும் தேவனுடைய கரமே**. இப்பொழுதே அவர் கரத்தை பற்றி பிடித்துக்கொள்ளுங்கள், அவரே நம்மை நித்திய ஜீவகரையில் சேர்ப்பவர். ஆமென்.

# கர்த்தருடைய வழிகள்

## ஆபிரகாம் – லோத்து வாழ்க்கையிலிருந்து




ஆபிரகாம்,லோத்து இவ்விருவருடைய வாழ்க்கை பயணமும் ஒரே இடத்தில் இருந்தே ஆரம்பிக்கிறது(ஆதி 11:27). " கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ" (ஆதி 12:1). என்றார். மேலும் " நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்" (ஆதி 12:2). என்றும் கூறி ஆசிர்வதித்தார்

கர்த்தர் அழைத்த அழைப்பை ஏற்று தேவனை முழு நிச்சயமாய் விசுவாசித்து, வாக்குத்தத்தம் செய்த கர்த்தர் உண்மையுள்ளவர் என்று எண்ணி அவர் தன் சுயதேசத்தை விட்டு புறப்பட்டார். எபி 11:8 கூறுகிறது " விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்". இவ்வாறு கீழ்ப்படிந்து, கர்த்தருடைய வழிக்கு தன்னை ஒப்புவித்து அவருடைய சித்தத்திற்கு ஆபிரகாம் கீழ்ப்படிந்தார். "கர்த்தர் ஆபிராமுக்குச் சொன்னபடியே அவன் புறப்பட்டுப்போனான்; லோத்தும் அவனோடேகூடப் போனான்" (ஆதி 12:4).

இங்கு ஆண்டவர் ஆபிரகாமுக்கு மட்டும் தான் வாக்குத்தத்தங்களை கொடுத்து அழைத்தார், ஆனால் லோத்தும் ஆபிரகாமோடே கூட சென்றார். இங்கு லோத்து ஒரு சரியான தெரிந்தெடுப்பை செய்தார். ஆபிரகாமுடைய விசுவாசத்தை பின்பற்றி தானும் அவரோடே தேவனுடைய வழியில் செல்ல தன்னை அர்ப்பணித்தார்.

ஆதி 13:2 கூறுகிறது " ஆபிராம் மிருகஜீவன்களும் வெள்ளியும் பொன்னுமான ஆஸ்திகளை உடைய சீமானாயிருந்தான்". மேலும் ஆதி 13:5 கூறுகிறது "ஆபிராமுடனே வந்த லோத்துக்கும் ஆடுமாடுகளும் கூடாரங்களும் இருந்தன". இங்கு நாம் காண்கிறபடி கர்த்தர் ஆபிரகாமுக்கு சொன்னபடி அவரை ஆசீர்வதித்து, அவர் பரதேசியாய் கூடாரவாசியாய் அலைந்து திரிந்தாலும், சகல ஆஸ்திகளையும் உடையவராக அவரை தேவன் ஆசீர்வதித்தார். அந்த ஆசீர்வாதம் லோத்துவுக்கும் தொடர்ந்தது. தேவன் ஆபிராகாமுக்கு சொன்னபடியே "நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்" (ஆதி 12:2) என்பது நிறைவேறியது. ஆபிரகாம் தனக்கு தேவன் கொடுத்த ஆசீர்வாதங்களை லோத்துவோடு பகிர்ந்து கொள்ள தயங்கவில்லை.

ஆனால் "அவர்கள் ஒருமித்துக் குடியிருக்க அந்தப் பூமி அவர்களைத் தாங்கக்கூடாதிருந்தது; அவர்களுடைய ஆஸ்தி மிகுதியாயிருந்தபடியால், அவர்கள் ஒருமித்து வாசம்பண்ண ஏதுவில்லாமற்போயிற்று. ஆபிராமுடைய மந்தைமேய்ப்பருக்கும் லோத்துடைய மந்தைமேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று" (ஆதி 13 :6,7). இங்கு நாம் காண்கிறபடி தேவன் அவர்களுக்கு கொடுத்த ஆசீர்வாதமே, அவர்களுக்கு பிரச்சனை வர காரணமாயிருந்தது. இதற்கு காரணம் தேவனுடைய ஆசீர்வாதம் அல்ல, அதை முறையாக பயன்படுத்த தெரியாத மனிதர்களால் தான்.

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் சத்தியம் என்னவென்றால் நாம் தேவனை விசுவாசித்து அவரோடு நடக்கும்பொழுதும், அல்லது அவரது தரிசனத்தை பெற்ற தேவபிள்ளைகளோடு கூட சேர்ந்து நாம் நடக்கும்பொழுதும் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நம்முடைய வாழ்க்கையில் பலிக்கின்றன. ஆனால் தேவன் கொடுத்த ஆசீர்வாதங்களை, தாலந்துகளை சரியாகப் பயன்படுத்த நமக்கு தெரியாத பொழுது அல்லது பயன்படுத்தாத பொழுது அதுவே நம்முடைய வாழ்க்கையில் பிரச்சனைகளை கொண்டு வருகிறது.

இங்கு, ஆபிரகாம் தேவ ஞானமாய் செயல்பட்டு இப்பிரச்சனையை சரிசெய்தார். ஆதி 13 :8,9 வசன்ங்கள் கூறுகிறது “என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதரர். இந்தத் தேசமெல்லாம் உனக்குமுன் இருக்கிறது அல்லவா? நீ என்னைவிட்டுப் பிரிந்துபோகலாம்; நீ இடதுபுறம் போனால், நான் வலதுபுறம் போகிறேன்; நீ வலதுபுறம் போனால், நான் இடதுபுறம் போகிறேன் என்றான்”.

இங்கு தேவன் ஆபிரகாம் மூலமாய் லோத்துவுக்கு, ஒரு தெரிந்தெடுப்பை கொடுக்கிறார். ஆபிரகாம் ஆரானை விட்டு புறப்பட்டபொழுது அவரோடு தேவன் செய்த உடன்படிக்கையை, அவருடைய வாக்குத்தத்ததை விசுவாசித்து ஆபிரகாமோடு புறப்பட்ட லோத்து, இப்பொழுது தனக்கு தேவன் கொடுத்த ஆசிர்வாதங்களையும், ஐசுவரியங்களையும் காப்பாற்றிக்கொள்ள தேவனுடைய வழியை விட்டு விலகி செல்ல முடிவெடுத்தார்.

லோத்து ஒரு நிமிடம் சிந்தித்திருப்பார் என்றால், தான் ஏன் தன் சுயதேசத்தை விட்டு வந்தோம், தனக்கு இருக்கும் ஐசுவரியங்கள் யாரால் உண்டாயிற்று, ஆபிரகாமோடு இருக்கும் பொழுது தனக்கும், தனக்கு சொந்தமான யாவற்றிக்கும் இருக்கும் பாதுகாப்பு, எல்லாவாற்றிக்கும் மேலாக ஆபிரகாமோடு தேவனுடைய வழியில் சென்று வாக்குத்தத்த தேசத்தை சுதந்தரித்தல், போன்ற இவை ஒன்றையும் லோத்து சிந்திக்கவில்லை.

அவர் கண் முன் இருந்ததெல்லாம் அவருடைய ஐசுவரியமும், அதை எப்படி தான் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணமுமே.

இதனால் “அப்பொழுது லோத்து தன் கண்களை ஏறெடுத்துப்பார்த்து: யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக்கண்டான். கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் அழிக்கும்முன்னே, சோவாருக்குப் போம் வழிமட்டும் அது கர்த்தருடைய தோட்டத்தைப்போலவும் எகிப்து தேசத்தைப்போலவும் இருந்தது. அப்பொழுது லோத்து யோர்தானுக்கு அருகான சமபூமி முழுவதையும் தெரிந்துகொண்டு, கிழக்கே பிரயாணப்பட்டுப்போனான்; இப்படி அவர்கள் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்தார்கள்” (ஆதி 13:10,11).

இங்கு நாம் காண்பது முழுக்க முழுக்க லோத்துவினுடைய தெரிந்தெடுப்பு. அவன் தன் கண்ணுக்கு எது சிறந்ததாகப்பட்டதோ அதை தெரிந்தெடுத்தான்.

இதுவரை ஆவிக்குரிய கண்களோடு தேவ தரிசனத்தை நோக்கி ஆபிரகாமோடு நடந்த லோத்து, இப்பொழுது மாம்ச கண்களோடு தன்னுடைய சுய இச்சையை நோக்கி நடந்தான். அது அவனை தேவனோடும், தேவ பிள்ளைகளோடும் இருந்த ஐக்கியத்தை விட்டு பிரித்தது.

**இங்கு, ஒருவேளை மேலோட்டமாக பார்க்கும் பொழுது, லோத்து சிறந்ததை தெரிந்து கொண்டு சோதோம் கொமோராவில் தங்கினதை** (settle **ஆனதை**) **போல தோன்றலாம். இனி அவன் ஆபிரகாமை போல அலைந்து திரிய தேவையில்லை. தேவ தரிசனத்தையும், ஆசிர்வாதங்களையும் பெற்ற பலரும் லோத்தை போலவே தங்களுடைய வாழ்க்கையில் ஒரு நிலையை அடைய** (settle **ஆக**) **முயற்சிக்கிறார்களே தவிர தேவனோடு தொடர்ந்து நடக்க விருப்பமில்லாமல் இருக்கிறார்கள்.**

**ஆனால், மறுமுனையில் ஆபிரகாம் தொடர்ந்து தேவ தரிசனத்தில், கர்த்தருடைய வழிகளில் நடந்து கொண்டிருக்கிறார். இங்கு ஆபிரகாம் மூலமாய் நாம் கற்றுக் கொள்ளும் பாடம், முதலாவது தனது சகோதரனோடு தேவையில்லாத பிரச்சனையை தவிர்க்க முற்பட்டார். நாம் சகோதரர், நமக்குள் வாக்குவாதம் வேண்டாம்** (**ஆதி** 13:8) **என்றார். இரண்டாவதாக தெரிந்தெடுக்கும் உரிமையையும் லோத்துவுக்கே கொடுத்தார்** (**ஆதி** 13:9).

**இங்கு அவர் விட்டுக்கொடுத்து போவதை நாம் காணலாம், ஆனால் உண்மையில் அவர் தேவ தரிசனத்தோடு நடந்தார். ஆதி** 13:14-17 **வசனங்கள் கூறுகிறது** "லோத்து ஆபிராமைவிட்டுப் பிரிந்தபின்பு, கர்த்தர் ஆபிராமை நோக்கி: உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப்பார். நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து, உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன்; ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால், உன் சந்ததியும் எண்ணப்படும். நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ, அம்மட்டும் நடந்து திரி; உனக்கு அதைத் தருவேன் என்றார்".

இங்கு ஆபிரகாம் கர்த்தருடைய வழியில் தன்னை நிலைநிறுத்தி கொண்டபொழுது, தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை மறுபடியும்

ஆபிரகாமுக்கு உறுதிப்படுத்தினார். ஆபிரகாம் லோத்தை போல கண்ணால் கண்டதை தரிசித்து நடவாமல், தேவனை விசுவாசித்து நடந்தார்.

தேவன் தனக்கு வாக்குபண்ணின தேசத்தையும், சந்ததியையும் தன்னுடைய மாம்ச கண்களால் காணாதிருந்தும், விசுவாசக் கண்களால் அவற்றை கண்டு தேவ பாதையில் தொடர்ந்து முன்னேறிச் சென்றார். தேவனும் தம்முடைய வாக்குத்தத்தில் உண்மையுள்ளவராய், ஆபிரகாமுக்கு தாம் வாக்குத்தத்தம் பண்ணின அனைத்தையும் நிறைவேற்றினார். அது மாத்திரமல்ல ஆபிரகாம் தேவன் செயல்படும் நேரத்திற்காக பொறுமையுடன் காத்திருந்தார். ஆனால் லோத்தோ "யோர்தானுக்கு அருகான சமபூமியிலுள்ள பட்டணங்களில் வாசம்பண்ணி, சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டான். சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாய் இருந்தார்கள்" (ஆதி 13:12,13).

இங்கு வேதம் மிக தெளிவாகவும், அழகாகவும் கூறுகிறது, சோதோமின் ஜனங்கள் கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளாய் இருந்தார்கள் என்று. லோத்துவுக்கு வெளிப்படையாய் சோதோமின் நிலையை ஆண்டவர் காண்பித்திருந்தும், தன்னுடைய சுயசித்தத்திற்கு தன்னை ஒப்புக்கொடுத்து, தன்னுடைய ஆஸ்திக்காகவும், தன் கண்கண்ட நல்ல நிலங்களுக்காகவும், தேவனுக்கு விரோதமானவர்கள் என்று தெரிந்திருந்தும் அவர்களோடு ஐக்கியம் கொள்ள லோத்து தயங்கவில்லை. தேவ தாசனாகிய ஆபிரகாமோடு ஐக்கியமாய் இருந்து சகலவற்றையும் பெற்ற லோத்து, இப்பொழுது அனைத்து ஆசிர்வாதங்களையும் பொல்லாதவர்கள் முன் சென்று வைத்து, அவர்களோடு ஐக்கியப்பட்டான்.

தன்னுடைய மந்தை மேய்ப்பர் மூலமாய் உண்டான ஒரு சிறு பிரச்சனைக்காக ஆபிரகாமை விட்டு பிரிந்த லோத்து, அதே செல்வத்தோடு அன்னிய இராஜாக்களின் மூலமாக சிறைபிடிக்கப்பட்டான். ஆதி 14:12 கூறுகிறது "ஆபிராமின் சகோதரனுடைய குமாரனாகிய லோத்து சோதோமிலே குடியிருந்தபடியால், அவனையும், அவன் பொருள்களையும் கொண்டுபோய்விட்டார்கள்". இங்கு அவன் சிறைபிடிக்கப்பட காரணம் சோதோமிலே அவன் குடியிருந்ததே ஆகும். தேவ தாசனாகிய ஆபிரகாமோடு, சமாதானமாய் தங்கியிருந்த லோத்து, சிறு சச்சரவை பொறுத்துக் கொள்ள மனதில்லாமல், அவன் ஐக்கியத்தை விட்டு பிரிந்து, இப்பொழுது

சகலவற்றையும் இழந்து நிற்கிறான். இங்கு நாம் கற்றுக்கொள்ளும் பாடம் தேவனோடு அவர் வழிகளில் நடக்கும் பொழுது பாதை குறுகளாய் (கடினமாய்) இருந்தாலும் அதுவே நம்மை ஜீவ வழிக்கு கொண்டு செல்லும், ஆனால் கேட்டுக்கு போகிற வாசல் வழி விரிவாயும், விசாலமாயும் தோன்றும், அதன் முடிவோ மரணம் (இழந்து போகுதல்) (மத் 7:13,14). இங்கு நாம் கவனிக்க வேண்டிய மற்றொரு காரியம் தேவனோ, ஆபிரகாமோ லோத்தை சோதோமிலே கூடாரம் போட தடுக்கவில்லை. ஏனெனில் பரம ஈவை (தேவ ஐக்கியத்தை) லோத்து ருசிப்பார்த்திருந்தும், அவன் மறுதலித்து போனபடியால் அவனை தேவன் தடுக்கவில்லை (எபி 6:4-6). இப்படிப்பட்ட காரியங்களை பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலின் இராஜாவாகிய சவுலின் வாழ்க்கையிலும், புதிய ஏற்பாட்டில் யூதாஸ் காரியோத்தின் வாழ்விலும் காணலாம். அவர்கள் செய்ய நினைத்ததையும் தேவன் தடுக்கவில்லை.

ஆனால் இங்கு லோத்துவுக்கு மறுபடியும் ஒரு வாய்ப்பை தேவன் வழங்கினார். ஆதி 14:13-16 வசனங்களில் "தப்பியோடின ஒருவன் எபிரெயனாகிய ஆபிராமிடத்தில் வந்து அதை அறிவித்தான்; ஆபிராம் தன்னோடே உடன்படிக்கை செய்திருந்த மனிதராகிய எஸ்கோலுக்கும் ஆநேருக்கும் சகோதரனாகிய மம்ரே என்னும் எமோரியனுடைய சமபூமியிலே அப்பொழுது குடியிருந்தான். தன் சகோதரன் சிறையாகக் கொண்டுபோகப்பட்டதை ஆபிராம் கேள்விப்பட்டபோது, அவன் தன் வீட்டிலே பிறந்த கைபடிந்தவர்களாகிய முந்நூற்றுப் பதினெட்டு ஆட்களுக்கும் ஆயுதம் தரிப்பித்து, தாண் என்னும் ஊர்மட்டும் அவர்களைத் தொடர்ந்து, இராக்காலத்திலே அவனும் அவன் வேலைக்காரரும் பிரிந்து, பவிஞ்சுகளாய் அவர்கள்மேல் விழுந்து, அவர்களை முறியடித்து, தமஸ்குவுக்கு இடதுபுறமான ஓபாமட்டும் துரத்தி, சகல பொருள்களையும் திருப்பிக்கொண்டுவந்தான்; தன் சகோதரனாகிய லோத்தையும், அவனுடைய பொருள்களையும், ஸ்திரீகளையும், ஜனங்களையும் திருப்பிக்கொண்டுவந்தான்".

இங்கு நாம் கற்றுக்கொள்ளும் பாடம், ஆபிரகாம் லோத்து சிறை பிடிக்க பட்டதை கேள்விப்பட்டபொழுது சற்றும் தாமதிக்காமல், லோத்து தனக்கு செய்த எதையும் யோசிக்காமல், அவனையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக, தன்னுடைய ஜனங்களையும் பொருள்களையும் (ஆயுதங்கள்) அர்பணிக்க

தயங்காதிருந்தான். தீமைக்கு நன்மை செய்யும் எண்ணமும், தனக்குரியதை இழந்தாவது அவனை மீட்க வேண்டும் என்ற எண்ணமும், பாவிகளாய் தேவனுக்கு துரோகிகளாய், அவரை விட்டு பின்வாங்கி போன நம்மையும், நாம் வாழும் இந்த பூமிக்கு நம்மை போல வந்து தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்து, நம்மை மிட்டெடுத்த கிறிஸ்துவின் செயலுக்கு ஒர் நிழலாட்டமாய் இருக்கிறது. அதுமாத்திரமல்ல ஆபிரகாம் லோத்தை மட்டும் காப்பாற்றவில்லை, சோதோம் நாட்டையும் காப்பாற்றினான்.

இதனால் “உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்து, அவனை ஆசீர்வதித்து: வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிராமுக்கு உண்டாவதாக. உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னான். இவனுக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்” (ஆதி 14:18-20). இந்த மெல்கிசேதேக்கை பற்றி எபி 7:3 கூறுகிறது “இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன்; இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான்”. இங்கு ஆபிரகாமுடைய மனநிலையும், அவனது செயலும் மறுபடியும் தேவனால் மெச்சப்பட்டு, மேற்கண்ட வசனத்தின்படி கிறிஸ்துவுக்கு நிழலாட்டமாய் இருக்கும் மெல்கிசேதேக்கு மூலமாய் தம்முடைய ஆசிர்வாதத்தை வழங்கினார்.

அதுமாத்திரமல்ல “சோதோமின் ராஜா ஆபிராமை நோக்கி: ஜனங்களை எனக்குத் தாரும், பொருள்களை நீர் எடுத்துக்கொள்ளும் என்றான். அதற்கு, ஆபிராம் சோதோமின் ராஜாவைப் பார்த்து: ஆபிராமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீர் சொல்லாதபடிக்கு நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும், உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன் என்று, வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன். வாலிபர் சாப்பிட்டதுபோக, என்னுடனே வந்த ஆநேர், எஸ்கோல், மம்ரே என்னும் புருஷருடைய பங்குமாத்திரமே வரவேண்டும்; இவர்கள் தங்கள் பங்கை எடுத்துக்கொள்ளட்டும் என்றான்” (ஆதி 14:21-24).

**இங்கு நாம் கற்றுக்கொள்ளும் பாடம், எந்த இடத்திற்காக, வளத்திற்காக சோதோமை நோக்கி லோத்து சென்றானோ, அதே, சோதோமின் இராஜா ஆபிரகாமுக்கு சகலத்தையும் கொடுக்க முன்வருகிறான். ஆனால், ஆபிரகாமோ இந்த சோதோம் மட்டுமல்ல வானத்தையும் பூமியையும் உடையவராகிய தேவன் தன் வாழ்க்கையில் எதை தனக்கு தர விரும்புகிறாரோ அதை தவிர வேறு எதையும் பெற்றுக்கொள்ள விரும்பவில்லை. தனக்கு ஒரு ஆசிர்வாதம் கிடைக்க வேண்டுமென்றால் அது தேவனால், தேவனுடைய வேளையிலேயே தர படவேண்டும் என்றும், தன்னுடைய சுய பெலனாலோ, மற்ற மனிதராலோ தனக்கு எதுவும் தேவையில்லை என்பதையும் அறிக்கையிட்டார்.**

**இதனால்** “இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, கர்த்தருடைய வார்த்தை ஆபிராமுக்குத் தரிசனத்திலே உண்டாகி, அவர்: ஆபிராமே, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார்” (ஆதி 15:1).

**ஆனால் இவ்வளவு காரியங்கள் நடந்தபின்பும், சோதோம் மக்களும் தங்கள் பாவத்தில் இருந்தது மனந்திரும்பவில்லை, லோத்துவும் அவ்விடத்தை விட்டு வெளியே வரவில்லை. லோத்து ஆபிரகாமோடே கூட இருக்க கேட்டு இருந்தால், நிச்சயமாக ஆபிரகாம் லோத்தை சேர்த்து கொண்டிருப்பார். ஆனால் தேவன் மூலமாய் அவருக்கு இப்படி ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்ட பொழுதும், அவர் அதை அசட்டை செய்தார். முடிவு, சோதோமையும் அதன் குடிகளையும் அழித்துதான் லோத்தை மீட்டெடுக்க வேண்டி இருந்த்து.**

**இங்கு நாம் கற்றுக்கொள்ளும் பாடம், தேவன் நமக்கு மனந்திரும்ப வாய்ப்புக்களை கொடுக்கும் பொழுது, அதை பயன்படுத்தி கொள்ள தவறுவோமானால், அதன் முடிவு எண்ணிப்பார்க்க முடியாததாயிருக்கும்.**

**ஆதியாகமம்** 18 **ஆம் அதிகாரத்தில் ஆபிரகாமை சந்திக்க மூன்று புருஷர்கள் வந்தார்கள். இவர்களை ஆபிரகாம் தன் வீட்டிலே வரவேற்று, அவர்களுக்கு உணவளித்தான். ஆதி** 18:5 **கூறுகிறது** “நீங்கள் உங்கள் இருதயங்களைத் திடப்படுத்தக் கொஞ்சம் அப்பம் கொண்டுவருகிறேன்; அப்புறம் நீங்கள் உங்கள் வழியே போகலாம்; இதற்காகவே அடியேன் இடம்வரைக்கும் வந்தீர்கள் என்றான். அதற்கு அவர்கள்: நீ சொன்னபடி செய்

என்றார்கள்". இந்த மூன்று புருஷர்களும், இரு காரியங்களை பூமியில் நிறைவேற்ற வந்தனர். ஒன்று ஆபிரகாமிற்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்ததை உறுதிப்படுத்த, மற்றொன்று சோதோமை அழிக்க.

இம்மூவரில் ஒருவர் கர்த்தர் என்பதை ஆதி 18:9-15 வசனங்களில் காணலாம். இங்கு கர்த்தர் ஆபிரகாமிற்கு தரிசனமாகி இரு காரியங்களை அவனுக்கு வெளிப்படுத்தினார். ஒன்று "கர்த்தரால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை" (ஆதி 18:14) என்பதும், ஆதலால் சாராள் நிச்சயமாய் ஒரு குமாரனை பெறுவாள் என்பதையும். இங்கு கர்த்தர் ஆபிரகாமுடைய விசுவாசத்தை மாத்திரமல்ல, விசுவாசத்தில் தடுமாறி கொண்டிருந்த சாராளையும் பெலப்படுத்த தாமே தரிசனமாகி வாக்குத்தத்ததை உறுதிப்படுத்தினார்.

**ஆதி** 18:17-19 **வசனங்கள் கூறுகிறது** "அப்பொழுது கர்த்தர்: ஆபிரகாம் பெரிய பலத்த ஜாதியாவதினாலும், அவனுக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவதினாலும், நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ? கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார்".

மேற்கண்ட வசனங்கள் தேவனே ஆபிரகாமை குறித்து கொடுத்த சாட்சி. இது எவ்வளவு மேன்மையானது. ஆபிரகாம் தான் மாத்திரமல்ல, தன்னுடைய சந்ததியையும் தேவனுக்குள்ளாக நடத்துவான் என்று தேவனே சாட்சி பகர்கிறார். முக்காலங்களையும் அறிந்த, ஆளுகின்ற தேவன் ஆபிரகாமை குறித்து இப்படியாய் சாட்சி கொடுத்து, அதனால் தான் செய்ய போகிறதை (சோதோமின் அழிவு) ஆபிரகாமுக்கு மறைப்பேனோ? (ஆதி 18:18) என்கிறார்.

இங்கு நாம் கற்றுக்கொள்கிற பாடம், நாம் தேவனுக்கு முன்பாக உண்மையுள்ளவர்களாக, தேவ நீதியை பின்பற்றுகிறவர்களாக, உலக ஐசுவரியங்களையோ, சுய பெலனையோ சாராமல் தேவனையே சார்ந்து கொள்ளும் பொழுது, தேவனே நாம் இருக்கும் இடத்திற்கு நம்மை தேடி வருகிறார், தன்னுடைய வாக்குத்தத்தங்களை நமக்கு உறுதிப்படுத்துகிறார், தான் செய்ய போகும் காரியங்களை நமக்கு அறிவிக்கிறார்.

சோதோமை ஆண்டவர் அழிக்க போகிறார் என்பதை அறிந்த ஆபிரகாம், தன்னுடைய சகோதரன் லோத்துவிற்காக மாத்திரமல்ல, அங்குள்ள கொஞ்ச நீதிமான்கள் நிமித்தம்மாவது அதை அழிக்காதபடி, தேவனிடத்தில் விண்ணப்பித்தான்.

ஆனால் ஆபிரகாம் கேட்டது போல சோதோமில் பத்து நீதிமான்கள் கூட இல்லை. ஆகிலும் ஆபிரகாமின் வேண்டுதலின்படி, லோத்தை தேவன் சோதோமின் அழிவில் இருந்து காப்பாற்றினார். இங்கு நாம் கற்றுக்கொள்ளுகிற பாடம், பாவம் நிறைந்து, அழிவுக்கு நேராய் வைக்கப்பட்டுள்ள இந்த உலகத்தில் வாழும் மக்கள் ஒவ்வொருவரும் இரட்சிக்கப்படும்படியாய் ஜெபிக்க வேண்டியது நம்முடைய கடமை. அப்பொழுது, தேவன் தம்முடைய நீதியின்படியும், நம்முடைய விண்ணப்பத்தின் படியும் காரியங்களை நிறைவேற்றுவார்.

ஆதி 19:1-3 வசனங்கள் கூறுகிறது "அந்த இரண்டு தூதரும் சாயங்காலத்திலே சோதோமுக்கு வந்தார்கள்; லோத்து சோதோமின் வாசலிலே உட்கார்ந்திருந்தான். அவர்களைக் கண்டு, லோத்து எழுந்து எதிர்கொண்டு தரைமட்டும் குனிந்து: ஆண்டவன்மார்களே, அடியேனுடைய வீட்டு முகமாய் நீங்கள் திரும்பி, உங்கள் கால்களைக் கழுவி, இராத்தங்கி, காலையில் எழுந்து பிரயாணப்பட்டுப் போகலாம் என்றான். அதற்கு அவர்கள்: அப்படியல்ல, வீதியிலே இராத்தங்குவோம் என்றார்கள். அவன் அவர்களை மிகவும் வருந்திக் கேட்டுக்கொண்டான்; அப்பொழுது அவனிடத்திற்குத் திரும்பி, அவன் வீட்டிலே பிரவேசித்தார்கள். அவன் புளிப்பில்லா அப்பங்களைச் சுட்டு, அவர்களுக்கு விருந்துபண்ணினான், அவர்கள் புசித்தார்கள்".

இங்கு நாம் கவனிக்க வேண்டியது, கர்த்தர் லோத்தை காண வரவில்லை, இரண்டு தூதர்கள் மட்டுமே வந்தார்கள். வந்த அவர்களை, லோத்து வரவேற்றும் அவனோடு தங்க அவர்கள் விரும்பவில்லை. பின்பு வருந்தி அழைத்தபொழுது சென்றார்கள். இங்கு நாம் கற்றுக் கொள்ளும் பாடம் தேவனோடு எப்பொழுதும் நெருங்கி வாழும் ஆபிரகாமோடு தேவன் உறவாட விருப்பமுள்ளவராய் இருக்கிறார்.

ஆனால் அனலுமின்றி, குளிருமின்றி வாழும் வாழ்க்கையை உடைய லோத்தை போன்றவர்களின் வாழ்வில் தேவன் இடைப்பட்டாலும், தேவனோடு ஒரு ஆழமான உறவு இப்படிப்பட்டவர்களுக்கு கிடைக்காமற் போகிறது.

இவர்கள் தேவ கிருபையையும், தயவையும் தங்கள் வாழ்வில் பெற்றிருந்தாலும், தேவ பிரசன்னத்தையும், தேவ ஆளுகையையும், தேவ வழிநடத்துதல்களையும் தங்கள் வாழ்வில் உணராதவர்கள். ஆனால் ஆபிரகாம் போன்றோர் தேவனை நோக்கி கூப்பிட்டபொழுது, நீ சொன்னபடியே செய் (ஆதி 18:5) என்று மறு உத்தரவு வந்தது.

தொடர்ந்து ஆதி 19ஆம் அதிகாரத்தில், நாம் பார்க்கும் பொழுது சோதோம் மக்களின் பொல்லாப்பையும், லோத்துவின் செயல்களையும் நாம் காணலாம். லோத்து நீதிமானாய் வாழ நினைத்தாலும், அவர் தன்னுடைய சொந்த அறிவையும், பெலனையுமே சார்ந்திருந்தார் (ஆதி 19:6,7).

இறுதியில் அவருடைய அறிவு, பெலன் எல்லாம் ஒன்றுமில்லாமல் போனது. ஆதி 19:9 கூறுகிறது “அதற்கு அவர்கள்: அப்பாலே போ; பரதேசியாய் வந்த இவனா நியாயம் பேசுகிறது? இப்பொழுது அவர்களுக்குச் செய்வதைப்பார்க்கிலும் உனக்கு அதிக பொல்லாப்புச் செய்வோம் என்று சொல்லி, லோத்து என்பவனை மிகவும் நெருக்கிக் கதவை உடைக்கக் கிட்டினார்கள்”.

**இங்கு நாம் காண்பது, எந்த சோதோமை கண்டு ஆசையாய், தன்னுடைய மிகுந்த ஐசுவரியங்களோடு வந்து தங்கினாரோ, அதே சோதோமின் மக்களால் “பரதேசியாய் வந்த இவனா நியாயம் பேசுகிறது” என்ற பதிலை பெற்றார். இதில் நாம் கற்றுக்கொள்கிற பாடம், நம்முடைய தாலந்துகளை, ஐசுவரியங்களை உலக மக்களோடு நாம் ஐக்கியப்பட்டு, அதை அவர்களோடு பகிர்ந்து கொள்ளும் பொழுது, அதை அநுபவிக்கிற வரைக்கும் நம்மோடு இருக்கும் மக்கள், பின்பு நன்றி கெட்டவர்களாய் நம்மையே பரதேசி என்று சொல்லும் நிலைக்கு நாம் தள்ளப்படுவோம். மேலும் அவனை மனதின் பிரகாரம் மாத்திரமட்டுமல்ல, சரீர பிரகாரமாகவும் காயப்படுத்த அவர்கள் நெருக்கினார்கள். இதுவே தேவ ஐக்கியத்தை, தேவ பிள்ளைகளின் ஐக்கியத்தை விட்டு உலகத்தோடு ஐக்கியப்படும் ஒருவனுடைய முடிவு.**

**ஆனால், லோத்துவின் வாழ்வில் இன்னும் தேவதயவும், இரக்கமும் வெளிப்பட்டது. ஆதி** 19:10 **கூறுகிறது** “அப்பொழுது அந்தப் புருஷர்கள் தங்கள் கைகளை வெளியே நீட்டி, லோத்தைத் தங்கள் அண்டைக்கு வீட்டுக்குள் இழுத்துக்கொண்டு, கதவைப் பூட்டி”, மேலும் ஆதி 19:15,16 வசனங்களில்

“கிழக்கு வெளுக்கும்போது அந்தத் தூதர் லோத்தை நோக்கி: பட்டணத்திற்கு வரும் தண்டனையில் நீ அழியாதபடிக்கு எழுந்து, உன் மனைவியையும், இங்கே இருக்கிற உன் இரண்டு குமாரத்திகளையும் அழைத்துக்கொண்டுபோ என்று சொல்லி, அவனைத் துரிதப்படுத்தினார்கள். அவன் தாமதித்துக்கொண்டிருக்கும்போது, கர்த்தர் அவன்மேல் வைத்த இரக்கத்தினாலே, அந்தப் புருஷர் அவன் கையையும், அவன் மனைவியின் கையையும், அவன் இரண்டு குமாரத்திகளின் கையையும் பிடித்து, அவனைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய் விட்டார்கள்”. இங்கு எப்படியாய் தேவன் லோத்துவையும், அவன் குடும்பத்தையும் இரக்கமாய் காப்பாற்றுகிறார் என்பதை நாம் காணலாம்.

ஆனால் தேவன் இவ்வுளவாய் இரங்கியும், லோத்துவின் மனைவி கீழ்படியாமல் பின்னிட்டுப் பார்த்து, உப்புத்தூண் ஆனாள் (ஆதி 19:26), சோதோம் அழிக்கப்பட்டது.

ஆதி 19:27-29 வசனங்களில் “விடியற்காலத்தில் ஆபிரகாம் எழுந்து, தான் கர்த்தருக்கு முன்பாக நின்ற இடத்திற்குப் போய், சோதோம் கொமோரா பட்டணங்களின் திசையையும், சமபூமியாகிய தேசம் முழுவதையும் நோக்கிப் பார்த்தான்; அந்தப் பூமியின் புகை சூளையின் புகையைப்போல எழும்பிற்று. தேவன் அந்தச் சமபூமியின் பட்டணங்களை அழிக்கும்போது, தேவன் ஆபிரகாமை நினைத்து, லோத்து குடியிருந்த பட்டணங்களைத் தாம் கவிழ்த்துப்போடுகையில், லோத்தை அந்த அழிவின் நடுவிலிருந்து தப்பிப்போகும்படி அனுப்பிவிட்டார்”.

இங்கு வேதம் தெளிவாக கூறுகிறது, லோத்தின் மேல் பாராட்டப்பட்ட இரக்கம், தேவன் ஆபிரகாமை நினைத்தாலேயே. ஆபிரகாமுக்கு லோத்து தீங்கு செய்திருந்தும், லோத்து நன்றாய் இருக்க வேண்டும் என்பதே ஆபிரகாமின் எண்ணமாய் இருந்தது. இங்கு நாம் கற்றுக் கொள்கிற பாடம், இவ்வுலக மக்களின் மூலமாக, தேவ பிள்ளைகளாகிய நமக்கு எந்த நன்மையும் வரப்போவதில்லை, அவர்கள் தேவ பகைஞராய் தேவனுக்கும், நமக்கும் விரோதமான காரியங்களையே செய்கின்றனர். ஆகிலும் நாம் அவர்களுக்காக தேவனிடத்தில் வேண்டும் பொழுது, அவர்கள் மீதும் தேவ இரக்கம் பாராட்டப்படும். இது ஆபிரகாமின் வாழ்க்கையில் அவனிடத்தில் காணப்பட்ட

உயரிய பண்புகளில் ஒன்றாகும். நாமும் இப்படியாக காணப்படவே தேவன் விரும்புகிறார்.

மேலும், அந்நிய இராஜாக்கள் லோத்தை சிறைபிடித்து சென்ற பொழுது லோத்துவிற்காகவும், அதில் உள்ள நீதிமான்களுக்காகவும் ஜெபிக்க மாத்திரமே செய்தார். இங்கு நாம் கற்றுக் கொள்ளும் பாடம், தேவன் தம்முடைய நீதியை நிறைவேற்றும் பொழுது (சுனாமி போன்ற அழிவுகள், பஞ்சங்கள் போன்றவை), நாம் அமைதியாக ஜெபிக்க வேண்டுமே ஒழிய தேவனையும் மிஞ்சிய நீதிமான்களாய் செயல்படுதல் கூடாது. இங்கு தான் சென்று காப்பாற்றாமல் இருந்தாலும், தேவன் நிச்சயமாய் லோத்தை காபாற்றுவார் என்று ஆபிரகாம் விசுவாசித்தார்.

இவைகளுக்கெல்லாம், நேர் எதிர்மறையாக லோத்துவும், அவன் குடும்பத்தினரும் செயல்பட்டனர். அழிவில் இருந்து தேவன் அவர்களை தப்புவிக்க நினைத்தபொழுதும், அவர் தன் சொந்த அறிவையும், பெலனையுமே சார்ந்திருந்தார், தேவ வார்த்தைக்கு கீழ்படியாமல், அவருக்கே ஆலோசனை கூறினார் (ஆதி 19:19,20).

ஆனால், அப்பொழுதும் தேவன் அவருக்கு இரக்கம் பாராட்டி அவரை காப்பாற்றினார் (ஆதி 19:21,22). ஆனாலும் கீழ்படியாமையினாலே, அவர் மனைவி உப்புத்தூண் ஆனாள். இப்படிப்பட்ட காரியங்களை நாம் இப்பொழுதும் நம் காலத்திலும் காணலாம். தேவன் இரக்கமாய் எத்தனையோ வழிகளில் தம்மை இவ்வுலக மக்களுக்கு வெளிப்படுத்தி இருந்தும், இன்னும் மனிதர்கள் பணத்தையும், சுய பெலனையும் தங்களுடைய அறிவையுமே சார்ந்திருக்கிறார்களே தவிர தேவ சத்ததிற்கு செவி சாய்க்காமல் இருக்கிறார்கள். இவ்வளவு காரியங்கள் நடந்த பின்பாவது லோத்து ஆபிரகாமிடம் சென்றிருக்கலாம். ஆனால் அவனோ அப்படி செய்யவில்லை (ஆதி19:30).

ஆபிரகாம் தன் பிள்ளைகளுக்கு “கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன்” (ஆதி 18:19) என்று அவனை குறித்து கர்த்தர் சாட்சிக்கொடுத்தார். அதுபோலவே ஈசாக்கு, யாக்கோபு, யோச்சேப்பு, தாவீது என்ற அவன் சந்ததியார் தேவனுடைய வழியில் நடந்தார்கள்.

ஆனால் லோத்தோ தன் பிள்ளைகளுக்கு அப்படி கற்பிக்கவில்லை, அதன் விளைவு அவர்கள் சோதோமின் வழியை பின்பற்றி மோவாப், அம்மோன் என்னும் தேவனுக்கு பிரியமில்லாத சந்ததியை பிறப்பித்தார்கள் (ஆதி 19:31-38)..

இங்கு நாம் கற்றுக்கொள்ளும் பாடம் ஆபிரகாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களை நம்பி பொறுமையோடு நீதியாய் தேவனுடைய வழிகளில் நடந்தான். அவன் கடந்து சென்ற பாதைகள் குறுகலானதாய், வனாந்திரமானதாய் காணப்பட்டாலும் முடிவில் தேவன் அவனுக்கு தம்முடைய வாக்குத்தத்தையும், ஆசிர்வாதங்களையும் தான் கூறியபடியே வழங்கினார். அதனால் இந்நாள் வரைக்கும் அவனுடைய சந்ததியார் (இஸ்ரவேலர்) இப்பூமியில் ஒரு ஜாதியாய் (நாடாய்) வாழ்கின்றனர். மனுகுலத்தின் இரட்சிப்பும் அவன் சந்ததி மூலமாகவே உண்டாயிற்று.

ஆனால் லோத்தின் சந்ததியோ இடம் தெரியாமல் அழிந்து போயிற்று. அவன் சந்ததியார் தேவனுக்கு விரோதமாகவே வாழ்ந்தனர். II பேதுரு 2:7,8 வசனங்கள் கூறுகிறது "அக்கிரமக்காரருக்குள் வாசமாயிருக்கையில் அவர்களுடைய காமவிகார நடக்கையால் வருத்தப்பட்டு; நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக்கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க".

**இங்கு நாம் காண்கிறபடி தேவன் அவரை நீதிமான் என்றே நியாயந்தீர்க்கிறார், அவர் இரட்சிக்கப்பட்டார் என்றும் வசனம் கூறுகிறது. அது உண்மையே. ஆனால் அவரால் அவருடைய நீதியால் அவரை இரட்சித்துக்கொள்ள முடிந்ததே தவிர தன்னுடைய சந்ததியையோ, தன்னை சார்ந்திருந்தவர்களையோ அவரால் இரட்சிக்க முடியவில்லை.**

**ஆனால் ஆபிரகாமோ தனக்கும், தனக்கு பின்வரும் தன் சந்ததிக்கும், தன்னை சார்ந்திருந்தவர்களுக்கும் ஆசிர்வாதமாய் இருந்தார். தேவன், தன்னை ஆபிரகாமின் தேவன் (யாத் 3:6) என்று கூறினார். அவர் தேவனுடைய சிநேகிதன் (யாக் 2:23) எனப்பட்டார். நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்துவும் ஆபிரகாமின் சந்ததியிலேயே வந்தார்.**

**ஆதியாகமத்தில் லோத்தை பற்றி விஷேசமாக எதுவும் கூறப்படவில்லை. ஆனால் தேவன் லோத்தை மறக்கவில்லை. லோத்து வாழ்வில்**

**என்னென்ன தவறு செய்தாரோ, அதை அப்படியே தலைக்கீழாக தேவன் ரூத்தின் வாழ்க்கையில் மாற்றினார்.**

**மோவாப்பிய பெண்ணாகிய ரூத், ஆபிரகாமின் சந்ததியில் வந்தவனாகிய எலிமெலேக்கின் மகன், மக்லோனை மணந்தாள். ஆனால் அவனோ இறந்து போனான். எலிமெலேக்கின் மனைவியும், ரூத்தின் மாமியுமாகிய நகோமி மோவாப்பை விட்டு இஸ்ரவேல் தேசத்தில் உள்ள பெத்லகேமிற்கு திரும்பினாள். இங்கு ரூத் ஓர் சரியான முடிவை எடுத்தால். தான் தன் மாமியாராகிய நகோமியோடு பெத்லகேம் சென்றாள், தான் உணவிற்கு கூட கஷ்டப்பட வேண்டியிருக்கும், தன்னுடைய மாமியாரையும் தானே காப்பாற்ற வேண்டும், எல்லாவற்றிற்க்கும் மேலாக பெத்லகேம் ஓர் அந்நிய தேசம் என இவை எதைப் பற்றியும் அவள் கவலைப்படவில்லை.**

**அவள் இருதயத்தில் இருந்தத்தெல்லாம்** "நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப்போவதைக்குறித்து, என்னோடே பேசவேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; <u>உம்முடைய தேவன் என்னுடைய தேவன்.</u> நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம்பண்ணப்படுவேன்; மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், <u>கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்</u> என்றாள். அவள் தன்னோடேகூட வர <u>மனஉறுதியாயிருக்கிறதைக் கண்டு</u>, அப்புறம் அதைக்குறித்து அவளோடே ஒன்றும் பேசவில்லை" (ரூத் 1:16-18).

**இங்கு ரூத் நகோமியை மட்டும் பிடித்துக் கொள்ளவில்லை, கர்த்தரையும் பற்றிக்கொண்டாள். தேவ ஐக்கியத்தில் இருந்தும், ஆபிரகாமின் ஐக்கியத்தில் இருந்தும் பிரிந்து உலகப்பொருளுக்காக வாழ்ந்து, இறுதியில் தேவனுக்கு பிரியமில்லாத ஒரு சந்ததியை லோத்து ஏற்படுத்தினான்.**

**ஆனால், உலகமாகிய மோவாப்பை விட்டு, தான் துன்ப பட வேண்டிருக்கும் என தெரிந்திருந்தாலும், கர்த்தரையும், நகோமியையும் பற்றிக் கொண்ட ரூத், நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து தோன்றிய தாவீதின் சந்ததியில் அங்கமானாள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், தாவீதும் பெத்லகேமில் பிறக்க அவளும் ஒரு காரணமானாள்.**

**ரூத்தை பற்றி போவாஸ் கூறும் பொழுது** "உன் புருஷன் மரணமடைந்த பின்பு, நீ உன் மாமியாருக்காகச் செய்ததும், நீ உன் தகப்பனையும் உன் தாயையும், உன் ஜந்மதேசத்தையும் விட்டு, முன்னே நீ அறியாத ஜனங்களிடத்தில் வந்ததும் எல்லாம் எனக்கு விவரமாய்த் தெரிவிக்கப்பட்டது. உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என்றான்" (ரூத் 2:11,12).

**அவன் கூறியபடியே போவாஸ் ரூத்தை மணந்து தாவீதின் சந்ததியில் தானும் ஒரு அங்கமானான். லோத்து தன் வாழ்க்கையில் எதை எல்லாம் தவறாய் செய்தானோ, அவன் சந்ததியில் வந்த ரூத் அதை அப்படியே சரிப்படுத்தி மறுபடியும் தேவ சந்ததியில் தன்னை இணைத்துக் கொண்டாள். இதில் நாம் கற்றுக் கொள்ளும் பாடம் தேவன் நம்மை ஒருபோதும் மறப்பதில்லை. பாவிகளாய், தேவனுக்கு துரோகிகளாய் இருந்த நம் முன்னோர்களின் சந்ததியில் வந்த நம்மையும் தேவன் இரட்சித்திருப்பது, நாமும் தேவ சந்ததியில், தேவ குடும்பத்தில் பங்குள்ளவர்களாக மாற வேண்டும் என்பதற்கே.**

**இதுவரையில், நாம் பார்த்த காரியங்களின் சாராம்சம் என்னவென்றால், தேவனுக்கு பயந்து தேவ வழியில் வாழ்ந்த ஆபிரகாமின் வாழ்க்கையில் தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்களும், ஆசிர்வாதங்களும், அதே நேரத்தில் கர்த்தருடைய வழியை விட்டு விலகி போன லோத்தின் பரிதாப முடிவும், ரூத்தின் மூலமாக தேவன் மறுபடியும் லோத்தின் சந்ததியில் இடைப்பட்டு அவனை தேவ சந்ததியில் ஒர் அங்கமாக்கினதையும் கண்டோம்.**

**இவை யாவும் மனித வாழ்வில் தேவ ஆளுகையையும், அவருடைய இரக்கத்தையும், காலாகாலங்களாய் தேவன் தம்முடைய திட்டத்தை எவ்வாறு நேர்த்தியாய் மனிதர்களின் வாழ்க்கையில் செயல்படுத்தி வருகிறார் என்பதையும் நமக்கு அறிவிக்கின்றன.**

**தேவன் தாமே இந்த வார்த்தைகளை ஆசிர்வதித்து, அநேகருக்கு பிரயோஜனமாக்குவாராக ஆமென், அல்லேலூயா.**

# தேவனை சார்ந்திருத்தல்

## (73 ஆம் சங்கீதத்திலிருந்து)



இந்த தியானத்தை வாசிக்கும் முன்பு, தயவுசெய்து **73ஆம் சங்கீதத்தை** ஒருமுறையாவது தியானிக்கும்படியாய் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சங்கீதம் முழுவதும், இவ்வுலகில் வாழும் ஒரு தேவ பிள்ளையின் வாழ்க்கையும், உலக மக்களின் வாழ்க்கையும் ஒப்பிட்டு கூறப்பட்டுள்ளது. இச்சங்கீதம் ஆசாப்பின் சங்கீதம் என்று கூறப்பட்டுள்ளது. இங்கு ஆசாப்பின் பார்வையில், உலக மக்களின் வாழ்க்கை, ஒரு தேவ பிள்ளையின் வாழ்வை காட்டிலும் செழிப்பானதாயும், ஆசிர்வாதமானதாயும், பாதுகாப்பு நிறைந்ததாயும் காணப்படுகிறது. அதனால், அவர்களுடைய வாழ்க்கை பெருமையினாலும், தங்களை படைத்த இறைவனையே மட்டுபடுத்துவதாகவும் காணப்படுகிறது (சங் 73:3-12).

இன்று, இவ்வுலகில் வாழும் தேவ பிள்ளைகளாகிய நம்முடைய பார்வையும், உலக மக்களின் வாழ்க்கையை காணும்பொழுது இப்படியாகவே காணப்படுகிறது. உலகில் உள்ள எத்தனையோ கோடிக்கணக்கான மக்கள், தங்களை சிருஷ்டித்த சிருஷ்டிகரை குறித்து எந்த அறிவும் இல்லாமல், அதை அறிந்து கொள்ள விருப்பமும் இல்லாமல், உலகத்தின் காரியத்தின் பின்னே ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

எத்தனையோ மிகப்பெரிய வியாபாரிகளும், அரசியல்வாதிகளும், சினிமா நட்சத்திரங்களும், விளையாட்டு வீரர்களும், தங்கள் செல்வத்தையும், அதிகாரத்தையும், அழகையும், உடல் பெலத்தையும் நம்பி அவற்றை

பெருமையாய் எண்ணி, அதையே தங்கள் உலகம் (வாழ்க்கை) என்று கருதி ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

தேவனை பற்றியோ, சத்திய வழியை பற்றியோ எந்த எண்ணமும் இன்றி வாழ்ந்து கொண்டிருக்கும் இவர்கள் வாழ்க்கையை நாம் காண்கையில், அவர்கள் வாழ்க்கையில் எந்த இடையூறும் இன்றி, அவர்கள் எதற்காக ஓடுகிறார்களோ அது அவர்களுக்கு வாய்ப்பதையும், அதனிமித்தம் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் சுக ஜீவிகளாய் வாழ்ந்து மனதின் பிரகாரமாகவோ, சரீர பிரகாரமாகவோ எந்த உபத்திரவமும் இன்றி வாழ்வதையும் காண்கிறோம்.

இதனால் அவர்கள் தேவனை மட்டுபடுத்துவதுடன், தங்கள் செல்வத்தை, அதிகாரத்தை, புகழை தக்க வைத்துக்கொள்ள, மற்ற மனிதர்களுக்கு தீங்கிழைப்பதையும் நாம் காண்கிறோம். **"மேலும், கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக"** என்று II தீமோ 3:1 கூறுகிறது. அது **"எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும்"** இருப்பார்கள் என்றும் II தீமோ 3:2 கூறுகிறது.

அதே நேரத்தில் ஒரு தேவ பிள்ளையின் வாழ்வை குறித்து 73ஆம் சங்கீதத்தில் ஆசாப் கூறும்பொழுது **"நான் விருதாவாகவே என் இருதயத்தைச் சுத்தம்பண்ணி, குற்றமில்லாமையிலே என் கைகளைக் கழுவினேன். நாள்தோறும் நான் வாதிக்கப்பட்டும், காலைதோறும் தண்டிக்கப்பட்டும் இருக்கிறேன்"** என்கிறார் (சங் 73:13,14).

இங்கு ஆசாப் கூறுகிறபடி, இப்பொழுது நம் வாழ்க்கையிலும் காணப்படுகிறது. நாம் நீதியாய் வாழ்வதினாலும், சத்தியத்தை பின்பற்றுவதினாலும் நமக்கு இவ்வுலகத்திலிருந்தும், இவ்வுலக மக்களிடமிருந்தும் எந்த நன்னையும் கிடைப்பதில்லை. அதற்கு பதிலாக தேவையில்லாத பிரச்சனைகளும், வாழ தெரியாதவர்கள், பிழைக்க தெரியாதவர்கள் என்ற பட்டமே தேவ பிள்ளைக்கு கிடைக்கிறது.

இங்கு நாம் காண்கிறபடி, ஒருபக்கம் தன் சுய பெலத்தை, ஞானத்தை, அதிகாரத்தை, அழகை நம்பி, இவ்வுலக வாழ்க்கையை வாழும் மக்கள், மறுபக்கத்தில் தேவனை சார்ந்து வாழும் தேவ பிள்ளைகள். மேலோட்டமாக, இவ்வுலக நடைமுறையை பார்க்கும் பொழுது, தங்களையே சார்ந்துகொள்ளும் உலக மக்கள், தேவனை சார்ந்துகொள்ளும் தேவ பிள்ளையை விட உயர்ந்து, செழித்து இருப்பதை போல காணப்படலாம்.

ஆனால் அதே சங்கீதத்தில் **"இதை அறியும்படிக்கு யோசித்துப்பார்த்தேன்; நான் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்து, அவர்கள் முடிவைக் கவனித்து உணருமளவும், அது என் பார்வைக்கு விசனமாயிருந்தது.**

**நிச்சயமாகவே நீர் அவர்களைச் சறுக்கலான இடங்களில் நிறுத்தி, பாழான இடங்களில் விழப்பண்ணுகிறீர். அவர்கள் ஒரு நிமிஷத்தில் எவ்வளவு பாழாய்ப்போகிறார்கள்! பயங்கரங்களால் அழிந்து நிர்மூலமாகிறார்கள்" (சங் 73:16-19)** என்று ஆசாப் கூறுகிறார்.


இதிலிருந்து, தேவன் நீதியுள்ளவர் என்பதையும், துன்மார்க்கரின் வாழ்வை சடுதியில் முடிய பண்ணுகிறார் என்பதையும், அவர்கள் ஒரு நிமிஷத்தில் பாழாய் போவார்கள் என்பதையும் நாம் காணலாம். நாம் வாழுகிற இக்காலத்திலும் துன்மார்க்கமாய் ஜீவித்த மக்களின் பரிதாப முடிவை நாம் கண் கூடாக காண்கிறோம். அவர்களுடைய செல்வமோ, பதவியோ, பட்டமோ, அழகோ, உடல் பலமோ அவர்களுக்கு உதவாமற் போய் அழிந்துபோவதை நாம் கண்டுகொண்டிருக்கிறோம்.

அதே நேரத்தில், சில துன்மார்க்கரை அவர்கள் மரணத்திற்கு பிறகு நியாயந்தீர்க்க அவர்களை தேவன் விட்டுவைத்திருக்கிறார். இதுவே லாசரு-ஐசுவரியவான் வாழ்க்கையில் நடந்தது. எனவே, தேவனையே சார்ந்திருக்கும் ஒரு தேவ பிள்ளை எந்நிலையில் இருந்தாலும், அவனை இவ்வுலகத்திலும், மறு உலகத்திலும் பாதுகாத்து வழிநடத்த தேவன் வல்லவராயிருக்கிறார். அதனால்தான் சங்கீதம் 73:23,24 வசனங்களில் **"ஆனாலும் நான் எப்பொழுதும் உம்மோடிருக்கிறேன்; என் வலதுகையைப் பிடித்துத் தாங்குகிறீர். உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்"** என்று ஆசாப் கூறுகிறார்.

மேலும் **"இதோ, உம்மைவிட்டுத் தூரமாய்ப்போகிறவர்கள் நாசமடைவார்கள்; உம்மைவிட்டுச் சோரம்போகிற அனைவரையும் சங்கரிப்பீர். எனக்கோ, தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம்"** என்றும் சங்கீதம் 73:27,28 வசனங்களில் கூறுகிறார். எனவே, ஒரு தேவ பிள்ளை இவ்வுலகத்திலும், மறு உலகத்திலும், தேவனை அண்டி வாழ்வதே (சார்ந்து வாழ்வதே) நலமான ஒன்றாகும். மேலும், ஒரு தேவ பிள்ளை அனுபவிக்கும் "இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல" **(ரோ 8:18)** என்று வேதம் கூறுகிறது. மேலும் **"உத்தமனுக்குக் கர்த்தர் துணை" (II நாளா 19:11)** என்றும், **" நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு; அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம்" (சங் 37:37)** என்றும் வேதம் கூறுகிறது.

மேலும் **"உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்" (ஏசா 26:3)** என்றும் வேதம் கூறுகிறது. எனவே இவ்வுலக மக்களின் போக்கை பாராமல், தேவனையே நோக்கிப் பார்த்து, அவரையே சார்ந்திருந்து, நம் வாழ்க்கையை நடத்துவோமானால், இம்மைக்கும், மறுமைக்கும் வேண்டிய சகலவற்றையும் தேவன் நமக்கு தந்தருளுவார். அவருக்கே மகிமையுண்டாவதாக. ஆமென்.

# கிறிஸ்துவைப்போல




இவ்வுலகில் வாழும் நம் ஒவ்வொருவரின் நோக்கமும் நாம் கிறிஸ்துவைப்போல மாற வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாய், திட்டமாய் இருக்கிறது. நம் ஆதி பெற்றோராகிய ஆதாமும், ஏவாளும் இழந்து போன தேவ சாயலை, தேவ மகிமையை, நாம் மறுபடியும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே தேவனுடைய அநாதி திட்டமாய் இருக்கிறது. நாம் எவ்வளவுதான் பரிசுத்தமாய் வாழ முயற்சித்தாலும், நீதியாய் வாழ முயற்சித்தாலும் நாம் கிறிஸ்துவைப்போல மாற, வாழ முயற்சிக்காவிடில் ஒரு பலனும் இல்லை. ஏனெனில் நம்மில் உள்ள அநேகர் தங்கள் சுய நீதியை, பரிசுத்தத்தை சார்ந்திருந்தும் அதனால் அவர்களுக்கு தேவனிடத்தில் ஒரு பிரயோஜனமும் இல்லை.

பழைய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்த பரிசுத்தவான்களிடம் தேவ சுபாவங்கள், தேவ மகிமைகள் வெளிப்பட்டது. ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்தார், மோசேயின் முகம் தேவ மகிமையால் பிரகாசித்தது. ஆவியானவர் அவர்களின் மூலமாய் சில குறிப்பிட்ட கிரியைகளை நடப்பிக்க அவர்கள் மேல் வந்தார். ஆனால் புதிய ஏற்பாட்டில் ஆவியானவர் நமக்கு கொடுக்கப்பட்டிருப்பதோ ஏதோ ஒரு காரியத்தை நடப்பிக்க அல்ல, நம்மில் கிறிஸ்துவை உருவாக்கி, அவரைப்போல் நம்மை மாற்றி, முடிவில் அவர் வரும்போது, மகிமை அடைந்த சரீரத்தை நாம் பெற்றுக்கொள்ளும்படியாய் நம்மை ஆயத்தப்படுத்தவே.

கிறிஸ்துவைப்போல மாறுவது என்றால், கிறிஸ்துவின் சிந்தை, கிறிஸ்துவின் சுபாவங்கள் நம்மில் வெளிப்பட வேண்டும். பவுல் அப்போஸ்தலன் இதை சொல்லும்பொழுது, **“ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்துபோகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது” (II கொ 4:16)**. மேலும் அவரால் **“நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்” (I கொ 11:1)** என்று தைரியமாய் கூற முடிந்தது.

ஆனால் ஒரு பக்கம் ஆவியானவர் நாம் கிறிஸ்துவில் வளர உந்திக்கொண்டிருக்கும் போது, அதற்கு விரோதமாய் நமது மாம்சமும், மனதும் போராடுகிறது. ஏவாள் கனியை கண்டபோது அது **“புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு” (ஆதி 3:6)** தன்னுடைய மாம்சமும், மனமும் விரும்பினதை செய்து, தேவ மகிமையை இழந்துபோனாள். இன்று நாமும் அதேபோல் மாம்சத்தோடும், மனதோடும் போராடிகொண்டுக்கிறோம். இதை பவுல் கூறும்பொழுது **“அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்; நன்மைசெய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மைசெய்வதோ என்னிடத்திலில்லை” (ரோ 7:18)** என்கிறார்.

ஆனால் நாம் கிறிஸ்துவுக்கும், ஆவியானவருக்கும் நம்மை ஒப்புக்கொடுக்கும் பொழுது, கிறிஸ்துவே நம்மில் இருக்கும் மாம்சத்தின் கிரியைகளை அகற்றிவிடுவார். ஏனெனில் வேதம் கூறுகிறது **“கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்” (கலா 5:24)** என்று. நம்மில் இருக்கும் மாம்ச கிரியைகளை அழிப்பது மாத்திரமல்ல, நாம் அவரை போல மாற, நம்மை அவரோடு இணைத்துக்கொள்கிறார். **யோவான் 15:5** இல் ஆண்டவர் கூறுகிறார் **“நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது”** என்றார். இதுவே நாம் முழுவதும் தேவனால்

நடத்தப்படுகிற அனுபவமாகும். ஏனெனில் அவரால் அன்றி நம்மால் ஒன்றும் செய்யக்கூடாது. மேலும் பவுல் அப்போஸ்தலன் **ரோமர் 11:17** வசனத்தில் நாம் ஒலிவமரமாகிய கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டு, அவருடைய வேருக்கும் சாரத்துக்கும் உடன்பங்காளியாயிருக்கிறோம் என்று கூறுகிறார்.

அப்போஸ்தலர் நடபடிகளில் ஸ்தேவானைப் பற்றி பார்க்கிறோம். **அப்போஸ்தலர் 6:5** கூறுகிறது அவர் விசுவாசத்தாலும் பரிசுத்த ஆவியானவராலும் நிறைந்திருந்தார் என்று. மேலும் **அப்போஸ்தலர் 6:8** கூறுகிறது **"ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான்"** என்று. மேலும் **அப்போஸ்தலர் 6:10** கூறுகிறது **"அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்துநிற்க அவர்களால் கூடாமற்போயிற்று"** என்று. இதன்மூலம் அவர் முழுவதும் தேவ ஆவியால் நிறைந்து, தேவ வல்லமையை, சித்தத்தை தன் வாழ்வில் வெளிப்படுத்துகிறவராய் இருந்தார் என்று நாம் காண்கிறோம்.

இதனால் அவர் முகம் தேவதூதன் முகம் போல் பிரகாசமாய் இருந்தது **(அப் 6:15)**. ஆதலால் அவர் கைது செய்யப்பட்டு ஆலோசனை சங்கத்தாருக்கு முன்பாக நிறுத்தப்பட்டபொழுதும் தைரியமாய் கிறிஸ்துவை பிரசங்கித்தார். **அப்போஸ்தலர் 7:54-60** வசனங்கள் கூறுகிறது **"இவைகளை அவர்கள் கேட்டபொழுது, மூர்க்கமடைந்து, அவனைப் பார்த்துப் பல்லைக் கடித்தார்கள். அவன் பரிசுத்தஆவியினாலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்துபார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு: அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான். அப்பொழுது அவர்கள் உரத்தசத்தமாய்க் கூக்குரலிட்டுத் தங்கள் காதுகளை அடைத்துக்கொண்டு, ஒருமனப்பட்டு அவன்மேல் பாய்ந்து, அவனை நகரத்துக்குப் புறம்பே தள்ளி, அவனைக் கல்லெறிந்தார்கள். சாட்சிக்காரர் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி, சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபனுடைய பாதத்தினருகே வைத்தார்கள். அப்பொழுது: கர்த்தராகிய**

**இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்று ஸ்தேவான் தொழுதுகொள்ளுகையில், அவனைக் கல்லெறிந்தார்கள். அவனோ, முழங்காற்படியிட்டு: ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்”.**

இங்கு நாம் காண்கிறபடி ஸ்தேவானின் செயல், பேச்சு எல்லாம் தேவ ஆவியால் நடத்தப்படுகிறதையும், ஆனால் மற்ற மனிதர்களின் செயலோ அவர்கள் மாம்சமும், மனதும் என்ன சொல்கிறதோ அதற்கு ஏற்றார் போலவும் காணப்படுகிறது. தேவ ஆவியினால் நடத்தப்பட்ட ஸ்தேவனால் மகிமையான காரியங்களை காணமுடிந்தது. கிறிஸ்துவை போலவே ஜெபிக்கவும், தன் ஆவியை தேவனிடத்தில் ஒப்புக்கொடுக்கவும் முடிந்தது. அவனை வரவேற்க கிறிஸ்து ஆயத்தமாய் இருப்பதை நாம் காணலாம். நாமும் ஸ்தேவானை போல கிறிஸ்துவின் சிந்தை உடையவர்களாய், பரிசுத்த ஆவியினால் நிறைந்து ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவில் வளருவோமானால், நமக்கு எதிராக போரடுகிற எந்த மாம்ச வல்லமையையும் நம்மால் மேற்க்கொள்ளமுடியும், ஒன்றும் நம்மை சேதப்படுத்த முடியாது.

அதுமாத்திரமல்ல ஸ்தேவானின் முகம் தேவதூதன் முகம் போலிருந்தது போல, அவனை வரவேற்க கிறிஸ்து ஆயத்தமாயிருந்தது போல, நம்முடைய சரீரமும் மகிமையடைந்த சரீரமாய் மாற்றப்பட்டு, மத்திய ஆகாயத்தில் கிறிஸ்து நமக்காய் எதிர்கொண்டு வருவார், நாமும் அவரிடத்தில் சேர்க்கப்படுவோம். கிறிஸ்துவும் இதற்காகவே பிதாவிடம் வேண்டினார். **யோவான் 17:21** கூறுகிறது **“நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்”** என்றார். மேலும் **ரோமர் 12:5** கூறுகிறது நாம் **“கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்”** என்று.

மேலும் **I கொ 3:16** கூறுகிறது **“ நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?”** என்று. மேலும்

பவுல் **எபேசியர் 5:30-32** வசனங்களில் **"நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம். இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப்பற்றியும் சபையைப்பற்றியும் சொல்லுகிறேன்"** என்றார்.

எனவே நமது மாம்சத்தையும், மனதையும் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து அவருக்கு கிழ்படிந்து இருக்க வேண்டும். அப்பொழுது நாம் அவரில் ஒரு அங்கமாய் இருப்போம். அவரும் நம்மில் நிறைந்திருப்பார். ஏனெனில் **எபேசியர் 5:26,27** வசனங்கள் கூறுகிறது **"தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்"**.

எனவே கிறிஸ்து தம்மை பலியாக ஒப்புக்கொடுத்ததே, நம்மை அவரைப் போல் மாற்றி, ஆதாம் ஏவாள் இழந்துபோன தேவ மகிமையை நமக்கு மறுபடியும் அளித்து, தம்மோடு நம்மை சேர்த்துக்கொள்வதற்கே. மேலும் **"நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும்வரைக்கும்" (எபே 4:11)** என்று பவுல் கூறுகிறபடி, நாம் ஒவ்வொரு நாளும் பூரணத்தை நோக்கி வளருகிறவர்களாய் இருக்க வேண்டும்.

அப்பொழுது ஒரு நாள், கிறிஸ்து வரும்போது **"கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும்**

**தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்" (I கொ 15:51-54)**. அப்பொழுது **"மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?" (I கொ 15:55)** என்று நாம் முழுங்குவோம். **"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" (I கொ 15:57)**. **"கர்த்தராகிய இயேசுவே, வாரும்" (வெளி 22:20)** ஆமென், அல்லேலூயா.

.

# தேவ கிருபை

## (வேத தியானம் லூக்கா 15:11-32)



மேற்க்கண்ட வேத பகுதியை நாம் தியானிக்கும் பொழுது, மனம் திரும்புகிற ஒரு பாவியினிமித்தம் தேவன் எவ்வளவாய் மகிழுகிறார் என்பதையும், ஒவ்வொரு மனிதனும் அவருடைய பிள்ளையாய் அவரிடத்தில் வரவேண்டும் என்பதிலும் எவ்வளவு கரிசையாய் இருக்கிறார் என்பதையும் நாம் காணலாம். ஆண்டவர் இந்த சம்பவத்தை கூறுவதற்கு முன்பு காணாமற்போன ஒரு ஆட்டிற்காக மேய்ப்பன் எவ்வளவு கரிசனையாய் இருக்கிறான் என்பதை பற்றியும், காணாமற்போன ஒரு வெள்ளிக்காசை ஜாக்கிரதையாய் தேடி கண்டுபிடித்த ஸ்திரீயை குறித்தும் கூறுகிறார்.

இங்கு ஆண்டவரும், பரலோகமும், அதிலுள்ள தூதர்களும் மகிழுகிற ஒரு காரியம் உண்டென்றால் அது பாவத்தில் வாழ்ந்த ஒரு மனிதன் மனதிரும்பி அவருடைய இராஜ்யத்திற்கு திரும்புவதே ஆகும். இந்த வேத பகுதியில் மனதிரும்பி வந்த மகனை பற்றி மட்டும் அல்லாமல், தகப்பனுடைய தோட்டத்தில் வேலைச்செய்து அவருடைய வார்த்தைக்கு கீழ்படிந்து இருந்த மூத்த குமாரனை குறித்தும் நாம் காண்கிறோம். இந்த மகன், தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிந்து அவருடைய பணியை செய்யும் தேவ பிள்ளைக்கு

ஒப்பாய் இருக்கிறான். இவர்கள் இருவர் இடையேயும் விளங்கிய தேவ கிருபையை குறித்து நாம் இப்பொழுது தியானிப்போம்.

முதலாவது மூத்த குமாரனுக்கும், இளைய குமாரனுக்கும் இடையே இருந்த வேற்றுமையான குணாதிசயங்களை நாம் காணலாம். இருவரும் தகப்பனுடைய ஆஸ்திக்கு பங்குள்ளவர்களாய் இருந்தனர். இருவரும் அதின் மேல் உரிமை பாராட்டவும் அதை பயன்படுத்தவும் விரும்பினர். ஆனால் அதை அவர்கள் செய்த விதத்தில் தான் வித்தியாசம் இருந்த்து. மூத்த குமாரன் தகப்பனுடைய வயலில் வேலைச் செய்தான் (லூக் 15:25). தகப்பன் தனக்கு கொடுத்த ஆஸ்தியை பெருகச் செய்ய நினைத்தான். அதுமாத்திரமல்ல அதற்காக தகப்பனுடைய ஆலோசனையை பெற்று அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்திருந்தான் (லூக் 15:29). தனக்கு தகப்பன் தந்த ஆசிர்வாதங்கள் பலுகி பெருகி அது மற்றவருக்கும் ஆசிர்வாதமாய் இருக்க வேண்டும் என்று எண்ணினான். எல்லாவற்றிற்கும் மேலாக தகப்பனோடு இருந்து அதை அநுபவிக்க அவன் விரும்பினான்.

இதைப்போல், ஒரு தேவ பிள்ளையும் தேவன் தனக்கு தந்த தாலந்துகளை அவருக்காக பயன்படுத்தி தேவ இராஜ்யம் (தகப்பனுடைய வயல்) விருத்தியடையும் படியாய் உழைக்கிறான். அதன் மூலம் தான் தேவனால் ஆசிர்வதிக்கப்பட்டவனாய் (தகப்பனுடைய ஆஸ்தியை உடையவன்) மாத்திரமல்ல, தான் ஆசிர்வாதமாய் மற்றவருக்கும் இருக்கிறான். மேலும் அவன் தேவனோடு இருக்கிறான். இங்கு நாம் அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமான காரியம், தேவனுடைய ஆசிர்வாதங்கள், அவர் நமக்கு தரும் தாலந்துகள் இவை எல்லாவற்றையும் விட தேவ ஐக்கியமே ஒரு தேவ பிள்ளைக்கு தேவையான ஒன்றாகும். தேவ ஐக்கியம் இல்லாமல் தேவன் தந்த ஆசிர்வாதத்தால் மாத்திரம் ஒரு மனிதன் நீண்ட காலம் மகிழ்ச்சியாய், ஆசிர்வாதமாய் வாழமுடியாது.

இதையே நாம் இளைய குமாரனிடத்தில் காண்கிறோம். அவனும் தகப்பனுடைய ஆசிர்வாதங்களை அநுபவிக்க (பயன்படுத்த) விரும்பினான். ஆனால் தகப்பனுடைய ஐக்கியத்தையோ, அவனுடைய ஆலோசனையையோ அவன் தேடவில்லை. தன் சுய பெலத்தால், சுய ஞானத்தால் அவற்றை உபயோகிக்க நினைத்தான். இதனால் அவன் தகப்பனை விட்டு பிரிந்தான்.

இங்கு நாம் காண்கிறது என்னவென்றால், ஆண்டவர் தன்னால் சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னுடைய ஆசிர்வாதங்களை, நன்மைகளை, தாலந்துகளை தருகிறார். கடவுள் எனக்கு இவ்வுலகத்தில் ஒன்றையும் தரவில்லை என்று ஒரு மனிதனும் கூற முடியாது. ஆனால் அதை எவ்வாறு ஒரு மனிதன் பயன்படுத்துகிறான் என்பதையே தேவன் பார்க்கிறார். மேலும் தேவனுடைய ஐசுவரியங்கள் பூரணமான ஒன்றாகும். எத்தனை மனிதருக்கும், எவ்வளவு வேண்டுமானாலும் அவரால் கொடுத்துக் கொண்டே இருக்க முடியும். ஒவ்வொரு மனிதனுக்கும் அவர், அவனுடைய வாழ்க்கையில் தந்திருக்கும் ஒவ்வொரு ஆசிர்வாதத்திற்கும், தாலந்திருக்கும் மனிதன் எந்த வகையிலும் தகுதியானவன் அல்ல. ஆனால் தேவன் தம்முடைய சாயலில் அவனை சிருஷ்டித்தபடியால், தம்முடைய ஆசிர்வாதத்திற்கு (ஆஸ்திக்கு) அவன் சதந்தரவாளியாய் (உரிமையானவனாய்) இருக்கிறான் என்பதை வெளிப்படுத்த அவற்றை கொடுக்கிறார். தேவன் தந்த ஞானத்தினால் தான் மனிதன் இப்பூமியில் இத்தனை பெரிய காரியங்களை செய்திருக்கிறான். அது அவனுக்கும், மற்ற மனிதருக்கும் ஆசிர்வாதமாய் இப்பூமியில் காணப்படுகிறது.

தகப்பனை விட்டு பிரிந்து சென்ற இளையக்குமாரன் எல்லாவற்றையும் தந்த சொந்த வழியிலேயே செலவழித்தான். தன் தகப்பனுடைய சொத்து (தேவ ஆசிர்வாதங்கள்) முழுவதையும் இழந்தான். இப்பொழுது அவன் நம்பி இருந்த உலகம், தன்னுடைய ஆசிர்வாதங்களை எல்லாம் வீணாய் செலவழித்த இந்த உலகம் அவனுடைய வாழ்க்கையை கசப்பாக்கிற்று.

**"தேசத்திலே கொடிய பஞ்சமுண்டாயிற்று. அப்பொழுது அவன் குறைவுபடத்தொடங்கி, அந்தத் தேசத்துக் குடிகளில் ஒருவனிடத்தில் போய் ஒட்டிக்கொண்டான். அந்தக் குடியானவன் அவனைத் தன் வயல்களில் பன்றிகளை மேய்க்கும்படி அனுப்பினான்" (லூக் 15:14,15).** இங்கு அவன் பார்வைக்கு சுகமாய், சுதந்தரமாய் காணப்பட்ட உலகம், அவனுக்கு குறைவுண்டாக்கிறதாய் காணப்பட்டது. தகப்பனுடைய பரிபூரண ஆசிர்வாதத்தினால் நிறைந்திருந்த அவன் இப்பொழுது அந்த தேசத்தில் (தகப்பன் இல்லாத தேசம்) குறைவுப்பட தொடங்கினான்.

ஒருவேளை இப்பொழுது அவனுக்கு புத்தி தெளிந்திருந்தால், அவன் தன் தகப்பன் வீட்டிற்கு திரும்பி இருக்கலாம். ஆனால் தகப்பனுடைய ஆஸ்தியை

இழந்த அவன், தன் சுயபெலத்தால் எப்படியாவது அந்த தேசத்தில் (மாம்ச உலகத்தில்) யாரையாவது அண்டி வாழ்ந்து விடலாம் என்று எண்ணினான். அவனுக்கும் ஒரு இடம் கிடைத்தது. ஆனால் அது அவன் வாழ்வை அர்த்த மற்றதாக்கிற்று. தகப்பனுடைய ஆஸ்திக்குரியவனாய் வாழ்ந்த அவன், இப்பொழுது பன்றிகளோடு நாற்றத்தில் வாழ வேண்டியிருக்கிறது. இதுவே தகப்பனை (தேவனை) விட்டு பிரிந்து இந்த உலகத்தோடு வாழ விரும்பும் ஒருவனுடைய முடிவு.

மேலும் **"அப்பொழுது பன்றிகள் தின்கிற தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான், ஒருவனும் அதை அவனுக்குக் கொடுக்கவில்லை" (லூக் 15:16).** இதுவே உலகத்தோடு வாழ்பவனின் மிகவும் மோசமாகவும் நிலையாகும். தகப்பன் (தேவன்) தந்த அந்தஸ்தோடு, ஐசுவரியத்தோடு வாழ்ந்தவன், இப்பொழுது எல்லாவற்றையும் இழந்து தரங்கெட்ட ஒரு வாழ்க்கையை வாழுகிறான். வாழ்க்கையின் மிக தாழ்வான ஒரு பகுதியில் உதவி செய்யவோ, ஆறுதல் கூறவோ யாரும் அற்ற நிலையில் இருந்த **"அவனுக்குப் புத்தி தெளிந்தபோது, அவன்: என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன். நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன் என்று சொல்லி; எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான்" (லூக் 15:17-20).**

இங்கு அவன் தன் தகப்பனிடத்தில் திரும்ப தன் இருதயத்தை திருப்பினாலும், அவன் தன் பாவத்தின் அகோரத்தின் நிமித்தம் தன் தகப்பனுடைய ஐக்கியத்தை பெற தான் தகுதியற்றன் என்ற மனநிலையோடு இருக்கிறான். பாவத்தில் வாழ்ந்த நாமும், தேவனால் மீட்கப்பட்ட பொழுது, அவருக்கே கீழ்ப்படிகிற அடிமைகளாக நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் அவருக்கே ஒப்புகொடுத்தோம். ஆனால் தேவனோ எதிர்ப்பார்பதெல்லாம் நாம் பாவத்திற்கு விலகி அவருக்கு பயந்து இருக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, நாம் அவரோடு ஐக்கியமாயிருக்க வேண்டும், அவரோடு உறவாட வேண்டும் என்பதே.

தேவன் தூதர்களை தமக்கு பணிவிடை ஆவிகளாக உருவாக்கினார். ஆனால் மனிதனையோ தமது சாயலில், தமது ரூபத்தில், தம்மோடு உறவாடும்படியாய் உண்டாக்கினார். இங்கு நாம் முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒன்று புத்தி தெளிந்தபோது, எழுந்து புறப்பட்டு என்கிற வார்த்தைகளாகும். தேவன் அவனுக்கு மனந்திரும்ப ஒரு வாய்ப்பை கொடுத்த பொழுது (புத்தி தெளிந்தபோது), அவன் தான் இருக்கும் இடத்தை விட்டு எழுந்து புறப்பட்டான். பாவியான ஒரு மனிதன் பாவ சேற்றில் உழன்றுக் கொண்டிருக்கும்போது, தேவன் ஏதோ ஒரு விதத்தில் மனந்திரும்ப ஒரு வாயப்பை தருகிறார். அதை பயன்படுத்தும் பொழுது மட்டுமே தேவன் கிரியை செய்ய முடியும். இதுவே பேதுரு மற்றும் யூதாஸின் வாழ்வில் நிகழ்ந்தது.

தன் இடத்தை விட்டு எழுந்து புறப்பட்ட இளையக்குமாரன் தகப்பனிடத்தில் வந்தான். **"அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்" (லூக் 15:20).** இங்கு அவன் தகப்பனுடைய பார்வையில் பட்டவுடனே (அவனுடைய எல்லைக்குள் வந்தவுடனே), தகப்பன் ஓடிச்சென்று அவனை அரவணைத்துக்கொள்கிறான். இதுவே மனந்திரும்புகிற ஒரு பாவியினிமித்தம் பரலோகத்தில் (தேவனிடத்தில்) உண்டாகும் ஒரு சந்தோஷமாகும். இங்கு தேவன் நியாயாதிபதியாய் நின்று கொண்டு நம் பாவத்தை மன்னித்து நம்மை தம்மோடு சேர்த்து கொள்பவராய் மட்டுமல்ல, நாம் மனந்திரும்பி தம்மிடம் வரவேண்டும் என்று மிகுந்த ஆவல் உள்ளவராய் நமக்காய் காத்துக்கொண்டிருக்கிறார். அதற்காகவே **"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" (யோ 3:16).**

பரலோகத்தில் எவ்வளவோ தேவதூதர்களும், பரிசுத்தவாங்களும் இருந்தாலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கிறது (லூக் 15:7). இதைப்போல் தேவன் உலகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனும் தன்னிடம் வரவேண்டும் என்றே எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறார். அதனாலேயே தேவன் கிருபையின் காலமாகிய இக்காலத்தை இம்மட்டும் வைத்திருக்கிறார். ஆகிலும் அதற்கு ஒரு முடிவு

உண்டு. அதற்கு முன்பாக எழுந்து புறப்பட்டு ஆண்டவரிடம் வந்து விடவேண்டும்.

மேலும் **"குமாரன் தகப்பனை நோக்கி: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன், இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல என்று சொன்னான்" (லூக் 15:21).** இங்கு இளையக்குமாரன் தான் செய்த காரியங்கள் தன் தகப்பனுக்கு விரோதமானது மட்டுமல்ல அது தேவனுக்கு விரோதமானது என்பதையும் அறிக்கையிட்டான். பாவத்தில் இருந்து இரட்சிப்பை பெற நினைப்பவனும் தன் பாவத்தால் தான் அழிவது மாத்திரமல்ல, அது தேவனுக்கு விரோதமானது, தேவனை வருத்தப்படுத்தக்கூடியது என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும், அறிக்கையிட வேண்டும்.

**"அப்பொழுது தகப்பன் தன் ஊழியக்காரரை நோக்கி: நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டுவந்து, இவனுக்கு உடுத்தி, இவன் கைக்கு மோதிரத்தையும் கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள்.**
**கொழுத்த கன்றைக் கொண்டுவந்து அடியுங்கள். நாம் புசித்து, சந்தோஷமாயிருப்போம். என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான் என்றான். அப்படியே அவர்கள் சந்தோஷப்படத் தொடங்கினார்கள்" (லூக் 15:22-24).** இங்கு இளையக்குமாரன் தகப்பனுடைய மன்னிப்பை பெற்று, அவரது அடைக்கலத்திற்குள் தனக்கு ஒரு இடம் கிடைத்தால் போதும் என்று எண்ணினான். ஆனால் தகப்பனோ அவனுக்கு, அவன் இழந்து போன மகிமையை (தன் குமாரன் என்ற அந்தஸ்தை) மறுபடியும் தருகிறார். இதைப் போலவே தேவன் ஒரு பாவியை மன்னித்து சேர்த்து கொள்ளும் பொழுது, அவனை வெறும் நியாயாதிபதியை போல மன்னித்து சேர்த்துக்கொள்ளாமல், தகப்பனாய் அவனை அரவணைத்து சேர்த்துக்கொள்கிறார். பாவ மன்னிப்பை பெற்ற மனிதனின் உள்ளத்தில் உண்டாகும் சந்தோஷத்தை பார்க்கிலும், பாவியை மன்னித்து பாவத்தை நீக்கிப்போட்ட தேவனே அவனிலும் அதிகமாய் மகிழுகிறார். நாம் தேவனோடு ஐக்கியமாய் இருக்க விரும்புவதை காட்டிலும், அவர் நம்மோடு ஐக்கியமாய் இருக்க அதிகம் விரும்புகிறார்.

இவ்வுலக காரியங்களில் நம் மனதை செலுத்தி அல்லது சக மனிதர்களோடு நேரத்தை செலவிட்டு அவரை நினையாமல் சில வேளைகளில் நாம் இருந்தாலும், அவரோ எப்பொழுதும் எல்லா வேளையிலும் நம் மேல் நினைவாய் இருக்கிறார். ஏனெனில் வேதம் கூறுகிறது **" அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்" (அப்போ 17:28)** என்று. நம்மை தம்மோடு சேர்த்து கொள்வது மாத்திரமல்ல ஆதியில் நம் முற்பிதாக்களான ஆதாம், ஏவாள் இழந்து போன தேவ மகிமையை நமக்கு திரும்பவும் அளிக்கிறார். இவற்றால் தேவ கிருபை எவ்வாறு நம் மேல் பொழியப்படுகிறது என்பதை நாம் உணர்ந்துக்கொள்ளலாம்.

இப்பொழுது மூத்த குமாரனை குறித்து தியானிப்போம். ஒரு புறத்தில் பாவத்தில் வாழ்ந்து தேவ கிருபையை உணராமல் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இன்னொரு புறத்தில் தேவனோடு வாழ்ந்தும், தேவ வார்த்தைகளுக்கு கீழ்படிந்திருந்தும், தேவ கிருபையை பலர் இன்னும் சரியாய் விளங்கி கொள்ளவில்லை. அதையே மூத்த குமாரனின் வாழ்க்கையில் காண்கிறோம். **லூக் 15:25-28 வசனங்களில் "அவனுடைய மூத்தகுமாரன் வயலிலிருந்தான். அவன் திரும்பி வீட்டுக்குச் சமீபமாய் வருகிறபோது, கீதவாத்தியத்தையும் நடனக்களிப்பையும் கேட்டு; ஊழியக்காரரில் ஒருவனை அழைத்து: இதென்ன என்று விசாரித்தான். அதற்கு அவன்: உம்முடைய சகோதரன் வந்தார், அவர் மறுபடியும் சுகத்துடனே உம்முடைய தகப்பனிடத்தில் வந்து சேர்ந்தபடியினாலே அவருக்காகக் கொழுத்த கன்றை அடிப்பித்தார் என்றான். அப்பொழுது அவன் கோபமடைந்து, உள்ளே போக மனதில்லாதிருந்தான். தகப்பனோ வெளியே வந்து, அவனை வருந்தியழைத்தான்".** இங்கு நாம் காண்கிறபடி மூத்தகுமாரன் தகப்பனின் வயலில் தகப்பனுக்காக வேலைச்செய்தான். தகப்பனுக்கு கீழ்படிந்து தகப்பனோடிருந்தான். தான் தகப்பனுக்கு கீழ்படிந்து இருப்பதால் தன்னை மாத்திரமே தகப்பன் நேசிப்பார் என்று எண்ணினான். தன் கிரியைகளின் நிமித்தமே தகப்பன் தன்னை நேசிக்கிறார் என்றும், தன் தமையன் (இளையக்குமாரன்) தகப்பனுக்கு பிரியமில்லாத காரியத்தை செய்கிறபடியால் தகப்பன் அவனை வெறுக்கிறார் என்றும் நினைத்தான்.

இப்படியே நாமும், பல வேளைகளில் நம்முடைய பயபக்தியான வாழ்க்கையினால்தான் தேவன் நம்மை நேசிக்கிறார் என்றும், அப்படி

பயபக்தியில்லாதவர்கள் தேவ அன்பை பெற பாத்திரவான்கள் அல்ல என்றும், எனவே நாமே தேவ பார்வையில் உயர்ந்தவர்கள் என்றும் எண்ணிக்கொள்கிறோம். ஆனால் தேவன் நம்மை எப்படி நேசிக்கின்றாரோ அப்படியே எந்த மனிதனையும், அவன் எந்நிலையில் இருந்தாலும், அவனை அவ்வாறே நேசிக்கிறார். ஏனெனில் அவரே நம் அனைவரையும் சிருஷ்டித்தவர். அவரே நம்முடைய தகப்பன். இதை உணராத மூத்தக்குமாரன் கோபமடைந்து, தகப்பனிடத்தில் செல்ல மனதில்லாதிருக்கிறான். ஆனால் **"தகப்பனோ வெளியே வந்து, அவனை வருந்தியழைத்தான்" (லூக் 15:28).** இதுவே தேவனுக்கு கீழ்படிந்து இருக்கும் ஒரு தேவபிள்ளையின் மேன்மையாகும். சில வேளைகளில் வாழ்க்கையில் உண்டாகும் வேதனைகளினால், இழப்புக்களினால் ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்திலும் நாம் சோர்ந்து போகும்பொழுது, தேவனை நோக்கி பார்க்க முடியாத பொழுதும், தேவனே நம்மை தேடி வந்து ஆறுதல்படுத்துகிறார். நம்மை விடுவிக்கிறார். இதுவே இளையக்குமாரனுக்கும், மூத்தக்குமாரனுக்கும் உள்ள வித்தியாசம், இளையக்குமாரன் பாடுகள் பட்டு வேதனை அடைந்தாலும், அவன் புத்தி தெளிந்து தகப்பனிடம் வந்தபொழுதே தகப்பன் அவனை சந்தித்து ஆறுதல்படுத்தி உயர்த்தினார். ஆனால் ஒரு தேவபிள்ளையோ, தேவனுடைய பார்வையில் எப்பொழுதும் இருக்கிறபடியால், அவனுக்கு ஒரு தீமையும் அணுகாமல் பாதுகாக்கிறார். அவன் அவரை நோக்கி பார்க்க முடியாதபடி துயரத்தில் இருந்தாலும் அவர் அவனை தேடி வருகிறார்.

மேலும் **லூக் 15:29,30 வசனங்களில் "அவன் தகப்பனுக்குப் பிரதியுத்தரமாக: இதோ, இத்தனை வருஷகாலமாய் நான் உமக்கு ஊழியஞ்செய்து, ஒருக்காலும் உம்முடைய கற்பனையை மீறாதிருந்தும், என் சிநேகிதரோடே நான் சந்தோஷமாயிருக்கும்படி நீர் ஒருக்காலும் எனக்கு ஒரு ஆட்டுக்குட்டியையாவது கொடுக்கவில்லை. வேசிகளிடத்தில் உம்முடைய ஆஸ்தியை அழித்துப்போட்ட உம்முடைய குமாரனாகிய இவன் வந்தவுடனே கொழுத்த கன்றை இவனுக்காக அடிப்பித்தீரே என்றான்".** இங்கு மூத்தக்குமாரன் தன்னுடைய நீதியை வெளிப்படுத்துவதை காணலாம். தான் நீதிமானாய் வாழ்வதாகவும், தன்னுடைய தமையனோ பாவத்தில் வாழ்வதாகவும், ஆனால் அவனுக்கு கிடைத்த ஆசிர்வாதங்கள் கூட தனக்கு கிடைக்கவில்லை என்று தகப்பனிடத்தில் முறையிட்டான். நாமும் இப்படியே

தேவனிடத்தில் சில வேளைகளில் நமக்கு நியாயமாய் கிடைக்க வேண்டிய ஆசிர்வாதங்கள் கூட கிடைக்காத போது, அதே வேளையில் இவ்வுலகத்திற்க்கேற்றார் போல் வாழும் மக்களுக்கு எந்தவித தடையும் இன்றி ஆசிர்வாதங்கள் கிடைக்கும் பொழுது முறுமுறுக்கிறோம்.

ஆனால் அதற்கு தகப்பனுடைய பதிலோ **"மகனே, நீ எப்போதும் என்னோடிருக்கிறாய், எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது" (லூக் 15:31)** என்பதாகும். ஆம், தேவனும் இதையே நம்மிடம் கூறுகிறார். அவருடையதெல்லாம் நம்முடையதாயிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் தேவன் தம்மை எஜமானாக, இராஜாவாக வெளிப்படுத்தினார். ஆனால் புதிய ஏற்பாட்டில் அவர் நம்முடைய தகப்பனாய் இருக்கிறார். நம்முடைய உலக பிரகாரமான எஜமானும், இராஜாவும் நமக்கு தேவையானதை எல்லாவற்றையும் தரலாம். ஆனால் எஜமானுடைய, இராஜாவுடைய ஆஸ்தியின் மேல் நாம் உரிமை பாராட்டமுடியாது. ஆனால் தகப்பன் நமக்கு கொடுக்கும் ஆசிர்வாதங்கள் மாத்திரமல்ல, தகப்பனுக்குரியது அனைத்தும் நமக்குரியதாயிருக்கிறது. எனவே தேவனிடத்தில் இருந்து ஏதோ சில ஆசிர்வாதங்களை மாத்திரம் நாம் பெறுவதோ, உரிமை பாராட்டுவதோ அல்ல, தேவனுடைய அனைத்து ஆசிர்வாதங்களும், அவருடைய வாக்குத்தத்தங்களும் நமக்கு உரியதயிருக்கிறது.

இதற்கும் மேலாக **"நீ எப்போதும் என்னோடிருக்கிறாய்" (லூக் 15:31)** என்று தகப்பன் கூறியது போல, நாம் தேவனோடும், அவர் நம்மோடும் இருக்கிறார். இதுவே நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கும் அநுபவம். இனி நான் அல்ல கிறிஸ்துவே என்னில் எல்லாம் என்ற நிலையாகும். அவருடைய அச்சையடையளங்கள் நம்மில் காணப்படுகிற வாழ்க்கையாகும். அவர் தலையாய் நாம் ஒவ்வொருவரும் அவயவங்களாய் காணப்படுகிற அநுபவமாகும். எல்லாவற்றிற்கும் மேலாக தனிப்பட்ட முறையில் நாம் தேவனோடு கொள்கிற ஐக்கியமும், வாழ்கையில் ஒவ்வொரு நொடிபொழுதும் அவர் நம்மோடு இருக்கிறார் என்ற நிச்சயமும், அவர் நமக்கு தரும் எல்லா ஆசிர்வாதங்களிலும் மேலானதாகும். இதையே தகப்பனும் மூத்தக்குமாரனுக்கு எடுத்துக் கூறினான்.

மேலும் இறுதியாக **"உன் சகோதரனாகிய இவனோ மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான்; ஆனபடியினாலே, நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்கவேண்டுமே என்று சொன்னான்" (லூக் 15:32).** இங்கு தகப்பன் இளையக்குமாரன் தீய வழியில் சென்றிருந்தாலும், அவன் மூத்தக்குமாரனின் சகோதரன் என்பதையும், அவன் மீண்டும் தகப்பனிடம் வந்தது தனக்கு மாத்திரமல்ல மூத்தக்குமாரனாகிய அவனுக்கும் மகிழ்ச்சியான செய்தியே என்றும், தகப்பனுக்கு குமாரர்கள் செய்யும் பணிவிடையைக்காட்டிலும், அவர்கள் இருவருடைய ஐக்கியத்தையும், சகோதரர் மத்தியிலே ஐக்கியத்தையுமே தான் விரும்புவதாகவும், தனக்கு மிகுந்த சந்தோஷத்தை தருவதும் அதுவே என்பதை வெளிப்படுத்துகிறார்.

தேவனும் இதையே நம்மிடம் கூறுகிறார். நாம் அவருக்கு எவ்வளவு பிரயோஜனமானவர்கள் என்பதையோ, மற்ற மனிதர்களின் வாழ்க்கையால் அவருடைய நாமம் எப்படி மகிமைபடுகிறது என்பதை காட்டிலும், ஒவ்வொருவரும் மனந்திரும்பி உண்மையான தேவனுடைய அன்பை உணர்ந்து அவரோடு ஐக்கியமாய் இருப்பதையே அவர் மிகவும் விரும்புகிறார், அதுவே அவருக்கு மிகுந்த சந்தோஷத்தை தருகிறது என்பதையும் வெளிப்படுத்துகிறார்.

மேலும் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதர்கள் ஒவ்வொருவரும் சகோதரரே என்பதையும், எனவே ஒவ்வொருவரும் மனந்திரும்பி தேவனிடம் வரவேண்டும் என்பதே ஒரு தேவபிள்ளையின் வாஞ்சையாய் இருக்க வேண்டும் என்பதும், அவ்வாறு சக மனிதர்களை தேவனிடத்தில் வழிநடத்துவதே நாம் தேவனுக்கு செய்யும் மேலான ஊழியம் என்றும், அதுவே அவரையும், நம்மையும், மற்றெல்லாரையும், தேவதூதரையும், பரலோகத்தையும் சந்தோஷப்படுத்தும் என்றும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றே நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இச்சம்பவத்தை நமக்கு வேதத்தில் வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாறு ஆண்டவர் கூறிய ஒவ்வொரு காரியத்தையும் எழுதினால், எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன் (யோ 21:25) ஆமென்.

# சோர்ந்து போகிறவனுக்கு



**"சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து" (ஏசா 40:29).**

மேற்க்கண்ட வேத வசனத்தில், சோர்ந்து போகிறவனுக்கு என்ற வார்த்தை அவன் ஏற்கெனவே சோர்ந்து போன நிலையில் தற்போது உள்ளான் என்பதை வெளிப்படுத்துகிறது. அப்படிப்பட்ட ஒரு மனிதனுக்கு கர்த்தர் பெலன் கொடுக்கிறார்.

இங்கு நாம் காண்கிறபடி, ஒருவன் சோர்ந்து போனதால் தேவன் அவனை தள்ளிவிடுகிறதில்லை. பெரும்பாலும் நமக்கு விசுவாச பரீட்சை ஏற்படும்பொழுது, போராட்டங்களை நம்மால் தாங்கி கொள்ள முடியாது என்று நமக்கு தோன்றுகிறபோது, அல்லது அடியின் மேல் அடி விழும்பொழுது, நாம் எப்பேற்பட்ட விசுவாசம் உள்ளவர்களாய் இருந்தாலும் சோர்ந்து போகிறோம்.

வேதத்தில் உள்ள அநேக பரிசுத்தவாங்களும் இப்படிப்பட்ட வேளைகளுக்குள் கடந்து சென்றிருக்கின்றனர். 1 இரா 19:1-5 வசனங்களில் "எலியா செய்த எல்லாவற்றையும், அவன் தீர்க்கதரிசிகளெல்லாரையும் பட்டயத்தாலே கொன்றுபோட்ட செய்தி அனைத்தையும், ஆகாப்

யேசபேலுக்கு அறிவித்தான். அப்பொழுது யேசபேல் எலியாவினிடத்தில் ஆள் அனுப்பி: அவர்களில் ஒவ்வொருவனுடைய பிராணனுக்குச் செய்யப்பட்டதுபோல, நான் நாளை இந்நேரத்தில் உன் பிராணனுக்குச் செய்யாதேபோனால், தேவர்கள் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்கள் என்று சொல்லச்சொன்னாள். அவனுக்கு அது தெரிந்தபோது எழுந்து, தன் பிராணனைக் காக்க யூதாவைச்சேர்ந்த பெயெர்செபாவுக்குப் புறப்பட்டுப்போய், தன் வேலைக்காரனை அங்கே நிறுத்திவிட்டான். அவன் வனாந்தரத்தில் ஒருநாள் பிரயாணம் போய், ஒரு சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்து, தான் சாகவேண்டும் என்று கோரி: போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்; நான் என் பிதாக்களைப்பார்க்கிலும் நல்லவன் அல்ல என்று சொல்லி, ஒரு சூரைச்செடியின்கீழ்ப் படுத்துக்கொண்டு நித்திரைபண்ணினான்".

இங்கு நாம் கர்த்தருக்காக வைராக்கியம் பாராட்டி "என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" (1 இரா 17:1) என்று ஆகாப் இராஜாவுக்கு முன்பாக முழங்கின எலியா தீர்க்கதரிசி, சகல இஸ்ரவேலர் முன்பும் பாகாலின் நானூற்றைம்பது தீர்க்கதரிசிகளின் முன்பும், வானத்திலிருந்து அக்கினி இறங்கி தன்னுடைய பலியை தேவன் அங்கிகரித்ததின் மூலம், "கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம்" (1 இரா 18:39) என்று இஸ்ரவேல் மக்களை முகங்குபுற விழவைத்து, பாகாலின் நானூற்றைம்பது தீர்க்கதரிசி,களை வெட்டிப் போட்டு, தேவ வல்லமையை தன் வாழ்க்கையில் வெளிக்காட்டிய எலியா தீர்க்கதரிசி, தேவனால் அற்புதவிதமாய் போஷிக்கப்பட்டு (1 இரா 17:6,16), மரித்துபோன விதவையின் மகனை உயிரோடு எழுப்பிய எலியா தீர்க்கதரிசி (1 இரா 17:21,22), இப்பொழுது ஒரு சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்து, தான் சாகவேண்டும் என்று கோரி, போதும் கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும், நான் என் பிதாக்களைப்பார்க்கிலும் நல்லவன் அல்ல என்று சொன்னார்.

ஒரு பக்கம் விசுவாசத்தினால் அற்புதமான காரியங்களை செய்த எலியா தீர்க்கதரிசி இங்கு தான் சாக வேண்டும் என்று கூறுவதையும், தான்

நல்லவன் அல்ல என்று கூறுவதையும் நாம் பார்க்கும்பொழுது, அவர் எவ்வளவாய் சோர்ந்து போய் இருந்தால் அவர் இவ்வாறு கூறமுடியும் என்பதை நிதானித்துக் கொள்ளலாம். ஆனால் இங்கு நாம் காண்கிற சோர்வு தேவன் மேல் அவர் வைத்திருந்த விசுவாசத்திலும், அன்பிலும் உண்டான தளர்வினால் ஏற்பட்ட ஒன்றல்ல. அல்லது சூழ்நிலையை குறித்த பயத்தினாலோ, மனுஷரை (ஆகாப், யோசபேல்) குறித்த பயத்தினாலோ உண்டானதல்ல.

இங்கு நாம் காண்கிற எலியாவின் சோர்விற்கு காரணத்தை அவரே தேவனிடம் 1 இரா 19:10,14 ஆகிய வசனங்களில் இருமுறை கூறுகிறார். "அதற்கு அவன்: சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்திவைராக்கியமாயிருந்தேன்; இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள்; உம்முடைய பலிபீடங்களை இடித்து, உம்முடைய தீர்க்கதரிசிகளைப் பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள்; நான் ஒருவன்மாத்திரம் மீதியாயிருக்கிறேன்; என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள் என்றான்" (1 இரா 19:10).

இங்கு எலியாவின் ஏக்கமெல்லாம் தான் தேவனுக்காக இவ்வளவு பக்தி வைராக்கியமாய் வாழ்ந்தும், தன் அரசனும், மக்களும் தேவனுடைய உடன்படிக்கையை தள்ளிவிட்டதினாலும், அவருடைய பலிபீடத்தை இடித்து அவருடைய தீர்க்கதரிசிகளை கொன்று, தன்னையும் கொல்ல தேடுகிறதினால், மேலும் மேலும் ஜனங்கள் தேவனுக்கு விரோதமாய் வாழ்வதை கண்டு தன்னுடைய ஊழியத்தை தொடர மனதில்லாமல் ஏற்பட்ட சோர்வினால் உண்டானதே தன்னை எடுத்துக்கொள்ளும்படியாய் அவர் தேவனிடம் கேட்ட வேண்டுதலாகும்.

இங்கு உண்டான சோர்வு, அவிசுவாசத்தினால் உண்டான சோர்வு அல்ல, அல்லது தேவனுக்காக போராட மனதில்லாததினால் உண்டான சோர்வு அல்ல, அல்லது தேவனால் இனி எதுவும் செய்ய முடியாது என்ற உணர்வினால் ஏற்பட்ட சோர்வு அல்ல, தன்னால் தேவனுக்கு ஒரு பிரயோஜனமான வாழ்வு வாழமுடியவில்லையே என்ற எண்ணமும், ஜனங்களின் குளிர்ந்து போன வாழ்க்கை நிலையுமே அவரை இப்படி வேண்டுதல் செய்ய வைத்தது.

எனவே தேவன் அவரை தைரியப்படுத்தி, அவர் செய்ய வேண்டிய வேலைகளை அவருக்கு கூறி, "ஆனாலும் பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்களையும், அவனை முத்தஞ்செய்யாதிருக்கிற வாய்களையுமுடைய ஏழாயிரம்பேரை இஸ்ரவேலிலே மீதியாக வைத்திருக்கிறேன்" (1 இரா 19:18) என்று கூறி அவரை ஆறுதல்படுத்தி, அவருடைய ஊழியத்தை தொடர்ந்து செய்யும்படியாய் அவரை பெலப்படுத்தினார்.

இதையே நாம் ஏசா 40;29 வசனத்திலும் காண்கிறோம். எனவே சோர்ந்து போன வேளையில் தேவனால் பெலப்பட, நாம் சோர்ந்து போனோம் என்பதை முதலாவது தேவனிடம் அறிக்கையிட வேண்டும். அப்பொழுது "நம்முடைய பெலவினத்திலே அவருடைய பெலன் பூரணமாய் விளங்கும்" (2 கொரி 12:9). ஆனால் அதே நேரத்தில், தேவன் மேல் உள்ள விசுவாச குறைவினாலோ, சூழ்நிலைகளை குறித்த பயத்தினாலோ சோர்ந்து போய், போராட மனமற்றிறுப்பவனுக்கு வேதம் கூறும் ஆலோசனை "ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்து போவாயானால், உன் பெலன் குறுகினது" (நீதி 24:10).

இங்கு நாம் காண்கிறது என்னவென்றால், ஒரு தேவ பிள்ளை சோர்ந்து போவதற்கு காரணம் அவிசுவாசம் அல்ல, அது தேவன் மேல் அவனுக்கு இருக்கும் ஒரு அன்பினாலும் ஏற்படலாம் என்பதையும், அதை அவரிடம் தெரிவிக்கும் பொழுது, ஒரு தாய் தன் பிள்ளையை கரடான பாதையில் சுமந்து செல்வது போல் சுமந்து செல்வார் என்பதை வெளிப்படுத்துகிறது.

இதுவே யோபுவின் வாழ்விலும் நடந்தது. அவருடைய பல்வேறு வார்த்தைகள் தேவனை கேள்விக்கேட்பது போல இருக்கிறது. அவருடைய நண்பர்களும் அவருடைய வார்த்தைகள் அவிசுவாசத்தினால் உண்டானது என்று எண்ணினர். ஆனால் தேவன் போபுவின் இருதயத்தை அறிவார். ஆதலால், அவரை ஆறுதல்படுத்தி ஆசிர்வதித்தார்.

எனவே நாம் சோர்ந்து போகும் வேளையில், அது எதினால் உண்டானது என்பதை நாம் முதலாவது புரிந்து கொள்ள வேண்டும். எது எப்படி இருந்தாலும் நம்முடைய சோர்வுகளை எல்லாம் தேவனுக்கு தெரியப்படுத்தும் பொழுது, அவர் அதைப் பொறுப் பெடுத்துக்கொள்வார். தேவன் நம்மிடம் எதிர்பார்பது எல்லாம் அவர் அதைப் பொறுப்

பெடுத்துக்கொள்வார் என்ற அறிவு நமக்கு இருக்க வேண்டும் என்பதே. தேவன் தாமே, நம் ஒவ்வொருவரையும், ஆறுதல்படுத்தி, தேறுதல்படுத்தி நித்திய ஜீவகரையில் சேர்ப்பாராக, ஆமென்.

# காலங்கள்

## என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது (சங் 31:15)



காலங்கள் தேவனுடைய கரத்திலிருக்கிறது என்பது முக்காலங்களையும் அவர் ஆளுகிறவர் என்பதை வெளிப்படுத்துகிறது. ஒரு சாதாரண மனிதனால் இறந்த காலத்தில் நடந்து முடிந்த காரியங்களை மாற்றவோ, எதிர்காலத்தில் நடக்க இருக்கும் காரியங்களை நிருணயம் பண்ணவோ முடியாது. நிகழ்காலத்தின் மீதும் அவனுக்கு முழு ஆளுகையில்லை. இதை நாம் அன்றாடம் நமது வாழ்க்கையில் காண்கிறோம்.

நம்மால் அநேக நேரங்களில் குறிப்பிட்ட வேலைகளை அதற்கு குறித்த நேரத்திற்குள் செய்து முடிக்க முடிவதில்லை. குறித்த நேரத்தில் நாம் செல்ல வேண்டிய இடத்திற்கு நாம் செல்ல முடிவதில்லை. காரணம், காலம் (நேரம்) நமக்காக நிற்கப்போவதில்லை. நாம் தான் நேரத்தோடு இசைந்து சென்று வேலைகளை முடிக்க வேண்டும். எனவே காலங்கள் (நேரங்கள்) தான் நம்மை ஆளுகின்றன. ஆனால் தேவனுடைய காரியத்தில் அவர்தான் காலத்தை ஆளுகிறவர்.

தேவன் நிகழ்காலத்திற்க்கும், எதிர்காலத்திற்கும் பயன்படும் வகையில் கடந்த கால நிகழ்வுகளை மாற்றமுடியும், அமைக்க முடியும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். மற்றொரு விதத்தில் சொல்ல போனால் மூன்று காலங்களிலும் நடக்கும் வெவ்வேறு நிகழ்வுகளை ஒன்றிணைக்க, அவர் எந்த காலத்தில் நடக்கும் எந்தவொரு நிகழ்வையும் அதற்கேற்ற விதமாய் மாற்றமுடியும். அப்படியாய் தேவன் கிரியை செய்த அநேக காரியங்கள் வேதத்தில் உள்ளது. அவற்றை இப்பொழுது காண்போம்.

யோசேப்பின் வாழ்க்கையில், அவருடைய தகப்பன் யாக்கோபு மரித்தபின்பு, அவருடைய சகோதரர்கள் அவரிடத்தில் வந்து கடந்த காலத்தில் தாங்கள் செய்த தீமையை மன்னிக்க வேண்டும் என்று கேட்டு கொண்டபோது, **"யோசேப்பு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நான் தேவனா; நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்" (ஆதி 50:19,20).**

இங்கு நாம் காண்பது, யோசேப்பு கடந்த கால நிகழ்வுகளை ஏதோ நடந்து விட்ட தவறுகளாக பாராமல், அதிலும் தேவன் தம்முடைய திட்டத்தையே நிறைவேற்றினார் என்று கூறுகிறான். ஏனெனில் இவையாவும் நடப்பதற்கு முன்பதாகவே **ஆதி 37:5-11** வசனங்களில், எதிர்காலத்தில் நடக்க இருக்கும் காரியங்களை குறித்து சொப்பனத்தின் மூலம் யோசேப்பிற்கு தேவன் அவற்றை வெளிப்படுத்தினார். ஆனால், அவை நடப்பதற்கான எந்த சூழ்நிலையும் அந்நேரத்தில் இல்லை. ஆகிலும் முக்காலத்தையும் ஆளுகிற தேவன், ஒவ்வொரு காலத்திலும் அதற்கேற்றவிதமாய் சூழ்நிலைகளை மாற்றி இறுதியில் தாம் கூறியவற்றை நிறைவேற்றினார்.

யோசேப்பு இஸ்மவேலர் கையில் விற்கப்பட்டதும் **(ஆதி 37:28)**, போத்திபாரின் வீட்டிலிருந்து சிறைசாலைக்கு கொண்டு போகப்பட்டதும் **(ஆதி 39:20)**, பானபாத்திரக்காரன் யோசேப்பை நினையாமல் அவனை மறந்துவிட்டதும் **(ஆதி 40:23)**, பார்வோனுக்கு உண்டான சொப்பனமும் **(ஆதி 41:1)**, பானபாத்திரக்காரனுக்கு யோசேப்பின் நினைவு வந்ததும் **(ஆதி 41:9)**, சகல தேசங்களிலும் உண்டான பஞ்சமும் **(ஆதி 41:57)**, தேவனுடைய

திட்டத்தின்படியே சொப்பனத்தின் மூலம் யோசேப்பிற்கு சொல்லப்பட்ட எதிர்கால நிகழ்விற்கு நேராய் நடந்தது.

இக்காலங்களுக்கு ஊடாய் தேவன் யோசேப்பை பல்வேறு காரியங்களில் பழக்குவித்தார். இறுதியில் அவனை ஒரு நல்ல தலைவனாக, தேவ மனிதனாக நிறுத்தினார். இதைப்போன்ற காரியத்தையே நாம் மோசேயின் வாழ்விலும் காண்கிறோம். மோசேயின் பிறப்பு முதல் அவருடைய முடிவு வரை தேவனுடைய திட்டம் அவருடைய வாழ்க்கையில் நிறைவேறுதை நாம் காணலாம்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக **ஆதி 3:15** இல் தேவன் சொன்ன **"உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்"** என்ற வார்த்தையின் ஊடாகவே வேதத்தின் அனைத்து நிகழ்வுகளையும் தேவன் அமைத்திருக்கிறார். இங்கு காலங்கள் என்றவுடன் வெறும் காலநேரத்தின் (Time) மீது மட்டும் தேவன் ஆளுகை செய்கிறார் என்று நாம் நினைத்துவிடக்கூடாது. ஏனெனில் கால சூழ்நிலைகளின் மேலும், அண்ட சராசரங்களின் மீதும் (Universe) அவர் ஆளுகை உடையவராய் இருக்கிறார்.

இதையே நாம் யோசுவாவின் வாழ்க்கையிலும் காண்கிறோம். **யோசுவா 10:12-14** வசனங்களில் **"கர்த்தர் எமோரியரை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக ஒப்புக்கொடுக்கிற அந்நாளிலே, யோசுவா கர்த்தரை நோக்கிப் பேசி, பின்பு இஸ்ரவேலின் கண்களுக்கு முன்பாக: சூரியனே, நீ கிபியோன்மேலும், சந்திரனே, நீ ஆயலோன் பள்ளத்தாக்கின்மேலும், தரித்துநில்லுங்கள் என்றான். அப்பொழுது ஜனங்கள் தங்கள் சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டுமட்டும் சூரியன் தரித்தது, சந்திரனும் நின்றது; இது யாசேரின் புஸ்தகத்தில் எழுதியிருக்கவில்லையா; அப்படியே சூரியன் அஸ்தமிக்கத் தீவிரிக்காமல், ஏறக்குறைய ஒரு பகல்முழுதும் நடுவானத்தில் நின்றது. இப்படிக் கர்த்தர் ஒரு மனிதனுடைய சொல்கேட்ட அந்நாளையொத்தநாள் அதற்கு முன்னுமில்லை அதற்குப் பின்னுமில்லை; கர்த்தர் இஸ்ரவேலுக்காக யுத்தம்பண்ணினார்"**. இங்கு நாம் காண்கிறபடி சூரியன் தரித்தது, சந்திரன் நின்றது, சூரியன் அஸ்தமிக்கத் தீவிரிக்காமல், ஏறக்குறைய ஒரு

பகல்முழுதும் நடுவானத்தில் நின்றது போன்ற வார்த்தைகள் கால சூழ்நிலைகளின் மேலுள்ள தேவனுடைய ஆளுகையை வெளிப்படுத்துகிறது.

இதையே நாம் எசேக்கியாவின் வாழ்க்கையிலும் காணலாம் **(2 இரா 20:11)**. மேலும் **யோபு 38:31-33** வசனங்களில் **"அறுமீன் நட்சத்திரத்தின் சுகிர்த சம்பந்தத்தை நீ இணைக்கக்கூடுமோ? அல்லது மிருகசீரிஷத்தின் கட்டுகளை அவிழ்ப்பாயோ? இராசிகளை அதினதின் காலத்திலே வரப்பண்ணுவாயோ? துருவச்சக்கர நட்சத்திரத்தையும் அதைச் சேர்ந்த நட்சத்திரங்களையும் வழிநடத்துவாயோ? வானத்தின் நியமங்களை நீ அறிவாயோ? அது பூமியையாளும் ஆளுகையை நீ திட்டம்பண்ணுவாயோ?"**, இங்கு தேவனுடைய ஆளுகையை நாம் காணலாம்.

நாம் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத எத்தனையோ விண்மீன் மண்டலங்களையும், நம்முடைய பூமியின் கால நிலைகளுக்கே அப்பாற்ப்பட்ட மற்ற கால நிலைகளையும் ஆளும் தேவன், காலத்திற்கு அப்பாற்ப்பட்டவர். அவருக்கு முன்பாக மனிதராகிய நாம் ஒன்றுமில்லை. அவரே சகலவற்றையும் சிருஷ்டித்தவர். அவர் கரங்களில் நம்முடைய காலங்கள் (இம்மைக்குரிய வாழ்க்கை மற்றும் மறுமைக்குரிய வாழ்க்கை) இருக்கிறது. எனவே நாம் ஒன்றுக்கும் கவலைப்படாமல் சகலவற்றையும் ஆளுகிற அவரையே சார்ந்து கொள்வோம், ஆமென்.

# எருசலேம் பயணம்

**எருசலேமே, உன் வாசல்களில் எங்கள் கால்கள் நிற்கலாயிற்று (சங் 122:2)**



**இந்த சிந்தனை ஆவிக்குரியரீதியில் வளருவதற்கே அன்றி, யாரையும், எதையும் குற்றப்படுத்த அல்ல.**

**எருசலேம் பயணம்:**

கிறிஸ்தவர்களில் அநேகர் ஒரு தடவையாவது எருசலேம் சென்று வர வேண்டும் என விருப்பம் உள்ளவர்கள். இதில் தவறேதும் இல்லை. ஆனால் நாம் யாரோடு எருசலேம் செல்ல போகிறோம் என்பதே கேள்வி. ஏனென்றால் அநேக சுற்றுலா அமைப்பாளர்கள் எருசலேமிற்கு நம்மை அழைத்து செல்ல முடியும். அதே நேரத்தில் கிறிஸ்துவும் நம்மை எருசலேமிற்கு அழைத்து செல்வதாக வாக்களித்திருக்கிறார். ஆயிர வருட அரசாட்சியில் அவர் எருசலேமில் இருந்து அரசாளுவார். அதுமாத்திரமல்ல ஆயிர வருட அரசாட்சிக்கு பின்பும், புதிய வானம், புதிய பூமியிலும், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரமே காணப்படுகிறது (வெளி 21:1,2). எனவே தேவ பிள்ளைகள் அனைவரும் ஒரு நாள் எருசலேமிலே இருக்க போவது உறுதி.

இப்போழுது இவ்விரண்டில் (சுற்றுலா அமைப்பாளர்கள் அல்லது ஆண்டவர்) எதை நாம் தெரிந்து கொள்வது என்பதே கேள்வி. எனவே இவ்விரண்டு வழிகளையும் நாம் ஒப்பிட்டு பார்ப்போம்.

சுற்றுலா அமைப்பாளர்கள் நாம் விரும்பின நேரத்தில் நம்மை அழைத்து செல்வார்கள். ஆனால் ஆண்டவரோ அவர் நினைத்த வேளையிலேயே வந்து நம்மை கூட்டிச்செல்வார். எனவே இங்கு நமக்கு பொறுமை அவசியமாய் இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் சுற்றுலா அமைப்பாளர்களுக்கு நாம் கட்டணம் (கிரயம்) செலுத்த வேண்டும். ஆண்டவரோ தம்மையே கிரயமாக கொடுத்து நம்மை தகுதிப்படுத்தியிருக்கிறார். நாம் செல்வதற்கு நமது அரசாங்கத்திடமும், இஸ்ரவேல் அரசாங்கத்திடமும், பாஸ்போர்ட், விசா போன்ற காரியங்களில் அனுமதி பெற வேண்டும். ஆனால் ஆண்டவரோ இரட்சிப்பு என்னும் காரியத்தின் மூலம் நமக்கு பாஸ்போர்ட், விசா எல்லாம் கொடுத்துவிட்டார்.

மேலும் சுற்றுலா அமைப்பாளர்கள் நம்மை ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் மட்டும்தான் அங்கு தங்க வைக்கமுடியும். ஆனால் ஆண்டவரோ நாம் என்றென்றும் எருசலேம் குடிமக்களாய் இருக்க, நம்மை அங்கு கொண்டு செல்ல இருக்கிறார். அங்கு நாம் எப்பொழுதும் ஆண்டவரோடு இருப்போம். மேலும், சுற்றுலா அமைப்பாளர்கள் நம்மை எருசலேம் அழைத்து செல்லும்பொழுது, விமானத்தில் மும்பாய் (via Mumbai) போன்ற நகரத்தின் வழியாக நம்மை அழைத்து செல்வர். ஆனால், ஆண்டவரோ நம்மை பரலோகத்தின் வழியாக (via Heaven) (பரம) எருசலேம் அழைத்துச் செல்வார். இப்பொழுது நமது மாம்ச சரீரம் மாத்திரமே எருசலேம் செல்ல முடியும். ஆனால், ஆண்டவர் நம்மை இப்படியே கூட்டி செல்லாமல், மகிமையுள்ள மறுரூபமான சரீரத்தை நமக்கு கொடுத்து அதனையே கூட்டி செல்வார்.

மேலும் சுற்றுலா அமைப்பாளர்கள், நாம் நம்மோடு சிலரையும் அழைத்து சென்றால், நமக்கு கட்டண சலுகைகளை கொடுப்பர். ஆனால் ஆண்டவரோ, நாம் பெற்ற இரட்சிப்பை மற்றவருக்கும் அறிவித்து அவர்களையும் (பரம) எருசலேம் பயணத்திற்கு தகுதியுள்ளவர்களாக்கும் பொழுது, நம்மோடு அனைவரையும் இலவசமாகவே (பரம) எருசலேமிற்கு கூட்டிச்செல்வார். அதே நேரத்தில் அநேகரை ஆண்டவர் அண்டை கூட்டி வந்ததற்கு நமக்கு பல

பரிசுகளையும் தருவார். ஏனெனில் **"அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள்" (தானி 12:3)** நிச்சயமாகவே பலனடைவார்கள்.

எனவே, ஆண்டவர் நமக்கு எருசலேம் செல்வதற்காண வாய்ப்புகளையும், சூழ்நிலைகளையும் தருவாரானால், நாம் தாராளமாக செல்லலாம். ஆகிலும் நமது இக்கால எருசலேம் பயணம், நமது வருங்கால எருசலேம் பயணதிற்கு ஆவிக்குரியரீதியில் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தாத வரையில் அதனால் பிரயோஜனமில்லை.


எனவே இதிலிருந்து நாம் புரிந்துகொள்வது என்னவென்றால், நாம் இப்பொழுது இருக்கிற எருசலேமிற்கு சுற்றுலா அமைப்பாளர்கள் மூலமாக போவதை பார்க்கிலும், வரப்போகிற மகிமையான எருசலேமிற்கு பிரஜைகளாய் மற்றவரையும் ஆயத்தப்படுத்தி அழைத்து செல்லும் பரலோக சுற்றுலா அமைப்பாளர்களாகவே நாம் இருக்க ஆண்டவர் விரும்புகிறார். நமக்கும் அதுவே விருப்பமாக இருக்கட்டும். அப்படியென்றால் நாம் இப்பொழுது வேறு எந்த நாட்டிற்கும், இடத்திற்கும் செல்ல வேண்டாமா? தாராளமாக செல்லலாம். ஏனென்றால் அவை எல்லாம் இன்னும் சிறிது காலத்தில் அக்கினிக்கு இரையாக போகின்றன **(2 பேதுரு 3:7)**. எனவே ஆண்டவர் அனுமதித்தால் நாம் அவற்றை போய் பார்க்கலாம். ஏனென்றால் நம்மால் அவற்றை பிறகு காண இயலாது.

எனவே சுற்றுலா அமைப்பாளர்களுடன் எருசலேம் சுற்றுலா போவதை காட்டிலும், அதே பணத்தை, நேரத்தை ஆண்டவருக்காக செலவிட்டு அநேகரை (பரம) எருசலேம் பயணத்திற்கு (குடி பெயர்தலுக்கு) தகுதியுள்ளவர்களாக்குவதே, நம் வாஞ்சையாய் இருக்கட்டும். எனவே உலகமெங்கிலும் செல்வோம், அனைவரையும் எருசலேம் நோக்கி திருப்புவோம்.

இறுதியாக, இக்கால எருசலேம் பயணத்தின் மூலம், ஒரு நாள் நாம் இதே இடத்தில் மகிமையுள்ள மறுருபமான சரீரத்தோடு, எவ்வித கவலையுமின்றி, சமாதானமாய் ஆண்டவருடைய ஆளுகையில் அவரோடு இருப்போம் என்ற எண்ணமே நமக்கு இந்நகரத்தை பார்க்கும் பொழுது உண்டாக வேண்டும். அப்பொழுதே, நமது இக்கால பயணம், நம்மை மறுபடியும் எருசலேமிற்கு ஆண்டவரோடு போக வேண்டும் என்ற விருப்பத்தையும், உத்வேகத்தையும் உண்டாக்கும், ஆமென்.

# மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும்

**மனுஷனை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம் (சங்118:8)**



நாம் பிறந்ததில் இருந்து, நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும், ஒரு சில மனிதரை சார்ந்தே நம் வாழ்க்கை பயணம் செல்கிறது. பெற்றோர், உடன் பிறந்தோர், ஆசிரியர்கள், நண்பர்கள், உற்றார் உறவினர், கணவன், மனைவி, பிள்ளைகள், வேலை ஸ்தலத்தில் உள்ளோர் என்று ஒவ்வொரு மனிதனின் / மனுஷியின் வாழ்க்கையும் இப்படிப்பட்ட மனிதர்களை சார்ந்தே / நம்பியே கடந்து செல்கிறது.

தேவன் அப்படியே நம் வாழ்க்கை முறையை உண்டாக்கியிருக்கிறார். **லூக் 2:52** கூறுகிறது இயேசுவானவரும் மனுஷர் தயவில் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார் என்று. மேலும் கிறிஸ்துவும் தம் பணியை செய்ய சீஷர்களையே (மனிதர்களையே) நம்பி அவர்களிடம் அதை ஒப்புவித்தார் **(மத்**

28:19,20). எனவே மனிதர்களை சாராமல் / நம்பாமல் ஒருவராலும் வாழ்க்கையில் எதையும் செய்ய முடியாது என்பது உண்மை.

ஆனால் **ஏசா 2:22** கூறுகிறது **"நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டுவிடுங்கள்; எண்ணப்படுவதற்கு அவன் எம்மாத்திரம்"** என்று. மேலும் மேற்கண்ட **சங் 118:8** வசனத்திலும் **"மனுஷனை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்"** என்று காண்கிறோம். மேலும் **யோ 2:23-25** வசனங்களில் **"பஸ்காபண்டிகையிலே அவர் எருசலேமிலிருக்கையில், அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு, அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும், இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை. மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்கவேண்டியதாயிருக்கவில்லை"**.

இங்கு நாம் காண்கிறபடி கிறிஸ்துவும் **"மனிதர்களை நம்பி இணங்கவில்லை"** என்று வாசிக்கிறோம். எனவே ஒருபுறம் அவர் சில மனிதரை தமது சித்தத்தை செய்ய ஏற்படுத்தினாலும், அவர் பொதுவாக மனிதரை நம்பி அவர்கள் சொல்லுக்கும், செயலுக்கும் இணங்கவில்லை. ஏனெனில் 24 வசனம் கூறுகிறது **"இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால்"** என்று, மேலும் 25 வசனம் கூறுகிறது **"மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்கவேண்டியதாயிருக்கவில்லை"** என்று. அவர் தேவனாக இருக்கிறபடியால், மனுஷர் உள்ளத்தில் இருப்பதை அவர் அறிந்திருந்தபடியால் அவரால் எந்த எந்த காரியங்களில் மனுஷரை சார வேண்டும், எவ்வெவற்றில் அவர்களை சார கூடாது என்பதை அறிந்திருந்தார்.

ஆனால் சாதாரண மனிதராகிய நம்மால் இவ்வாறு மற்ற மனிதரை ஆராய்ந்து அறிவது கூடாத காரியம். இப்படிப்பட்ட வேளைகளில் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையே **சங் 118:8** இல் காண்கிறோம். நாம் மனிதரை நம்பாமல், நம் வாழ்க்கையில் உடல் ரீதியாகவும், உள்ள ரீதியாகவும் ஒரு அடி கூட முன் செல்ல முடியாது. நம் ஆசிரியர் கூறியதை நம்பிதான் நம் அறிவை வளர்த்து கொண்டோம், வாழ்க்கையில் முன்னேறுகிறோம்.

தினமும் பேருந்து ஓட்டுநரை நம்பிதான் நாம் ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு செல்கிறோம். எனவே அவர்களை நம்பாமல், நம்மால் வாழமுடியாது. ஆனால் அதே நேரத்தில் நாம் நம்பின எதிர்பார்ப்புக்கு ஏற்றார் போல் மற்ற மனிதர்கள் நூறு சதவிகிதம் எல்லா நேரத்திலும் செயல்படுவார்களா என்பதே கேள்வி? இதன் பதில் இல்லை என்பதே ஆகும்.

நமக்கு மிகவும் நெருக்கமானவர்கள், குடும்பத்தார் முதற்கொண்டு எந்த மனிதரும் நாம் நினைத்தாற் போல் செயல்படுவதில்லை. ஏனெனில் ஒவ்வொரு மனிதரின் வாழ்வும் அவர்களை மையப்படுத்தி வாழப்படுவதே தவிர நம்மை மையப்படுத்தியது அல்ல. ஒரு ஒட்டுநரை நம்பி நாம் பேருந்தில் ஏறினாலும், பேருந்து வழியில் பழுதடைந்து நின்றால் அதற்காக ஒட்டுநர் நம்மை கொண்டுபோய் சொன்ன இடத்தில் சேர்க்க முடியவில்லையே என்று கவலைப்பட போவதில்லை. நமக்கு, நோய்க்கு மருந்து தரும் மருத்துவரும் அப்படியே. நம்முடைய ஆசிரியர்களும் அப்படியே.

இப்படியே நாம் பார்க்கபோனால், நாம் சார்ந்து இருக்கும் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு விதத்தில் ஒரு குறிப்பட்ட அளவே நாம் சார்ந்து கொள்ளகூடியவர்களாயிருக்கிறார்கள். மேலும் நாம் நம்மையே சார்ந்து வாழவும் முடியாதவர்களாய் இருக்கிறோம். ஏனெனில் அநேக நேரங்களில் நமக்கு நன்மையானது இன்னது என்று தெரிந்தும் நாம் நமது மாம்சமும் மனதும் விரும்பினவைகளையே செய்கிறோம். இதையே **ரோ 7:15-25** வசனங்களில் நாம் காண்கிறோம்.

எனவே நாம் முழுமையாய் நம்பகூடிய, சார்ந்துகொள்ளகூடிய, எல்லாவற்றிக்கும் மேலாக பற்றிக்கொள்ளகூடிய ஒருவர் உண்டென்றால் அவர் தேவன் ஒருவரே. எனவே தான் **சங் 118:8** இல் **“கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்”** என்று கூறப்பட்டுள்ளது. ஆம், ஏதோ இம்மைக்கான தேவைகளுக்காய் மாத்திரம் அவரை நம்புகிறவர்களாய் அல்ல, இம்மைக்கும், மறுமைக்குமான வாழ்க்கை முழுவதிலும் ஒவ்வொரு காலகட்டத்திலும், ஒவ்வொரு காரியத்திலும் அவரையே பற்றிக்கொண்டவர்களாய் இருப்பதே நலமாகும்.

ஏனென்றால் அவரே நமது கடந்தகால, நிகழ்கால மற்றும் வருங்கால வாழ்க்கை காரியங்கள் முழுவதையும் அறிந்தவர், அவற்றை

ஆளுகைசெய்பவர். மனுஷர் உள்ளத்திலிருப்பதை அறிந்தவர் மாத்திரமல்ல, மனுஷரின் பாதைகளை வகுப்பவரும் அவரே. “இல்லாதவைகளை இருக்கிறவைகள் போல் அழைப்பவரும்” அவரே. “நம்மை நித்திய ஜீவகரையில் சேர்ப்பவரும்” அவரே. அவரை நம்பி வாழும் வாழ்க்கை இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட, அற்புதமாய் நடத்தப்படும் வாழ்க்கையாகும். **அப் 17:28** கூறுகிறது **“ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்”** என்று.

மேலும் **சங் 22:10** கூறுகிறது **“கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டபோதே உமது சார்பில் விழுந்தேன்; நான் என் தாயின் வயிற்றில் இருந்ததுமுதல் நீர் என் தேவனாயிருக்கிறீர்”** என்று. எனவே இப்படியாய் நாம் தேவனை நம்ப / சார்ந்துகொள்ள / பற்றிக்கொள்ள, நமக்கு தேவனோடு பிரியாத நல்ல ஐக்கியம் வேண்டும். வேறு எந்த மனிதரோடு கொண்டுள்ள ஐக்கியத்தை காட்டிலும், தேவ ஐக்கியத்தை நாம் அதிகமாய் தேடினால் மனிதர் நம்மை கைவிடும் நேரங்களிலும், அவர் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார். எனவே தேவனையே சார்ந்துகொள்வோம். மனிதரையும் தேவன் தந்தருளும் எல்லைக்குள்ளே சார்ந்துகொள்வோம். ஏனெனில் (அவரே) **“இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்” (எபி 13:8)** ஆமென்.

குறிப்பு: **சங்கீதம் 118:8 என்னும் இவ்வசனம் வேதத்தின் மைய வசனமாகும். நம் வாழ்க்கையிலும் தேவனே மையமாய் இருப்பாரானால் நாம் ஒருபோதும் தனித்துவிடப்படுவதில்லை.**

# நல்ல மேய்ப்பன்

## நானே நல்ல மேய்ப்பன் (யோ 10 : 11)




பரிசுத்த வேதாகமத்தில் சபையானது பல பெயர்களை பெற்றிருந்தாலும், அவற்றில் முக்கியமானது தேவனுடைய மந்தை (ஆட்டு மந்தை) என்பதாகும். பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் ஜனங்களும் தேவ மந்தையாகவே காணப்படுகின்றனர். குறிப்பாக ஆட்டு மந்தையானது தன்னிசையாக செயல்பட கூடியதாயிராமல், எப்பொழுதும் ஒரு மேய்ப்பனுடைய கண்காணிப்பின் கீழ், அவனுடைய போஷிப்பின் கீழ், பாதுகாப்பின் கீழ் செயல்படகூடியதாக உள்ளது. அதுபோலவே தேவனுடைய ஜனங்களும் எப்பொழுதும் தேவனுடைய ஆளுகையின் கீழ், பாதுகாப்பின் கீழ், போஷிப்பின் கீழ் செயல்படகூடியவர்கள்.

ஆகிலும், பழைய ஏற்பாட்டில் தேவன் தம்முடைய ஜனங்களை மேய்க்கும்படியாக மோசே, தாவீது போன்ற சில தேவ மனிதர்களை தெரிந்தெடுத்தார். புதிய ஏற்பாட்டிலும் மேய்ப்பர் ஊழியத்தை ஏற்படுத்தி அதின் மூலம் சபை மேய்ப்பர்கள் (ஆயர்கள்) வழியாக தம்முடைய சபையை போஷித்து, பாதுகாத்து நடத்தி வருகிறார். இப்பொழுது ஒரு

மேய்ப்பனின் குணநலங்களை குறித்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து **யோவான் 10ஆம்** அதிகாரத்தில் கூறியதை காண்போம். **ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்மை நல்ல மேய்ப்பன் என்று கூறுகிறார் (யோ 10 : 11).** மேலும் பிரதான மேய்ப்பரும் அவரே. எனவே அவர் கூறும் மேய்ப்பனின் குணநலங்களை காண்போம்.

**"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல்வழியாய்ப் பிரவேசியாமல், வேறுவழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான். வாசல்வழியாய்ப் பிரவேசிக்கிறவனோ ஆடுகளின் மேய்ப்பனாயிருக்கிறான்" (யோ 10:1,2)**, மேற்கண்ட வசனங்களில் நாம் காண்கிறபடி, ஆடுகளின் மேய்ப்பனே அவற்றை நேரடியாக சந்திக்க கூடியவனாயிருக்கிறான். நல்ல மேய்ப்பராகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் நம்மை நேரடியாக நம்முடைய வாழ்க்கையில் சந்தித்து, நம்மை தம்முடைய மந்தையாக சேர்த்துகொண்டார்.

தேவனுடைய நற்செய்தியை அறிவித்து மக்களை சபையாக கூட்டிச் சேர்க்கும் மேய்ப்பர் ஊழியத்தை செய்வோரும் அப்படியாகவே மக்களை நேரடியாக (வெளிப்படையாக) சந்தித்து, எந்த ஊள் நோக்கமும் இல்லாமல் அவர்களுடைய ஆத்தும இரட்சிப்பிற்காகவே அவர்களை ஆண்டவரண்டையில் சபையாக கூட்டி சேர்கின்றனர். ஆனால் வேறுவிதமாய் மக்களை தம் பக்கம் இழுக்கும் நோக்கத்துடன் செயல்படும் மனிதரோ, கள்ளரும் கொள்ளைக்காரருமாயிருக்கிறார்கள் (யோ 10:2). எனவே இவர்கள் நல்ல மேய்ப்பர்களாயிராமல், கள்ள மேய்ப்பரும், ஆடுகளையே கொள்ளையிடுகிறவர்களுமாயிருக்கிறார்கள்.

**"வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்; ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது. அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக் கொண்டு போகிறான். அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது. அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப்**

**பின்செல்லாமல், அவனை விட்டோடிப்போம் என்றார்" (யோ 10:3,4,5).** மேற்கண்ட வசனங்களில் நாம் காண்கிறபடி, ஆடுகளின் மந்தை அண்டை வந்த நல்ல மேய்ப்பர் அவற்றை பேர் சொல்லி அழைக்கிறார். அவைகளும் அவருடைய சத்தத்தை அறிந்து அவருக்கு பின்செல்லுகின்றன. இவ்வாறாக ஆண்டவரும் நம்மையும் பெயர்சொல்லி அழைத்து நீ என்னுடையவன் என்று நம்மை சேர்த்துக்கொண்டார்.

நாமும் அவருடைய சத்தத்தை அறிந்தவர்களாய் இருப்போமானால், அவருடைய சத்தத்திற்கு (வார்த்தைக்கு) மாத்திரம் செவிக்கொடுத்து அவர் பின்சென்று, மற்ற உலக சத்தங்களை நம்மை விட்டு விலக்கிப்போடுவோம். பிரதான மேய்ப்பராகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை போலவே, அவருடைய ஊழியர்களான மேய்ப்பர்களும், தங்களுக்கென்று தேவன் கொடுத்த மந்தையின் நிலையை நன்கு அறிந்தவர்களாய், மந்தையின் தேவைகளை உணர்ந்தவர்களாய், பெயர் சொல்லி அழைப்பதுபோல, தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு ஆத்துமாவின் மேலும் கரிசனை உள்ளவர்களாய் இருக்க வேண்டும். அதேவேளையில், மந்தையோடு இப்படிப்பட்ட ஒரு நெருங்கிய உறவும், கரிசனையும் இல்லாமல் அவற்றை மேய்க்க முற்படுகிறவர்களை விட்டு அவை ஓடிப்போம்.

**"திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" (யோ 10:10),** மேற்கண்ட வசனத்தில் நாம் காண்கிறபடி, நல்ல மேய்ப்பராகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மந்தைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் (மறுபிறப்படைந்து பெற்ற புதிய ஜீவன்), அது பரிபூரணப்படவும் (கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சி) வந்தேன் என்கிறார். அதுபோலவே தேவ ஊழியக்காரரான, மேய்ப்பர்களும் தங்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட மந்தை ஆவிக்குரிய ஜீவனோடு காணப்படவும், கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியாகிய பூரண புருஷர்களாய் மாறவும் தக்கதாய் அவற்றை மேய்க்க வேண்டும். ஆனால் பொல்லாத மேய்ப்பகளின் மூலமாகவோ, ஆடுகளின் ஜீவன் (சபை ஆத்துமாக்களின் ஜீவன்) கொள்ளையாடப்பட்டு, பரிபூரணப்படுவதற்கு பதிலாக (கிறிஸ்துவின்

நிறைவான வளர்ச்சி), உலக வேஷத்தை தரித்துக் கொண்டவர்களாய் மாற்றப்படுகின்றனர்.

எல்லாவற்றிற்க்கும் மேலாக **யோ 10:11 இல் "நானே நல்ல மேய்ப்பன்: நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்"** என்று ஆண்டவர் கூறியுள்ளபடி, நல்ல மேய்ப்பராகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய ஆடுகளாகிய நமக்காக தம்முடைய ஜீவனையே கொடுத்தார். இவ்வாறாக ஊழியத்தை செய்கிற மேய்ப்பர்களும் தங்களிடம் தேவன் தந்த மந்தையை பாதுகாத்து, அவற்றின் ஜீவனை காப்பாற்ற தம் ஜீவனையும் (எல்லாவற்றையும் இழக்க) கொடுக்க ஆயத்தமாயிருக்க வேண்டும். இப்படிப்பட்ட ஊழியத்தை செய்த அநேக தேவ பிள்ளைகளை நாம் சபை வரலாற்றில் காண்கிறோம். அவர்களுடைய தியாகமான ஊழியத்தினால் இன்று எத்தனையோ இடங்களில் தேவனுக்கு மகிமையாய் சபைகள் எழும்பியிருக்கிறதை நாம் காணலாம். இவ்வாறாக அவர்கள் ஊழியத்தை செய்வதற்கு காரணம், அவர்களின் பிரதான மேய்ப்பராகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மந்தைக்காக தன் ஜீவனையே கொடுத்திருக்கிறார்.


ஆனால், வெறும் கூலிக்காகவே (ஆதாயத்திற்காகவே) மந்தையை மேய்க்க வந்த பொல்லாத மேய்ப்பன், ஓநாய் (பாடுகள், கள்ள உபதேசம்) வருகிறதை கண்டு ஆடுகளை (சபையை) விட்டு ஓடிப்போகிறான் (கவலைப்படாதிருக்கிறான்). **"அப்பொழுது ஓநாய் ஆடுகளைப்பீறி, அவைகளைச் சிதறடிக்கும். கூலியாள் கூலிக்காக வேலைசெய்கிறவனாகையால் ஓடிப்போகிறான், ஆடுகளுக்காக அவன் கவலைப்படான்" (யோ 10:12,13).**

எனவே சபை ஊழியத்தை (மேய்ப்பர் ஊழியத்தை) செய்ய அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் தங்கள் அழைப்பின் மேன்மையை உணர்ந்து, தாங்கள் தங்களுக்காக சபையை மேய்க்காமல், தங்களிடத்தில் கணக்கு கேட்கப்போகிற பிரதான மேய்ப்பராகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்காகவே, சபையாகிய மந்தையை மேய்த்து, ஆண்டவர் வருகையில் அவரண்டை சபையை ஒப்படைக்கிறவர்களாய் காணப்பட வேண்டும். **"அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்" (யோ 10:16).**

மேலும் மேய்ப்பர் ஊழியமாகிய சபை ஊழியத்தில் மற்ற ஊழியங்களாகிய சுவிசேஷம் சொல்வதும், போதகம் செய்வதும் அடங்கியிருக்கிறது. மேலும் சபையை குறித்த ஒரு தீர்க்கதரிசன பார்வை, மேய்ப்பர் ஊழியத்தை செய்பவர்க்கு தேவையாயிருக்கிறது. இவை எல்லாவற்றையும் ஒருங்கே செய்யும் பொழுது, அது அப்போஸ்தல ஊழியத்திற்கு வழியாகவும் இருக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு நல்ல மேய்ப்பனுக்கு **"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்" (சங் 23:1)** என்ற தாவீதின் அனுபவம் வேண்டும். ஏனெனில் இந்த தாவீதையே **"கறவலாடுகளின் பின்னாகத் திரிந்த அவனை (தாவீதை), தம்முடைய ஜனமாகிய யாக்கோபையும் தம்முடைய சுதந்தரமாகிய இஸ்ரவேலையும் மேய்ப்பதற்காக, (கர்த்தரே) அழைத்துக்கொண்டுவந்தார்" (சங் 78:71).** எனவே நல்ல மேய்ப்பனானவன், தன்னுடைய கையில் கொடுக்கப்பட்ட மந்தையை உண்மையுடன் மேய்த்து பிரதான மேய்ப்பராகிய ஆண்டவரண்டை கூட்டிச்சேர்ப்பானாக. **"அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்" (1 பேதுரு 5:4).** வேதத்தில் ஆண்டவர் பல இடங்களில் மேய்ப்பகளை குறித்து கூறியுள்ளார், **"அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன்" (யோ 21:25)** ஆமென்.

# உன்னதப்பாட்டின் உன்னதங்கள்



**(1) என் நேசர் என்னுடையவர், நான் அவருடையவள். அவர் லீலிபுஷ்பங்களுக்குள்ளே மேய்கிறார் (உன் 2:16)**

**நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும்** இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். (யோ 17:21)

**நான் அவர்களிலும் நீர் என்னிலும்** இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். (யோ 17:23)

நாம் **அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்**. இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரியது; **நான் கிறிஸ்துவைப்பற்றியும் சபையைப்பற்றியும் சொல்லுகிறேன்**. (எபே 5:30-32)

**(2) என்னை இழுத்துக்கொள்ளும், உமக்குப் பின்னே ஓடிவருவோம். (உன் 1:4)**

இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச்

செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும். (யோ 10:16)

அவர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: எங்கே, ஆண்டவரே, என்றார்கள். அதற்கு அவர்: பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும் என்றார். (லூக் 17:37)

நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார். (யோ 12:32)

**(3) நான் சாரோனின் ரோஜாவும், பள்ளத்தாக்குகளின் லீலிபுஷ்பமுமாயிருக்கிறேன். (உன் 2:1)**

கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.
இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளேயும், நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம். (II கொ 2:14,15)

**(4) நேசம் மரணத்தைப்போல் வலிது; நேசவைராக்கியம் பாதாளத்தைப்போல் கொடிதாயிருக்கிறது. (உன் 8:6)**

நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன். (யோ 10:15)

**(5) நான் நித்திரைபண்ணினேன், என் இதயமோ விழித்திருந்தது; கதவைத் தட்டுகிற என் நேசரின் சத்தத்தைக் கேட்டேன். (உன் 5:2)**

இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான். (வெளி 3:20)

# வாழ்க்கை படகு




கடல் என்னும் இவ்வுலகில், வாழ்க்கை என்னும் என் படகில் அநேகரோடு பயணித்து கொண்டிருந்தேன். திடீரென்று பலத்த புயல் விசீயது, இருள் சூழ்ந்தது, எந்த திசையிலும் எந்த கரையும் தென்படவில்லை. ஐயோ! ஆண்டவரே புயல் விசுகிறதே (நாச மோசங்கள்) என்றேன், ஆண்டவர் அமைதியாய் இருந்தார். எல்லாம் இருளாய் (பயங்கரங்கள்) இருக்கிறதே என்றேன், ஆண்டவர் அமைதியாய் இருந்தார். எந்த கரையும் (வழியும்) தென்படவில்லையே என்றேன், ஆண்டவர் அமைதியாய் இருந்தார். எனக்கு அருமையானவர்களை காப்பாற்றும் என்றேன், ஆண்டவர் அமைதியாய் இருந்தார். மற்ற மனிதர்கள் கடலில் (உலகத்தில்) குதித்து ஓடிவிட்டனரே என்றேன், ஆண்டவர் அமைதியாய் அது அவர்கள் வழி என்றார்.

என்னை வேறு படகில் மாற்றுமே என்றேன், ஆண்டவர் அமைதியாய் இதுதான் உன் படகு (வாழ்க்கை) என்றார். என் படகு (வாழ்க்கை) மூழ்கபோகிறது, நான் மடிய போகிறேன் என்றேன். ஆண்டவர், நானும் உன்னோடு உன் படகில் இருப்பதை ஏன் மறந்தாய் என்றார். நானோ

என்னால் இதை எதிர்கொள்ள (தாங்க) முடியவில்லை என்றேன். ஆண்டவர், நான் தான் படகை ஓட்டுகிறேன், பயப்படாதே என்றார். எனக்கு அருமையானவர்கள் படும் வேதனைகளை கண்டேன். அவர்களை அணைத்து கொண்டு, ஆண்டவரண்டையில் (அவர் பாதத்தில்) உட்கார்ந்தேன். சிறிது நேரத்தில் ஒளி வந்தது, இருள் மறைந்தது, தென்றல் விசீயது, புயல் அடங்கினது. ஆண்டவர் என் படகை நித்திய ஜீவ கரையில் சேர்த்தார்.

எனக்கு அருமையானவர்களை முதலாவது கரையில் இறக்கினேன். மிகவும் சோர்ந்து போனேன். ஆண்டவர் தம் கரத்தை நீட்டினார். அவர் கரத்தை பற்றி கொண்டு கரையில் இறங்கினேன். தூரத்தில் கடலில் குதித்தவர்கள் மாண்டு போயிருப்பதை கண்டேன். ஆண்டவரே ஏன் இதெல்லாம் நடந்தது என்றேன், ஆண்டவர் அமைதியாய் என்னை பின்பற்றி வா என்றார். இந்த போராட்டத்தில் (வாழ்க்கை படகில்) இருந்து என்னை காப்பாற்ற ஆண்டவர் பட்ட காயங்களை அப்பொழுதுதான் கண்டேன். கண்ணீரோடு அவர் பின் எனக்கு அருமையானவர்களோடு சென்றேன். பரலோக தேசத்தில் என் மோட்ச வீட்டை நோக்கி.

# சீஷத்துவம்




கிறிஸ்தவ மார்க்கம், சீஷத்துவத்திற்கு நேராய் நம்மை நடத்துகிற மார்க்கம். கிறிஸ்துவாகிய தம்மை பின்பற்றுகிற சீஷர்களையே ஆண்டவர் தேடுகிறாரேயன்றி, தம்மை அப்பத்திற்காக தேடுகிற பக்தர்களை அவர் தேடவில்லை. தம்மை பின்பற்றி, தம்முடைய பரிசுத்தத்திற்கு பங்குள்ளவர்களாகும் பொருட்டு **(எபி 12:10)** நம்மை இரட்சிக்கிறாரேயன்றி வெறும் கோட்பாடுகளையோ, சடங்குகளையோ பின்பற்ற (அல்லது செய்ய) நம்மை அழைக்கவில்லை. இப்படியாக அழைக்கப்படுகிற சீஷனுடைய தன்மைகள், தகுதிகள் சிலவற்றை பின்வருமாறு காண்போம்.

**லூக் 14:27** கூறுகிறது **"தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்"**, மேலும் **மத் 16:24**, **"அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்"** என்று கூறுகிறது. மேலும் **லூக் 14:33** கூறுகிறது **"அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்"**.

மேற்கண்ட வசனங்களின் மூலம் ஆண்டவரை பின்பற்றுகிறவனே அவருடைய சீஷனாயிருப்பான் என்றும், அவரை பின்பற்றுகிறவன் தன்னையும், தனக்கு உண்டான எல்லாவற்றையும் வெறுத்துவிட வேண்டும் என்றும் காண்கிறோம்.

**லூக் 14:26** ஆம் வசனம், அவைகள் எவை என்று நமக்கு விளக்கமாக கூறுகிறது **"யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" (லூக் 14:26)**. இப்படியாய் ஆண்டவரை பின்பற்றுகிறவர்களுக்கு ஆண்டவர் கொடுக்கும் வாக்குத்தத்தம் **"என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்தியஜீவனையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்" (மத் 19:29)** என்பதே.

மேலும் **யோ 8:12** கூறுகிறது **"மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்"**. ஆம் அவரை பின்பற்றும் பொழுது (சீஷனாயிருக்கும் பொழுது) நித்திய ஜீவனை பெற்றுக்கொள்வோம் என்பதை நாம் மேற்க்கண்ட வசனங்களில் காணலாம். இப்படியாய் ஆண்டவருடைய சீஷனாயிருக்கிறவனுடைய, **தகுதிகள்** சிலவற்றை **மாற் 3:14,15** வசனங்களில் நாம் காணலாம். **"அப்பொழுது அவர் பன்னிரண்டு பேரைத் தெரிந்துகொண்டு, அவர்கள் தம்மோடுகூட இருக்கவும், பிரசங்கம்பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பவும், வியாதிகளைக் குணமாக்கிப் பிசாசுகளைத் துரத்தும்படி அவர்கள் அதிகாரமுடையவர்களாயிருக்கவும், அவர்களை ஏற்படுத்தினார்" (மாற் 3:14,15)**.

1. **தம்மோடு கூட இருக்கவும்**: கிறிஸ்துவின் சீஷன் எப்போழுதும் ஆண்டவரோடு ஐக்கியமுடையவனாய் காணப்படுவான். **"எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது" (1 யோ 1:3)**.

2. பிரசங்கம் பண்ணும்படியாக: ஆண்டவருடைய வார்த்தையை எங்கும் அறிவிக்கிறவனாய் காணப்படுவான். **"கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" (2 கொ 2:14). "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்" (மத் 28:19,20). "அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது" (லூக் 24:47).**

3. வியாதிகளை குணமாக்குகிற, பிசாசுகளை துரத்துகிற அதிகாரம்: **"விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார்" (மாற் 16:17,18).**

மேற்கண்ட **மத் 28:19,20** வசனங்களில் நாம் காண்கிறபடி, ஒரு சீஷனுடைய பணி, சீஷர்களை உருவாக்குவதே ஆகும். மேலும் **யோ 12:26** கூறுகிறது **"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்"**. இங்கு நாம் காண்கிறபடி ஒருவன் ஆண்டவருக்காக ஊழியம் செய்கிறவனாய் (மேற்க்கண்ட விதங்களில்) காணப்படுவானானால், அவன் ஆண்டவரை பின்பற்றுகிறவனாய் (சீஷனாய்) இருக்க வேண்டும். அவரை பின்பற்றாமல் அவருடைய ஊழியத்தை செய்ய முடியாது. மேலும் **மாற்கு 3:14** இல் நாம் காண்கிறபடி அவன் ஆண்டவரோடு கூட இருப்பான். எல்லாவற்றிற்க்கும் மேலாக பிதாவானவர் நம்மை கனம் பண்ணுவார். தேவனுக்கு பிரயோஜனமான கனத்திற்குரிய பாத்திரங்களாய் நம்மை மாற்றுவார்.

இப்பொழுது நாம் ஒரு சீஷனுடைய தன்மைகள் சிலவற்றை காண்போம்.

**1 கொ 11:1** கூறுகிறது **"நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்"**, கிறிஸ்துவை பின்பற்றுகிறவன் தன்னை பிறர் பின்பற்றதக்க மாதிரியுடையவனாய், கிறிஸ்துவின் அண்டை நடத்துகிறவனாய் இருக்க வேண்டும். இதையே நாம் **2 தெச 3:9** ஆம் வசனத்திலும் காணலாம் **"உங்கள்மேல் பாரத்தை வைப்பதற்கான அதிகாரம் எங்களுக்கு இல்லையென்பதினாலே அப்படிச் செய்யாமல், நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கு நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்கவேண்டுமென்றே அப்படிச் செய்தோம்"**.

மேலும் **எபி 13:7** கூறுகிறது **"தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்"**. இங்கு நாம் காண்கிறபடி ஒரு தேவ பிள்ளையிடத்தில் இருக்கிற விசுவாசம் மற்றவரும் பின்பற்றதக்க விதமாய் காணப்படவேண்டும். மேலும் **வெளி 14:4** கூறுகிறது **"ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே; கற்புள்ளவர்கள் இவர்களே; ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே; இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்"**. இங்கு நாம் காண்கிறது, தேவனுக்கு முதற்பலன்களாக மீட்டுக்கொள்ளபட்டவர்கள், அவர் எங்கே போனாலும் அவரை பின்பற்றுக்கிறவர்களாய் இருக்கிறார்கள் என்பதே.

இறுதியாக **எபே 5:1** கூறுகிறது **"ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போலத் தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி"**, இங்கு நாம் காண்கிறபடி எல்லாவற்றிற்க்கும் மேலாக, தேவனுக்கு பிரியமான பிள்ளைகளாய், அவரை பின்பற்ற வேண்டும். வெறும் தேவனை பற்றிய அறிவினாலோ, அச்சத்தினாலோ அல்லது அவரால் எல்லாம் செய்ய / தர முடியும் என்பதினாலோ அல்ல, அவர்மீது உள்ள பிரியத்தினால் அவரை பின்பற்றுகிறவர்களாய் நாம் காணப்படவேண்டும்.

ஏனெனில் **மத் 10:42** இல் **"சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்"** என்று கூறியுள்ளபடி, நம் மூலம் தேவனுடைய

ஆசிர்வாதம் மற்றவர்களுக்கு செல்லும் வாய்க்கால்களாய் தேவன் நம்மை மாற்றுவார். தேவன்தாமே இந்த வார்த்தைகளை ஆசிர்வதிப்பாராக. நம் ஒவ்வொருவரையும் தம்முடைய (பூரண) சீஷராய் மாற்றி நித்திய ஜீவகரையில் சேர்ப்பாராக. அல்லேலூயா, ஆமென்.

# தேவனுடைய மனுஷன்

## (எலியாவின் வாழ்க்கையிலிருந்து - பாகம் 1)



**எலியா என்பவன் நம்மைப்போலப்பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை. மறுபடியும் ஜெபம்பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது (யாக் 5:17,18).**

மேற்க்கண்ட வசனத்தில் நாம் கவனிக்க வேண்டிய இரண்டு காரியங்கள் (1) எலியா தீர்க்கதரிசியிடம் இருந்து வெளிப்பட்ட தேவ வல்லமை. (2) நம்மைப்போல பாடுள்ள மனுஷன். இவை இரண்டும் வித்தியாசமான வாழ்க்கை அனுபவங்கள். முதல் அனுபவம் தேவ வல்லமையால் நிரம்பி இயற்கைக்கு மேற்ப்பட்ட காரியங்களை செய்தல், அதே நேரத்தில் இரண்டாம் அனுபவம் இவ்வுலகத்தில் உள்ள சாதாரண மனிதனை போல வாழ்க்கையின் போராட்டங்களை எதிர்கொள்தல். இன்றைய தேவ பிள்ளைகளின் வாழ்விலும் விஷேசமாக ஆண்டவருடைய ஊழியத்தை

செய்கிறவர்களின் வாழ்க்கையிலும் தேவன் இவ்விதமான இரண்டு அனுபவங்களையும் தருகிறார்.

ஒரு புறத்தில் அபிஷேகத்தால் நிரம்பி, தேவ பிரசன்னத்தையும் அவர் நடத்துதல்களையும் உணர்ந்து வாழ்க்கையில் அற்புதங்களை பெற்று வாழ்கிற வாழ்க்கை, அதே நேரத்தில் சாதாரண இவ்வுலக காரியங்களில் மற்ற மனிதர்களோடும், வாழ்க்கையின் சூழ்நிலைகளோடும் போராடுகிற போராட்டம். இவ்விரண்டையும் சமநிலையோடு எதிர்கொள்கிற பக்குவம் ஒரு தேவ பிள்ளைக்கு தேவை. அதற்காகவே நாம் உள்ளான மனிதனில் ஒவ்வொரு நாளும் வளர வேண்டும். இல்லையேல் தேவ பிரசன்னத்தில் இருக்கும் பொழுது வாழ்க்கையை மகிழ்ச்சிக்குறியதாக எண்ணி நம் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் தேவனுக்கு அர்பணிப்போம். ஆனால் வாழ்க்கையின் போராட்டங்களை காணும்பொழுது வாழ்க்கையை கசப்பாக எண்ணி, நாம் ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்திலும் சோர்வுக்குள்ளாவோம்.

இப்படிப்பட்ட அனுபவங்கள் எலியா தீர்க்கதரிசியின் வாழ்க்கையில் ஏற்பட்டது. அவற்றை நாம் காண்போம். **1 இரா 17:1** கூறுகிறது **"கீலேயாத்தின் குடிகளிலே திஸ்பியனாகிய எலியா ஆகாபை நோக்கி: என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான்"**. இங்கு வேதம் எலியாவை அறிமுகப்படுத்தும் பொழுது, அவர் மூலமாய் வெளிப்பட்ட தேவ வல்லமையை வெளிப்படுத்துகிறது. **"என் வாக்கின்படியே"** என்ற வார்த்தையானது தேவனால் அவருடைய ஊழியக்காரனுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தை குறிக்கிறது. அதே வேளையில், அடுத்த சில வசனங்களிலேயே, அவர் தன் பாதுகாப்பிற்காகவும், உணவிற்க்காகவும் ஒரு இடத்தை விட்டு மற்றொரு இடத்திற்கு செல்ல வேண்டியதாயிருந்தது.

காகங்கள் கொண்டு வரும் உணவை உண்டு, ஆற்றின் தண்ணீரை குடித்து தனிமையாய் வாழவேண்டிய சூழ்நிலைவந்தது. ஆற்றின் நீர் வற்றி போனபின்பு தேவன் அவரை சாறிபாத் ஊர் விதவையின் வீட்டில் வைத்து போஷித்தார். இங்கு தேவனால் அற்புதவிதமாய் போஷிக்கபட்டாலும், சாதாரண மனிதனுக்கு இருக்கும் ஒரு நிலையான வாழ்க்கைக்கூட இல்லாமல், தேவன் சொன்ன இடத்திற்கெல்லாம் அவர் செல்ல வேண்டியிருந்தது. இங்கு நாம் கற்றுக்கொள்கிற ஒரு பாடம், தேவனை

அறியாத மக்கள் வாழ்க்கையின் தேவைகள் எதற்கும் கவலைபடாமல், வாழ்க்கையை அனுபவித்து சுகமாய் ஓரிடத்தில் வாழ்க்கையில், தேவ வல்லமையை தங்கள் வாழ்வில் வெளிப்படுத்தும் தேவபிள்ளைகளையோ தேவன் இப்படியாய் சில போராட்டங்களுக்குள்ளாக அனுமதிக்கிறார்.

உதாரணமாக, துன்மார்க்க ஜீவியம் செய்யும் எத்தனையோ பேர் மாடமாளிகைகளை கட்டி வாழ்ந்திருக்கையில், தேவ சபையை நடத்தும் மேய்ப்பர் ஊழியத்தை செய்யும் தேவ பிள்ளைகள் தேவனை ஆராதிக்க ஓர் நிலையான இடம் இல்லாமல் கஷ்டப்படுவதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் சிலகாலம் தேவன் அவர்களை இவ்வித பாதையில் நடத்துகிறார். எனவே இப்படிப்பட்ட போராட்டங்கள் ஏற்படும் பொழுது சரீரத்தில் ஒரு வேளை சோர்வு ஏற்படலாம். ஆனால் ஆவியில் ஒருபோதும், ஒரு தேவபிள்ளை சோர்ந்துபோகக்கூடாது. அதையே நாம் எலியாவின் வாழ்விலும் காண்கிறோம்.

அநேகநாள் சென்றபின்பு (மூன்று வருடம்) மறுபடியும் தேவன் எலியாவின் மூலமாய் தன் வல்லமையை வெளிப்படுத்தினார். தேவன் நம்மை சில காலம் அமைதியாய் இருக்க சொன்னால், அமைதியாக இருக்கிற அக்காலம் தேவன் நம்மை அடுத்த நிலைக்கு ஆயத்தப்படுத்துகிற காலம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அமைதியாய் இருந்த அந்த காலத்திலும் தேவன் எலியாவின் மூலமாய் சாறிபாத் விதவையின் மகனை உயிரோடு எழுப்பி தம்முடைய வல்லமையை வெளிப்படுத்தினார். இங்கு நாம் கவனிக்க வேண்டிய மற்றொரு காரியம் **1 இரா 17:20** வசனம். இவ்வசனம் கூறுகிறது **"என் தேவனாகிய கர்த்தாவே, நான் தங்கியிருக்க இடங்கொடுத்த இந்த விதவையின் மகனைச் சாகப்பண்ணினதினால் அவளுக்குத் துக்கத்தை வருவித்தீரோ என்று கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு;"**. இங்கு நாம் தேவன் எவ்வளவாய் எலியா தீர்க்கதரிசிக்கு தாழ்மையை கற்றுக் கொடுத்திருந்தார் என்பது விளங்குகிறது.

தேவனே தன்னை போஷிக்கிறார் என்றும், இவ்விதவை அதற்கு ஒரு வாய்க்காலாய் இருக்கிறாள் என்றும் உணர்ந்த அவர், **"தீர்க்கதரிசியான என்னை போஷித்த இந்த விதவைக்கு உதவும்"** என்று கூறாமல் **"நான் தங்கியிருக்க இடங்கொடுத்த இந்த விதவை"** என்று கூறுவதிலிருந்து, தான் எவ்வளவு பெரிய தீர்க்கதரிசியாய் இருந்தாலும், தன்னை போஷிக்கிறவர் கர்த்தர் என்றும், அவருடைய திட்டத்தில் இருக்கிற (விதவை) ஒவ்வொருவரும் முக்கியமானவர்கள் என்பதையும் கற்றுக்கொள்ள தேவன் உதவிசெய்தார்.

நாமும் கூட நம் வாழ்க்கையில் தேவனிடத்தில் இருந்து பெரிய (ஆவிக்குரிய) அனுபவங்களை பெற்றிருந்தாலும், நம் வாழ்க்கையில் நம்மோடு இடைப்படுகிற ஒவ்வொரு சாதாரண மனிதர்களும் தேவ பார்வையில் முக்கியமானவர்கள் என்றும், நாம் பெற்ற அனுபவங்களினால் அல்ல தேவன் நம்மை நேசிப்பதாலேயே நம்மையும் போஷிக்கிறார், நடத்துக்கிறார் என்பதையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இறுதியாக சாறிபாத் விதவை எலியாவை குறித்து கூறின சாட்சியை **1 இரா 17:24** காணலாம் **"அப்பொழுது அந்த ஸ்திரீ எலியாவை நோக்கி: நீர் தேவனுடைய மனுஷன் என்றும், உம்முடைய வாயிலிருந்து பிறக்கும் கர்த்தரின் வார்த்தை உண்மை என்றும், இதினால் இப்போது அறிந்திருக்கிறேன் என்றாள்"**.

இங்கு நாம் கவனிக்க வேண்டிய ஒன்று எலியா பாடுள்ள மனுஷராய் இருந்தாலும் தேவனுடைய மனுஷராய் இருந்தார். கர்த்தரின் வார்த்தை அவர் மூலமாய் வெளிப்பட்டது. இதுவே ஒவ்வொரு தேவ பிள்ளையின் அனுபவமாய் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட எலியா தீர்க்கதரிசி மூலம் தேவன் சர்வ இஸ்ரவேலர் முன்பும் தம்முடைய வல்லமையை வெளிப்படுத்தினார். பாடுள்ள மனிதராய் இருந்த எலியாவை தேவனுடைய மனிதன் என்பதை எல்லாரும் அறிந்து கொள்ளும்படியாய் செய்தார். இதை நாம் அடுத்த பாகத்தில் (பாகம் 2) தியானிப்போம். ஆண்டவர்தாமே இந்த வார்த்தைகளை ஆசிர்வதிப்பாராக. நம் ஒவ்வொருவரையும் தேவ மனிதர்களாய் நிலை நிறுத்துவாராக. அல்லேலுயா, ஆமென்.

# தேவனுடைய மனுஷன்

## (எலியாவின் வாழ்க்கையிலிருந்து - பாகம் 2)



இந்த தியானத்தின் முதலாம் பாகத்தில் தேவன் எவ்வாறு எலியாவின் மூலம் செயல்ப்பட்டார் என்பதையும், போராட்டமான வாழ்க்கையின் நடுவிலும் தேவன் எவ்விதமாய் அவரை போஷித்து அவர் மூலமாய் அற்புதங்களை செய்து அவரை தேவனுடைய மனிதராய் நிறுத்தினார் என்பதையும் தியானித்தோம்.

இவ்வாறு சாறிபாத் விதவைக்கு முன் எலியாவை தேவனுடைய மனிதராய் நிறுத்தின தேவன் **(1 இரா 17:24)**, சர்வ இஸ்ரவேலர் முன்பும் தாமே மெய்யான தேவன் என்பதையும், எலியா தீர்க்கதரிசி தேவனுடைய மனுஷன் என்பதையும் வெளிப்படுத்தினார். அதை நாம் இப்பொழுது தியானிப்போம். **1 இரா 18:1** கூறுகிறது **"அநேகநாள் சென்று, மூன்றாம் வருஷமாகையில், கர்த்தருடைய வார்த்தை எலியாவுக்கு உண்டாகி: நீ போய் ஆகாபுக்கு உன்னைக் காண்பி; நான் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடுவேன் என்றார்"**. இங்கு தேவன் அவரை மறுபடியும் தன்னுடைய ஊழியத்தை தொடர்ந்து செய்யும்படியாய் அழைத்தார், அதுவும் அவருடைய ஜீவனுக்கே ஆபத்தாய் இருக்கிற சூழ்நிலைக்குள்ளாகவே அவரை நடத்தினார். இங்கு எலியா தன்னுடைய

ஜீவனை குறித்தும் கவலைப்படாமல், இராஜாவை குறித்தும் பயப்படாமல் தன் ஊழியத்தை தொடர்ந்தார்.

**1 இரா 18:17,18** வசனங்களில் **"ஆகாப் எலியாவைக் கண்டபோது, ஆகாப் அவனை நோக்கி: இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நீயல்லவா என்றான். அதற்கு அவன்: இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நான் அல்ல; கர்த்தரின் கட்டளைகளை விட்டு பாகால்களைப் பின்பற்றினதினால் நீரும் உம்முடைய தகப்பன் வீட்டாருமே இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவர்கள்"**, இங்கு எலியா எதிர்ப்பார்த்தபடியே ஆகாப் இராஜா எலியாவுக்கு எதிராய் வந்தான். ஆனால் எலியாவோ அவனுக்கு பயப்படாமல், அவனுடைய செய்கைகள் தேவனுக்கு விரோதமானவை என்பதை தைரியமாய் சொன்னான். **1 இரா 18:21** வசனத்தில் **"அப்பொழுது எலியா சகல ஜனத்தண்டைக்கும் வந்து: நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்றான், ஜனங்கள் பிரதியுத்தரமாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை"**, இங்கு எலியா கர்த்தருக்காக வைராக்கியம் பாராட்டி தேவனுடைய மந்தையாகிய இஸ்ரவேலை தேவனிடம் திருப்பும்படியாய், கர்த்தரையே முழுமனதோடு பின்பற்றும்படியாய் அறைகூவல் விடுக்கிறார்.

இன்று கிறிஸ்துவினுடைய மணவாட்டியாக உள்ள சபைக்கும் இந்த அறைகூவலே விடுக்கப்படுகிறது. உலகத்தின் கவர்ச்சிகளும், ஆடம்பரங்களும், தேவனை மேன்மைப்படுத்துவதைவிட மனிதனை மேன்மைப்படுத்துவதும், பரிசுத்த அலங்காரத்திற்கு பதிலாக உலக அலங்காரங்களும், சகோதர (சக விசுவாசிகள்) சிநேகத்திற்கு பதிலாக உலக சிநேகமும், ஆராதனைக்கு பதிலாக ஆட்டம் பாட்டங்களும், தேவ வசனத்திற்கு (போதனைக்கு) பதிலாக கலப்பான (உலக) போதனைகளும், தேவனுக்கே விரோதமான அருவருப்புகளும் இன்று உலகமெங்கும் உள்ள திருச்சபைகளில் காணப்படுகிறது. தேவனுக்கும், உலகபொருளுக்கும் ஊழியஞ்செய்ய எண்ணி, உலகத்தை கலக்குவதற்கு பதிலாக, உலகத்தால் கலக்கப்பட்டு, தன்னிடம் கொடுக்கப்பட்ட மந்தையை சிதறிப்போக செய்த மேய்ப்பர்கள் இன்று அநேகர். ஆகிலும் எலியாவை போல சில (தேவ) மனிதர்களை ஆண்டவர் இன்றும் பயன்ப்படுத்தி, அவர்களின் மூலமாய் ஒரு கூட்ட மக்களை தம்முடைய வருகைக்கென ஆயத்தப்படுத்தி வருகிறார்.

மேலும் 1 இரா 18:24 வசனத்தில் **"நீங்கள் உங்கள் தேவனுடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுங்கள்; நான் கர்த்தருடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுவேன்; அப்பொழுது அக்கினியினால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம் என்றான்; அதற்கு ஜனங்களெல்லாரும் இது நல்ல வார்த்தை என்றார்கள்"**, மேற்க்கண்ட வசனத்தில் கர்த்தரே மெய்யான தெய்வம் என்பதை விளங்க செய்வதற்காக எலியா கூறும் காரியத்தை காணலாம். இங்கு நாம் கவனிக்க வேண்டியது "அதற்கு ஜனங்களெல்லாரும் இது நல்ல வார்த்தை என்றார்கள்" என்ற வார்த்தையாகும். இந்த வார்த்தை இஸ்ரவேல் ஜனங்களுடைய அறியாமையையும், அவர்கள் எவ்வளவாய் தேவனை விட்டு விலகிபோயிருந்தார்கள் என்பதையும் நமக்கு தெளிவுப்படுத்துகிறது.

ஆபிரகாமின் காலமுதல், அவர்களுடைய அந்த கால கட்டம் வரையிலும் எவ்வளவோ அற்புதங்களையும், அதிசயங்களையும் தேவன் அவர்களுக்கு செய்திருக்கிறார். அவர்களை போஷித்து நடத்தியிருக்கிறார். மோசே மூலமாய் நியாப்பிரமாணத்தை கொடுத்திருக்கிறார், எல்லாவற்றிற்க்கும் மேலாக சாலோமோன் கட்டின தேவனுடைய ஆலயம் பிரத்தியட்சமாக அவர்களுக்கு முன் இருந்தது. பலமுறை அவர்கள் வழிவிலகி போனபொழுதெல்லாம் அவர்களை அவர் மீட்டிருக்கிறார். ஆனால் அந்த தேவனே மெய்யான தேவன் என்பதை அவர்களுக்கு மறுபடியும் நிருபித்துக்காட்ட வேண்டியிருந்தது. எலியாவின் வார்த்தைகளை கேட்டு மனந்திரும்பாமல் தேவனா, பாகாலா யார் பெரியவர் என்று அவர்கள் அறிய நினைத்தது அவர்கள் இருதயம் எவ்வளவாய் கடினப்பட்டிருந்தது என்பதை நமக்கு தெளிவுப்படுத்துகிறது. ஆகிலும் தேவன் இந்த முறையும் கிருபையாய் அவர்களுக்கு தம்முடைய வல்லமையை வெளிப்படுத்தினார். இதனால் **"அப்பொழுது: கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகனபலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது. ஜனங்களெல்லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து: கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம் என்றார்கள்" (1 இரா 18:38,39)**.

தேவனை விட்டு மக்களை வழிதப்ப பண்ணின பாகாலின் ஊழியர்களை எலியா உடனே வெட்டிப்போட்டார் **(1 இரா 18:40)**. இங்கு நாம் அறிந்து கொள்ள வேண்டிய ஒரு சத்தியம், தேவனுடைய மந்தையை (சபையை) சுத்திகரிக்கும் பொழுது, அதற்கு இடறலாய் இருப்பவர்களை அதை விட்டு அகற்றிவிட வேண்டும். அதில் ஒரு சிறிதேனும் அசதியாயிருக்கக்கூடாது.

அதற்கு பிறகு தேவன் எலியாவிடம் சொல்லியிருந்தபடியே மழையை பெய்யப்பண்ணினார் (1 இரா 18:45,46). இப்படியாய் மகிமையான ஒரு ஊழியத்தை நிறைவேற்றின பின்பு, எலியா மறுபடியும் தன் ஜீவனுக்காக ஓட வேண்டிருந்தது.

1 இரா 19:2-5 வசனங்களில் **“அப்பொழுது யேசபேல் எலியாவினிடத்தில் ஆள் அனுப்பி: அவர்களில் ஒவ்வொருவனுடைய பிராணனுக்குச் செய்யப்பட்டதுபோல, நான் நாளை இந்நேரத்தில் உன் பிராணனுக்குச் செய்யாதேபோனால், தேவர்கள் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்கள் என்று சொல்லச்சொன்னாள். அவனுக்கு அது தெரிந்தபோது எழுந்து, தன் பிராணனைக் காக்க யூதாவைச்சேர்ந்த பெயெர்செபாவுக்குப் புறப்பட்டுப்போய், தன் வேலைக்காரனை அங்கே நிறுத்திவிட்டான். அவன் வனாந்தரத்தில் ஒருநாள் பிரயாணம் போய், ஒரு சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்து, தான் சாகவேண்டும் என்று கோரி: போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்; நான் என் பிதாக்களைப்பார்க்கிலும் நல்லவன் அல்ல என்று சொல்லி, ஒரு சூரைச்செடியின்கீழ்ப் படுத்துக்கொண்டு நித்திரைபண்ணினான்”**, மேற்க்கண்ட வசனத்திலிருந்து இந்த முறை எலியா மிகவும் சோர்ந்து போனார் என்பதை காணலாம். ஆவியிலும், சரீரத்திலும் அவர் கலைத்துப்போய் இருந்தார். ஆகிலும் தேவன் தம்முடைய தூதனை அனுப்பி அவருக்கு போஜனம் கொடுத்து அவரை தொடர்ந்து ஊழியத்தை செய்ய ஏவினார். ஆகிலும் அவருடைய் மனதில் (ஆவியில்) ஏற்ப்பட்ட சோர்வை நீக்க தேவனே அவரிடம் வந்தார்.

1 இரா 19:13,14 வசனங்களில் **“அதை எலியா கேட்டபோது, தன் சால்வையினால் தன் முகத்தை மூடிக்கொண்டு வெளியே வந்து, கெபியின் வாசலில் நின்றான். அப்பொழுது, இதோ, எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம் என்கிற சத்தம் அவனுக்கு உண்டாயிற்று. அவன்: சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்திவைராக்கியமாயிருந்தேன்; இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள்; உம்முடைய பலிபீடங்களை இடித்து, உம்முடைய தீர்க்கதரிசிகளைப் பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள், நான் ஒருவன்மாத்திரம் மீதியாயிருக்கிறேன்; என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள் என்றான்”**. “இங்கே உனக்கு என்ன காரியம்” என்கிற தேவனுடைய வார்த்தையானது, நீ உன் ஊழியத்தை நிறுத்தி விட்டது என்ன? என்று தேவன் அவரிடம் கேட்பதாக உள்ளது. அதற்கு எலியாவின் பதில் மிகவும் அருமையானதாகும். இதுவே

அவர் தேவனுடைய மனிதன் என்பதற்கு ஒரு முத்திரையாக உள்ளது. இங்கு அவர் கூறுகிற மூன்று காரியங்கள் (1) தான் தேவனுக்காக வெகு பக்தி வைராக்கியமாய் இருக்கிறது (2) இஸ்ரவேல் புத்திரர் தேவனுடைய உடன்படிக்கையை தள்ளிவிட்டது (3) மற்ற தீர்க்கதரிசிகளை கொன்று தன்னையும் கொல்ல தேடுதல்.

இங்கு அவர் தன்னுடைய சரீர அலச்சல்களை குறித்து கவலைப்படாமல், ஊழியத்தில் தனக்கு உண்டான பாடுகளை குறித்து கவலைப்படாமல், இஸ்ரவேல் மக்கள் தேவனைவிட்டு விலகி போனார்களே, தேவனுக்கு உண்மையாயிருந்த தீர்க்கதரிசிகளையும் கொன்று போட்டார்களே, இவ்வாறு அரசன் முதல் மக்கள் வரை அனைவரும் தேவனை விட்டு விலகி போனார்களே, தான் தேவனுக்காக இவ்வளவு வைராக்கியமாய் ஊழியம் செய்தும் மக்களின் மனது இவ்வளவு கடினமாய் இருக்கிறதே, கர்த்தருடைய வார்த்தையை கூறின காரணத்தினால் தன்னையும் கொல்ல தேடுகிறார்களே என்று தன் வியாகுலத்தையே அவரிடம் கூறினார்.

இதைகேட்ட ஆண்டவர் அவருக்கு பதிலாக கூறிய வார்த்தை **1 இரா 19:18 "ஆனாலும் பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்களையும், அவனை முத்தஞ்செய்யாதிருக்கிற வாய்களையுமுடைய ஏழாயிரம்பேரை இஸ்ரவேலிலே மீதியாக வைத்திருக்கிறேன் என்றார்"** என்பதே. இதுவே இன்றைய காலகட்டத்திலும் நடந்து வருகிறது. தேவ ஜனங்களிடத்தில் காணப்படும் குளிர்ந்துபோன நிலையை எண்ணி உண்மையான தேவனுடைய ஊழியர்கள் பலர் தேவனிடம் கண்ணீர் வடிக்கின்றனர். தாங்கள் உண்மையாய் ஊழியம் செய்தும், சத்தியத்தை சொல்லியும், அதை கேட்க மனதில்லாமல் உலகத்தோடு கலந்து, கிறிஸ்து மூலமாய் உண்டான தேவனுடைய உடன்படிக்கையை தள்ளிப்போடுகிற கிறிஸ்தவர்களை குறித்தும், தங்களின் கள்ள (கலப்பட) உபதேசத்தினால் மக்களை வஞ்சித்து சபையை சிதறடிருக்கிற கள்ள ஊழியர்களை குறித்தும் தேவனிடம் போராடுகின்றனர். ஆனால் அவர்களுக்கு தேவனின் பதில் எலியாவிடம் கூறியது போலவே, தேவனுக்காக வாழ்கிற ஒரு கூட்ட மக்கள் உலகமெங்கும் இருக்கிறார்கள் என்பதே.

மேலும் **1 இரா 19:15,16** வசனங்களில் **"அப்பொழுது கர்த்தர் அவனைப் பார்த்து: நீ தமஸ்குவின் வழியாய் வனாந்தரத்திற்குத் திரும்பிப்போய், ஆசகேலைச் சீரியாவின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணி, பின்பு நிம்சியின் குமாரனாகிய யெகூவை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணி, ஆபேல்மேகொலா ஊரானான சாப்பாத்தின்**

**குமாரனாகிய எலிசாவை உன் ஸ்தானத்திலே தீர்க்கதரிசியாக அபிஷேகம்பண்ணு",** இங்கு நாம் காண்கிறபடி தேவன் எலியாவை உற்சாகப்படுத்தி தன்னுடைய ஊழியத்தை தொடர்ந்து செய்யும்படியாய், அவருக்கு பின்பாக ஊழியத்தை தொடர்ந்துசெய்ய ஊழியரை எழுப்பும்படியாய் கூறுகிறார்.

தேவனிடம் இருந்து ஆறுதலான வார்த்தைகளை பெற்ற எலியா, பின்பு எந்தவித தயக்கமும், பயமும் இன்றி தன்னுடைய ஊழியத்தை தொடர்ந்தார். இங்கு நாம் உணர்ந்து கொள்ளவேண்டிய ஒரு மேலான காரியம், ஓர் உண்மையான ஊழியன், ஊழியத்தினிமித்தமும், தன்னுடைய சரீர பாடுகளின் நிமித்தமும் கலங்கி நிற்கும் பொழுது, தேவனே நேரடியாக வந்து அவர்களை தேற்றுகிறார் என்பதை நாம் அறியலாம். பாடுள்ள மனிதராய் இருந்த எலியா தேவனுடைய மனுஷன் என்பதற்கு தேவனே அத்தாட்சியாய் இருக்கிறார் என்பதை இது விளக்குகிறது.

இதன் பிறகு அவர் சோர்ந்து போகவில்லை, தொடர்ந்து தன்னுடைய ஊழியத்தை தேவனுடைய மனுஷன் என்ற அதிகாரதோடு செய்தார். அதை நாம் அடுத்த பாகத்தில் (பாகம் 3) காணலாம். தேவன்தாமே இந்த வார்த்தைகளை ஆசிர்வதிப்பாராக. எலியாவை போன்ற ஊழியர்களை இந்த கடைசி காலங்களில் எழுப்புவாராக. அல்லேலுயா, ஆமென்.

# தேவனுடைய மனுஷன்

## (எலியாவின் வாழ்க்கையிலிருந்து - பாகம் 3)



தேவனுடைய மனுஷன் என்னும் இத்தொடர்தியானத்தில், தேவன் பாடுகள் மத்தியிலும் எலியாவை எவ்வாறு தேவனுடைய மனுஷனாய் விளங்க பண்ணினார் என்பதை தியானித்தோம். மனிதர்களை எண்ணியும் சூழ்நிலைகளை எண்ணியும் அவர் சோர்ந்து போனபொழுது, தேவனே அவரை தேற்றி, அவர் மூலமாய் அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்தார். ஒரு சாதாரண தேவ பிள்ளையின் ஆவிக்குரிய வாழ்விலும், இப்படிப்பட்ட போராட்டங்கள் எழும்பொழுது, அவற்றை மேற்கொண்டு தேவனுக்கு உண்மையாய் வாழ எலியாவின் அனுபவங்கள் நமக்கு ஒரு பாடமாய் இருக்கிறது.

இந்த 3ஆம் பாகத்தில், எலியா எவ்வாறு தேவனுடைய மனுஷன் என்ற அதிகாரத்தை வெளிப்படுத்தினார் என்பதையும், ஒரு தேவனுடைய மனுஷனுக்கு கிடைக்கும் மகிமையான (மறுருபமான) முடிவையும் குறித்து நாம் தியானிப்போம். **1 இரா 21ஆம்** அதிகாரம், இஸ்ரவேலின் இராஜாவாகிய ஆகாப், நாபோத் என்பவனுடைய திராட்சத் தோட்டத்தை, அவனை கொன்று எவ்வாறு எடுத்துக்கொண்டான் என்பதை கூறுகிறது. ஆகாபும், அவன் மனைவியாகிய யேசபேலும் தேவனுக்கு விரோதமாயும், மனுஷருக்கு விரோதமாயும் காரியங்களை செய்த பொழுது, தேவன்

மறுபடியும் எலியாவை ஆகாபினிடத்தில் அனுப்பினார். இந்த முறை, எலியா சற்றும் பயப்படாமல், ஆகாபினிடத்திற்கே சென்று **"கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய நீ உன்னை விற்றுப்போட்டாய்"** என்று உரைத்தார் (**1 இரா 21:20**).

ஆகாப் இராஜாவாய் இருந்தும், தன்னை எதிர்க்கும் எவரையும் அழித்துவிடும் மனம் உடையவர்களாய் அவனும், அவன் மனைவியும் இருந்தும், **1 இரா 21:20** கூறுகிறபடி, **"அப்பொழுது ஆகாப் எலியாவை நோக்கி: என் பகைஞனே, என்னைக் கண்டுபிடித்தாயா என்றான்"**, இராஜா எலியாவை பகைஞனாய் நினைத்தும், சற்றும் பயப்படாமல் அவனிடத்திற்கே சென்று தேவனுடைய வார்த்தையை அறிவித்தார். ஆகாபின் மேலும், யேசபேலின் மேலும் வரும் தேவனுடைய நியாயத்திர்ப்பை கூறினார். இவ்வளவுகாலமாய் ஆகாபுக்கு பயந்து, மறைந்து வாழ்ந்த எலியா இப்பொழுது தேவ பெலத்தோடு, தேவ மனுஷனாக தன்னை அவனுக்கு முன் நிறுத்தினார்.

இதற்கு முக்கிய காரணம் **1 இரா 19:14-18** வசனங்களில் காண்கிறபடி, தேவன் அவரை நேரடியாக வந்து தேற்றினதே ஆகும். இங்கு நாம் அறிந்து கொள்கிற ஒரு சத்தியம், ஒரு தேவ பிள்ளை, தேவனால் தேற்றப்படும் பொழுது, பொல்லாத மனிதர்களையும், சத்துருவாகிய பிசாசானவனையும் எதிர்த்து நிற்கிற பெலனை பெற்றுக் கொள்கிறான். குறிப்பாக தேவ ஊழியர்கள், ஊழியத்தில் கனிகள் இல்லாமல் இருக்கிற சூழ்நிலைகளில் தேவனால் தேற்றப்படும் பொழுது, சத்துருவின் கோட்டைகளை தகர்த்து எறியும் வல்லமையை பெற்றுக்கொள்கின்றனர்.

எனவே ஒரு தேவ பிள்ளைக்கு முக்கியமானது தேவ உறவே ஆகும். தேவ பிரசன்னத்தில் பெற்றகொள்கிற பெலன் சத்துருவை எதிர்த்து நிற்காதபடி செய்துவிடும். அதையே நாம் ஆகாபின் காரியத்திலும் காண்கிறோம். பகைஞனே என்று ஆரம்பித்த ஆகாப், எலியாவின் வார்த்தையினால் அடங்கி தேவனுக்கு முன்னால் தன்னை தாழ்த்தினான். ஊழியத்திற்கு எதிர்த்து நிற்கிற எந்த வல்லமையும், ஒரு தேவபிள்ளை தேவ பிரசன்னத்தினால் (உறவினால்) நிறைந்து இருக்கும்பொழுது ஒன்றும் இல்லாமல் போகும். அதே நேரத்தில், ஆகாபின் காரியத்தில் உண்டானது போல, மனமாறுதலையும் உண்டாக்குகிறது. ஆகிலும் ஆகாப் முழுமையாய் தேவனிடத்தில் திரும்பவில்லை. அதை நாம் பின்வரும் அதிகாரத்தில் (**1 இரா 22**) காணலாம்.

இது எவ்வளவாய் ஆகாபின் இருதயமும், யேசபேலின் இருதயமும் கடினப்பட்டிருந்தது என்பதை காண்பிக்கிறது. ஆகிலும் இப்படிப்பட்ட கடின மனதின் முன்னும், பயமில்லாமல் தேவ மனுஷனாய் தன்னை வெளிப்படுத்தின் எலியாவுக்கு, தேவன் எவ்வளவு இரக்கமுள்ளவர், கிருபையுள்ளவர் என்பதையும் தேவனே அவருக்கு விளங்க செய்தார் (**1 இரா 21:29**).

இதன் பிறகு **2 இரா 1ஆம்** அதிகாரத்தில் ஆகாபின் குமாரனான அகசியாவின் காலத்தில் எலியாவின் ஊழியத்தை காண்கிறோம். இங்கும், **2 இரா 1:2-4 "அகசியா சமாரியாவிலிருக்கிற தன் மேல்வீட்டிலிருந்து கிராதியின் வழியாய் விழுந்து, வியாதிப்பட்டு: இந்த வியாதி நீங்கிப் பிழைப்பேனா என்று எக்ரோனின் தேவனாகிய பாகால்சேபூபிடத்தில் போய் விசாரியுங்கள் என்று ஆட்களை அனுப்பினான். கர்த்தருடைய தூதன் திஸ்பியனாகிய எலியாவை நோக்கி: நீ எழுந்து, சமாரியாவுடைய ராஜாவின் ஆட்களுக்கு எதிர்ப்படப்போய்: இஸ்ரவேலிலே தேவன் இல்லையென்றா நீங்கள் எக்ரோனின் தேவனாகிய பாகால்சேபூபிடத்தில் விசாரிக்கப்போகிறீர்கள்? இதினிமித்தம் நீ ஏறின கட்டிலிலிருந்து இறங்காமல், சாகவே சாவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்பதை அவர்களோடே சொல் என்றான்; அப்படியே எலியா போய்ச் சொன்னான்"** வசனங்களில் நாம் காண்கிறபடி, அகசியாவும் தன் தகப்பனை போல தேவனை விட்டு விலகி பாகாலை தேடினான். இதனால் அவனுக்கு வரும் முடிவை எலியாவை கொண்டு தேவன் அறிவித்தார். அதை கேட்ட அகசியா, தன் தகப்பனான ஆகாபை போல தன்னை தாழ்த்தாமல் எலியாவை பிடித்து வர ஆட்களை அனுப்பினான். **2 இரா 1:7-17** வசனங்கள், எலியா எவ்வாறு தன்னை தேவ மனுஷனாய் வெளிப்படுத்தினார் என்பதற்கு மற்றுமொரு சாட்சியாய் உள்ளது.

**"தேவனுடைய மனுஷனே, ராஜா உன்னை வரச்சொல்லுகிறார்"** என்று கூறின தலைவனிடம், **"நான் தேவனுடைய மனுஷனானால், அக்கினி வானத்திலிருந்து இறங்கி, உன்னையும் உன் ஐம்பதுபேரையும் பட்சிக்கக்கடவது"** என்று கூறினார். **"உடனே அக்கினி வானத்திலிருந்து இறங்கி, அவனையும் அவன் ஐம்பதுபேரையும் பட்சித்தது"**. இங்கு நாம் கற்றுகொள்கிற பாடம் இத்தலைவனை போல, மனுஷ அதிகாரத்திற்கு கீழ்படிந்து, தேவனையும், தேவ பிள்ளைகளையும் எதிர்த்து நிற்போரின் முடிவை நாம் காணலாம்.

ஒருபுறம் எலியா தேவனுடைய மனுஷன் என்பதற்கு இது சாட்சியாய் உள்ளது, அதே நேரத்தில் உலக வல்லமைகளுக்கு கீழ்படிந்து அல்லது அதை நம்பி, தேவ வல்லமைக்கு எதிர்த்து நிற்போரின் முடிவுக்கும் இது சாட்சியாய் உள்ளது. இன்றைய காலகட்டத்திலும், உலக வல்லமைகளை நம்பி அல்லது அதற்கு கீழ்படிந்து தேவ பிள்ளைகளையும், தேவ ஊழியர்களையும், ஊழியத்தையும் எதிர்க்கிற மக்கள் உண்டு. அவர்கள் ஒவ்வொருவர் முடிவும் அக்கினியினால் சுட்டெரிக்கப்பட்டு போவதே ஆகும். தேவ பிள்ளைகளை தொடுகிற எவரையும் தேவன் மடங்கடிக்காமல் விடமாட்டார். இதுவும் நாம் தேவ பிள்ளை (தேவ மனுஷன்) என்பதற்கு ஒரு சான்றாகும்.

ஆகிலும் தேவ வல்லமைக்கு கீழ்படிந்து, தேவ பிள்ளைகளின் அதிகாரத்தை உணர்கிறவர்களுக்கு தேவன் கிருபை அளிக்கிறார். அதையே நாம் முன்றாவது தலைவனின் காரியத்தில் **2 இரா 1:13,14** வசனங்களில் காண்கிறோம். மேலும் **2 இரா 1:15-17 "அப்பொழுது கர்த்தருடைய தூதன் எலியாவை நோக்கி: அவனோடேகூட இறங்கிப்போ, அவனுக்குப் பயப்படாதே என்றான்; அப்படியே அவன் எழுந்து அவனோடேகூட ராஜாவினிடத்திற்கு இறங்கிப்போய், அவனைப் பார்த்து: இஸ்ரவேலிலே தேவன் இல்லையென்றா நீ எக்ரோனின் தேவனாகிய பாகால்சேபூபிடத்தில் விசாரிக்க ஆட்களை அனுப்பினாய்; ஆதலால் நீ ஏறின கட்டிலிலிருந்து இறங்காமல் சாகவே சாவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். எலியா சொன்ன கர்த்தருடைய வார்த்தையின்படியே அவன் இறந்துபோனான்"**, மேற்கண்ட வசனங்களில் நாம் காண்கிறபடி எலியா அகசியாவிடமும் நேரடியாக சென்று தேவ எச்சரிப்பை அறிவித்தார். அதன்படியே அவன் இறந்து போனான். எலியாவை ஒருவராலும் தொடகூட முடியவில்லை. ஏனெனில் அவர் தேவனின் கண்மணியாய் இருந்தார். தேவ பிள்ளைகளுக்கு (தேவ மனுஷனுக்கு) தேவனுடைய பாதுகாப்பு எப்பொழுதும் உண்டு.

**2 இரா 2ஆம்** அதிகாரத்தில் தேவ மனுஷனாகிய எலியா பரலோகத்திற்கு எடுத்துகொள்ளபடுவதை நாம் காணலாம். பழைய ஏற்பாட்டில் எத்தனையோ தேவ பிள்ளைகள், ஊழியர்களுக்கு கிடைக்காத பாக்கியத்தை தேவன் எலியாவிற்கு தந்தார். **2 இரா 2:11 "அவர்கள் பேசிக்கொண்டு நடந்துபோகையில், இதோ, அக்கினி ரதமும் அக்கினிக் குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து இருவரையும் பிரித்தது; எலியா சுழல்காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான்"**, மேற்கண்ட வசனத்தில் நாம் காண்கிறபடி, மரணத்தை காணாமல், மாம்ச அழிவை காணாமல், அக்கினி


ரதமும், அக்கினிக் குதிரைகளின் மூலமும் பரலோகத்திற்கு ஏறிப்போவது மகிமையான ஒரு காரியமாகும்.

இங்கு நாம் கவனிக்க வேண்டிய மற்ற சில சத்தியங்கள், **2 இரா 2:7,8 "தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஐம்பதுபேர் போய், தூரத்திலே பார்த்துக்கொண்டு நின்றார்கள்; அவர்கள் இருவரும் யோர்தான் கரையிலே நின்றார்கள். அப்பொழுது எலியா, தன் சால்வையை எடுத்து முறுக்கித் தண்ணீரை அடித்தான்; அது இருபக்கமாகப் பிரிந்தது; அவர்கள் இருவரும் உலர்ந்த தரைவழியாய் அக்கரைக்குப் போனார்கள்"**, வசனங்களில் நாம் காண்கிறபடி, யோர்தான் நதியை தன் சால்வனையினால் பிளந்து போட்டார். இது அவருக்குள் இருந்த ஆவியின் வல்லமையை வெளிப்படுத்துகிறது. இதனால் தான் **2 இரா 2:9 "அவர்கள் அக்கரைப்பட்டபின்பு, எலியா எலிசாவை நோக்கி: நான் உன்னைவிட்டு எடுத்துக்கொள்ளப்படுமுன்னே நான் உனக்குச் செய்யவேண்டியது என்ன, கேள் என்றான். அதற்கு எலிசா: உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்கும்படி வேண்டுகிறேன் என்றான்"**, வசனத்தில் நாம் காண்கிறபடி எலிசா தீர்க்கதரிசி உம்மிடத்தில் உள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய் வேண்டும் என்று கேட்டார், அதனை பெற்றுக் கொண்ட எலிசாவும் தேவனுக்கு வல்லமையான ஒரு ஊழியராய் விளங்கினார். இக்காலகட்டத்தில் வாழ்கிற நாமும், இவ்வாறாகவே தேவ பிள்ளைகளாக வாழ்வோமானால், எலியாவுக்கு கிடைத்ததை காட்டிலும், மகிமையான விதத்தில் நாம் பரலோகத்தில் பிரவேசிக்க முடியும். காரணம், புதிய ஏற்பாட்டில், நாம் தேவ மனிதர்களாய், ஊழியர்களாய் மாத்திரமல்ல தேவ பிள்ளைகளாய் இருக்கிறோம். நம்மை வரவேற்க கிறிஸ்து நமக்காக காத்துக்கொண்டிருக்கிறார்.

தேவனுக்கு சித்தமானால், மரணத்தை காணாமலேயே இரகசிய வருகையில் நாம் மறுரூபமான சரீரத்தோடு கிறிஸ்துவை மத்திய ஆகாயத்தில் சந்திக்கலாம். அவரோடு கூட ஆளுகை செய்யலாம். மகிமையான வாடாத கிரீடத்தை பெறலாம். எனவே தேவனுடைய மனுஷனாய் வாழ்ந்து, பரலோகத்திற்கு ஏறிப்போன எலியாவின் வாழ்க்கை மகிமையானதாய் காணப்பட்டாலும், அதைக்காட்டிலும் மகிமையான வாழ்வை தேவன் நமக்கு தந்திருக்கிறார். எனவே எலியாவை போல தேவ மனிதராய் (பிள்ளையாய்) வாழ்ந்து, மகிமையான வாடாத கிரீடத்தை பெற்றுக் கொள்வோம், அல்லேலூயா, ஆமென்.

# கிறிஸ்துவின் நற்கந்தம்

## நான் சாரோனின் ரோஜாவும், பள்ளத்தாக்குகளின் லீலிபுஷ்பமுமாயிருக்கிறேன். (உன் 2:1)




ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை வேதம் சாரோனின் ரோஜா என்று வர்ணிக்கிறது. சாரோன் என்பது ஒரு சமவெளி பூமியாகும். அங்கு பூத்து குலுங்கி வாசனை வீசும் ரோஜா மலராய் நமது ஆண்டவர் இருக்கிறார். இந்த ரோஜா மலரின் வாசனையால் சாரோன் சமவெளி நிறைந்திருந்தது. நமது வாழ்வும் சாரோன் சமவெளியை போல கிறிஸ்துவாகிய ரோஜா நம்மில் வளர்ந்து பெருகவும் (நாம் சிறுகவும்) **(யோ 3:30)**, அவருடைய மணம் நமது வாழ்வில் வீசப்படவும் வேண்டும்.

இதையே நாம் **2 கொ 2:14-16** வசனங்களிலும் காண்கிறோம். **"கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம். இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளேயும், நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம். கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்திற்கேதுவான மரணவாசனையாகவும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவவாசனையாகவும் இருக்கிறோம்".**

கிறிஸ்துவை நமது வாழ்வின் செயல்கள் மூலமாய் மற்றவர்கள் காணும்படியாய், நமது வாயின் வார்த்தைகளின் மூலமாய் மற்றவர்கள் அறிந்து கொள்ளும்படியாய் காணப்படுவதே அவரது வாசனையை வீசுவதாகும். **15ஆம் வசனத்தில்** கூறப்பட்டுள்ளப்படி "கிறிஸ்துவின் நற்கந்தமாய்" ஒவ்வொரு கிறிஸ்தவனும் வாழ வேண்டும்.

ஆதி அப்போஸ்தல காலத்தில் சபையில் இருந்த விசுவாசிகள் இவ்வாறு காணப்பட்டதாலேயே அவர்களை கிறிஸ்தவர்கள் **(அப் 11:26)** என்று அழைத்தனர். கிறிஸ்துவின் நற்கந்தமாய் நாம் இருக்கும்பொழுது, இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவ வாசனையாகவும், அதாவது சபையை கட்டி எழுப்புகிறவர்களாய், உடன் விசுவாசிகளுக்குள் கிறிஸ்துவின் ஜீவனை கடத்துக்கிறவர்களாய், அவர்களை பெலப்படுத்துகிறவர்களுமாய் இருப்போம். அதே நேரத்தில் கெட்டுபோகிறவர்களுக்குள்ளே மரணவாசனையாகவும், அதாவது கிறிஸ்துவை விசுவாசியாதவர்களாய், நித்திய ஜீவனுக்கு அபாத்திரராய், கிறிஸ்துவுக்கு எதிர் நிற்கிறவர்களாய் காணப்படுகிறவர்களை கடிந்துக் கொண்டு, நித்திய நியாயத்திர்ப்பும், நரக ஆக்கினையுமே அவர்களுக்கு முடிவாயிருக்கிறது என்பதை அறிவிக்கிறவர்களுமாய் நாம் இருப்போம்.

இப்படிப்பட்ட ஊழியத்தையே புதிய ஏற்பாடு முழுவதும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து முதற்கொண்டு, அப்போஸ்தலர்கள் மற்ற சுவிசேஷகர்கள் வரை செய்தனர். கிறிஸ்துவின் வார்த்தையை (சத்தியத்தை) மனோ வாஞ்சையாய் கேட்டவர்களுக்கு, ஆழமான, இரகசியமான சத்தியங்களையும், அதே நேரத்தில் சத்தியத்திற்கு எதிர்த்து நின்றவர்களுக்கு, நித்திய நியாயத்திர்ப்பையும் பலனாக அறிவித்தனர். **ரோ 6:22,23** வசனங்களிலும் பவுல் அப்போஸ்தலர் இதனையே வலியுறுத்துகிறார். **"இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன். பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்"**.


பழைய ஏற்பாட்டிலும் கிறிஸ்துவின் நற்கந்தமாய் யோசேப்பு, தானியேல் போன்றோர் காணப்பட்டனர். அவர்கள் எங்கு இருந்தாலும், அவர்களோடு இருந்த ஆண்டவரால் அவர்கள் அறியப்பட்டனர். கிறிஸ்துவுக்கு நம்மை ஜீவபலியாய் ஒப்புக்கொடுக்கும் பொழுது **(ரோ 12:1)**, அவரது நற்கந்தமாய் நாம் மாறுகிறோம். இதையே பவுல் **கலா 2:20** கூறுகிறார் **"கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள்**

**பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்"** என்றும் மேலும் **கலா 6:17இல் "கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன்"** என்றும் கூறுகிறார்.

எனவே கிறிஸ்துவின் நற்கந்தமாய், சாரோனின் ரோஜாவின் வாசனையை வீசுகிறவர்களுமாய் வாழ்வோம். ஏனெனில் **எபே 5:2** கூறுகிறது **"கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்"**, என்று. ஆமென், அல்லேலூயா.

# பரிசுத்தம்

**அப்பொழுது நான்: ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்; சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே என்றேன் (ஏசா (6:5).**




மேற்கண்ட ஏசாயா தீர்க்கதரிசியின் அறிக்கையே நம்முடைய அறிக்கையாகவும் இருந்திருக்கும். அன்று பரலோக பலிபீடத்திலிருந்து எடுக்கப்பட்ட நெருப்புத் தழலால் ஏசாயா தீர்க்கதரிசி சுத்தீகரிக்கப்பட்டது போல, இன்று நாம் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்ததால் சுத்தமாக்கப்பட்டிருக்கிறோம் **(1 பேதுரு 1:19)**, தேவனுடைய பிள்ளைகளாய், அவருக்கென ஊழியம் செய்ய அழைக்கப்பட்டிருக்கிறோம். கிறிஸ்துவின் இரத்தம் நம்மை முற்றிலுமாய் பாவத்திலிருந்து விடுவித்திருக்கிறது. பாவ மன்னிப்பின் நிச்சயத்தை நாம் பெற்றிருக்கிறோம். அதே நேரத்தில் மேற்கண்ட வசனத்தில் மற்றொரு காரியமும் கூறப்பட்டிருக்கிறது அது **அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்** என்பதாகும்.

இன்றைய காலகட்டத்திலும் நம்முடைய அனுபவமும் இதுவேயாகும். நாம் தேவனால் சுத்திகரிக்கப்பட்டிருந்தாலும், பாவம் நிறைந்த இந்த உலகத்திலேயே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பாவத்தில் இருந்து விடுதலை பெற்றாலும், பாவத்தின் சூழலில் இருந்து நாம் இன்னும் விடுதலைப் பெறவில்லை. அதனாலேயே **கலா 5:17** இல் கூறப் பட்டுள்ளப்படி **“மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள்**

**செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது"**, நமது மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்திற்கு விரோதமாகவும் போராடுகிறது. நாமும் பல வேளைகளில் நமது வார்த்தையிலும், சிந்தனையிலும், பார்வையிலும், செயலிலும் பாவத்தில் வீழ்ந்துவிடுகிறோம். ஆகிலும் தேவ கிருபை நாம் அதற்காய் வருத்தப்பட்டு அறிக்கையிட்டு மனம் திரும்பும் பொழுது நமது பாவங்களை மன்னிக்கிறது.

ஆகிலும் நாம் நம்மை சுற்றியுள்ள உலகத்தை காணும் பொழுது, அங்கு நடக்கும் பொல்லாத பாவகாரியங்களும், பிசாசின் கிரியைகளும், தேவனுக்கு விரோதமான செய்கைகளும், தேவ பிள்ளைகளை துன்புறுத்துகின்ற காரியங்களும், தேவன் ஏன் இதை எல்லாம் அனுமதித்துயிருக்கிறார் என்று எண்ண தோன்றுகிறது. மனிதர்களின் இருதயம் கடினப்பட்டு, தேவனுக்கு கீழ்படியாமல், அற்ப காரியங்களுக்காய், பொருளுக்காய், பதவிக்காய், சுகபோகத்திற்காய், தன்னையும் அழித்துகொண்டு, மற்ற மனிதர்களையும் அழிவின் பாதைக்கு கொண்டு செல்வோர் ஏராளம்.

ஆனால் இதில் எதைக்குறித்தும் உலகம் (உலக மக்கள்) கவலைப்படாமல் இன்னும் எவ்வாறு பாவத்தில் ஈடுபடலாம் என்பதிலும், பாவத்தில் வாழ்வோரை கண்டிப்பதற்கு பதிலாக அவற்றை ஊக்குவிப்பதையும், அதற்காய் உலக அரசாங்கங்களே சட்டத்தை இயற்றுவதையும் காணலாம். இன்னும் சிலபேர் இப்படிப்பட்ட பாவகாரியங்களில் வாழ்ந்து கொண்டே தேவனையும் பிரியப்படுத்தலாம் என்று முயற்சிப்பதும், அதையும் நியாயப்படுத்திடும் தேவ சபையில் இருக்கும் சிலரையும் நாம் காணும்பொழுது, தேவன் ஏன் மொனமாயிருக்கிறார் என்று நாம் எண்ணலாம்.

ஆகிலும், **பிரசங்கி 12:14** கூறுகிறபடி **"ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்"**, தேவன் ஒவ்வொரு காரியத்திற்கான நியாயத்திர்ப்பையும் நிறைவேற்றியே தீருவார். சுட்டெரிக்கப்பட்டு போவதே இவை ஒவ்வொன்றின் முடிவாகும் **(எபி 6:8)**. தேவன் சகலத்தையும், சகலரையும் நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார், ஒருவராகிலும் தப்பி போவதில்லை. தேவன் நம்மை இப்படிப்பட்ட சூழலில் வைத்திருப்பதன் காரணம், இப்படிப்பட்ட உலகத்தில் இருந்தே நாம் மீட்கப்பட்டது போல அவர்களும் மீட்க படமுடியும் என்பதற்காகவே. எனவே நாம் நம்மையும் பரிசுத்தமாய் காத்துக்கொண்டு,

மற்றவர்களுக்காகவும் காரியங்களை செய்ய வேண்டும். அதுவே நம் ஒவ்வொருவருக்கும் தேவன் கொடுத்த ஊழியமாகும்.

ஆனால் அதே நேரத்தில் மரணத்துக்கு எதுவான பாவத்தை செய்யும் பொழுது, **1 யோ 5:16** இல் கூறப்பட்டுள்ளபடி **"மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால், அவன் வேண்டுதல்செய்யக்கடவன், அப்பொழுது அவனுக்கு ஜீவனைக் கொடுப்பார்; யாருக்கென்றால், மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைச் செய்தவர்களுக்கே; மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு, அதைக்குறித்து வேண்டுதல்செய்ய நான் சொல்லேன்"**, அவர்களுக்காக நாம் வேண்டுதல் செய்ய முடியாது.

வேதத்தில் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பாவம் செய்கிறவன் மன்னிக்கப்படான் என்று ஆண்டவர் கூறியுள்ளார், **"எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை" (மத் 12:32)**. பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான காரியங்களை செய்வது மட்டுமல்ல, ஆவியானவரின் கிரியை அல்லாததை ஆவியானவரின் கிரியை என்று சொல்வதும் அல்லது அதை ஆமோதிப்பதும் ஆவியானவருக்கு விரோதமான செய்கையே ஆகும். இப்படிப்பட்ட பரிசுத்த குலைச்சலே இன்று சபைகளில் காணப்படுகிறது. பிசாசிற்கு இடம் கொடுத்து, தங்கள் தேவ அழைப்பில் இருந்து விழத்தள்ளப்பட்டவர்களால் வஞ்சகமாய் நடைபெறும் இப்படிப்பட்ட காரியங்களால் அநேக தேவ பிள்ளைகள் வழிவிலகி போகின்றனர். எனவே ஒரு தேவ பிள்ளை உலகத்தில் இருக்கிற அசுத்ததிலிருந்து தன்னை காத்துக்கொள்வது போல, ஆவியானவருக்கு விரோதமான இப்படிப்பட்ட காரியங்களிலிருந்தும் தன்னை விலக்கி காத்துக்கொள்ள வேண்டும்.

மேலும் வேற்றுமையான உபதேசத்தை போதித்து, அறிவியலையும் (உலக ஞானம்), மற்ற மார்க்கங்களையும் (விக்கிரக வழிபாடு) தேவ சபையில் கலக்க நினைப்போருக்கும் சபையில் இடம்கொடாமல், தேவ பிள்ளைகள் தங்களை விலக்கிக் காத்துக் கொள்ள வேண்டும், **"ஒருவன் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஆரோக்கியமான வசனங்களையும், தேவபக்திக்கேற்ற உபதேசங்களையும் ஒப்புக்கொள்ளாமல், வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கிறவனானால், அவன் இறுமாப்புள்ளவனும், ஒன்றும் அறியாதவனும், தர்க்கங்களையும் வாக்குவாதங்களையும்பற்றி நோய்கொண்டவனுமாயிருக்கிறான்;**

**அவைகளாலே பொறாமையும், சண்டையும், தூஷணங்களும், பொல்லாத சம்சயங்களுமுண்டாகி, கெட்ட சிந்தையுள்ளவர்களும் சத்தியமில்லாதவர்களும் தேவபக்தியை ஆதாயத்தொழிலென்று எண்ணுகிறவர்களுமாயிருக்கிற மனுஷர்களால் உண்டாகும் மாறுபாடான தர்க்கங்களும் பிறக்கும்; இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு" (1 தீமோ 6:3-5).** இவ்வாறு பலவிதங்களில் பிசாசானவன் இந்த கடைசி காலத்தில் தேவ பிள்ளைகளாகிய நம்மை தாக்கினாலும், ஆண்டவரோ இவை எல்லாவற்றையும் மேற்கொள்ளும்படியான கிருபையை அளித்து நம்மை தமக்குமுன் மாசற்றவர்களாய் நிறுத்துவார்.

மேலும் இப்படிப்பட்ட காரியங்களில் இருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ள ஒரு எளிய வழி அவரை அறிகிற அறிவிலே ஒவ்வொரு நாளும் நாம் பெருகுவதே ஆகும், **"தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (2 பேதுரு 1:3,4).** தேவ வார்த்தையாகிய வேதத்தை தியானிப்பதும், தேவ பிரசன்னத்தை, அவருடைய ஐக்கியத்தை ஜெபத்தில் உணர்வதும் நாம் தேவனுக்கு செய்யும் எந்தவொரு ஊழியத்தை காட்டிலும், மிக மிக முக்கியமானதாகும். இப்படியாய் தேவ உறவில் நம்மை காத்து கொள்வோம், மற்றவரையும் தேவ உறவிற்க்குள்ளாய் வர வழி நடத்துவோம். தேவன்தாமே நம்மை சகல தீமைக்கும் விலக்கி பாதுகாத்து தம்முடைய நித்திய ஜீவகரையில் சேர்ப்பாராக. ஆமென், அல்லேலூயா.

# தேவனுக்காக காத்திருத்தல்

**நெடுங்காலமாய்க் காத்திருக்குதல் இருதயத்தை இளைக்கப்பண்ணும்; விரும்பினது வரும்போதோ ஜீவவிருட்சம்போல் இருக்கும் (நீதி 13:12).**




நமது வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும், நாம் ஏதோ ஒரு எதிர்பார்ப்போடு சில காரியங்களுக்காக காத்திருக்கிறோம். சிறுபிள்ளைகள் தங்கள் படிப்பை குறித்தும், வாலிபர்கள் தங்கள் எதிர்காலத்தை குறித்தும், பெரியவர்கள் குடும்பத்தை குறித்தும் பொதுவாக சில எதிர்பார்ப்புகள் உள்ளவர்களாய் உள்ளனர். இன்னும் தனிப்பட்ட மனிதர்கள் தங்களின் வியாதிகள், பிரச்சனைகள் இவைகளில் இருந்தும் ஒரு விடுதலையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். இவைகள் யாவும் உலக பிரகாரமான, மாம்ச சம்பந்தமான காத்திருக்குதல் ஆகும்.

இவற்றில் நாம் ஒரு விரும்பின முடிவை / பதிலை / விடுதலையை பெற்றுக்கொள்ளும் பொழுது நம் மனம் பெரும் மகிழ்ச்சி அடைகிறது. உதாரணமாக வறுமையின் மத்தியில் ஒரு தகுந்த வேலையை பெறுவது / நீண்ட நாள் வியாதியிலிருந்து விடுதலை பெறுவது / வெகுநாள் கழித்து ஒரு பிள்ளையை பெறுவது போன்ற காரியங்கள் மகிழ்ச்சியை தருகிறது. இதை அநுபவித்து பார்த்தவர்களுக்கே அது ஜீவ விருட்சம் போல் இருப்பது புரியும்.

ஆகிலும் இப்படிப்பட்ட பாதையின் வழியாய் கடந்து போகும்பொழுதே இவ்வுலக வாழ்க்கையின் எதார்த்ததை தேவன் நமக்கு புரியவைக்கிறார்.

இப்படிப்பட்ட காரியங்களில் இருந்து நாம் விடுபடும்பொழுது மிகுந்த மகிழ்ச்சி அடைவது மட்டுமின்றி, நம்மை தேவன் எவ்வளவாய் நேசிக்கிறார் என்பதையும், எப்படி அற்புதமாய் நம்மை விடுவித்தார் என்பதையும் நாம் உணர்ந்து கொள்கிறோம். இப்படிப்பட்ட பாதையின் ஊடாய் கடந்து செல்லும் மற்றவருக்கும் தேவ அன்பினை அறிவிக்கும் சாட்சிகளாய் நாம் மாற்ற படுகிறோம். தேவன் சகலவற்றையும் அதின் அதன் காலத்தில் நேர்த்தியாய் செய்கிறார் என்பதையும், தேவன் சகலவற்றையும் நன்மையாகவே நம் வாழ்கையில் அனுமதிக்கிறார் என்பதையும் நாம் புரிந்து கொள்கிறோம்.

இதனையே நாம் பரிசுத்த வேதாகமத்தில் ஆபிரகாம், யோசேப்பு ஆகியோரின் வாழ்க்கையில் காண்கிறோம். குறிப்பாக **ஆதி 50:19,20** வசனங்களில் யோசேப்பு தன் சகோதரர்களிடம் **"யோசேப்பு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நான் தேவனா; நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்"**, என்பதின் மூலம் தன் குடும்பத்தோடு சேர்த்து அநேக மக்களை பஞ்சத்தில் இருந்து காக்கும்படிக்கே தேவன் சகவற்றையும் தன் வாழ்வில் அனுமதித்தார் என்பதை உணர்ந்துகொண்டார்.

ஆனால் வசனம் சொல்கிறபடி நெடுங்காலமாய் காத்திருத்தல் இருதயத்தை இளைக்கப்பண்ணும். இதையே நாம் யோசேப்பின் வாழ்க்கையிலும் அவர் பின்வருமாறு கூறுவதிலிருந்து காணலாம் **"இதுதான் அதின் அர்த்தம் என்று சொன்னதும் அன்றி, நீ வாழ்வடைந்திருக்கும்போது, என்னை நினைத்து, என்மேல் தயவுவைத்து, என் காரியத்தைப் பார்வோனுக்கு அறிவித்து, இந்த இடத்திலிருந்து என்னை விடுதலையாக்கவேண்டும். நான் எபிரெயருடைய தேசத்திலிருந்து களவாய்க் கொண்டுவரப்பட்டேன்; என்னை இந்தக் காவல் கிடங்கில் வைக்கும்படிக்கும் நான் இவ்விடத்தில் ஒன்றும் செய்யவில்லை என்றும் சொன்னான்" (ஆதி 40:14,15)**.

யோசேப்பு இவ்வாறு கூறினாலும் தேவன் நிச்சயமாகவே தன் வாழ்க்கையில் கிரியைச்செய்வார் என்ற விசுவாசத்தோடு அவசரப்படாமல் / குறுக்கு வழிகளை நாடாமல் தேவனுக்கு காத்திருந்தார். ஆதலால் ஏற்ற நேரத்தில் அதே பானபாத்திரகாரன் மூலம் தேவன் கிரியைச்செய்தார் (**ஆதி 41:9**). ஆனால் ஆபிரகாமின் வாழ்க்கையிலோ அவர் அவசரப்பட்டு சாராளின் சொல்லை கேட்டு செயல்பட்டார். ஆகிலும் தேவன் தமது ஆசிர்வாதத்தை சரியான நேரத்தில் ஆபிரகாமிற்கு கொடுத்தார். ஆனால்

ஆபிரகாமின் செயலால் ஆகார் மற்றும் இஸ்மவேலின் மூலமாக தேவையற்ற சஞ்சலங்கள் ஏற்ப்பட்டது. இன்றும் அது தொடர்கிறது.

நெடுநாள் காத்திருப்பதால் நமது இருதயம் சோர்ந்து போகலாம். நாம் வேதனைப்பட்டு கலங்கலாம். இன்னும் எத்தனை நாள் இந்த வேதனை என்று ஆண்டவரிடம் கூட மன்றாடலாம். ஆனால் ஒரு போதும் தேவ சித்ததிற்கு எதிராக, தேவன் காட்டாத வழிகளில் செயல்பட கூடாது. அதனால் ஏற்படும் நஷ்டம் நமது ஆசிர்வாதத்தை கூட பாதிக்கும்.

மேலும் ஆவிக்குரிய ரீதியிலும் காத்திருத்தல் காணப்படுகிறது. தேவனும் பாவியான ஒரு மனுஷனின் இருதய கதவை தட்டிக்கொண்டிருக்கிறார். என்றாவது ஒரு நாள் இந்த மனிதன் தனக்கு கதவை திறப்பான் என்றும், என்றாவது ஒரு நாள் நாம் கனிகொடுப்போம் என்றும் தேவன் பொறுமையாய் காத்திருக்கிறார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக தாம் செய்து முடித்த கிரியையின் பலனை இன்றும் எதிர்ப்பார்பவராய் நமது ஆண்டவர் இருக்கிறார். அதனாலேயே பாவியான ஒரு மனிதன் மனம் திரும்பும்பொழுது பரலோகத்தில் மிகுந்த மகிழ்ச்சி உண்டாகிறது **(லூக் 15:7)**. மேலும் ஆண்டவர் கூறிய “மனந்திரும்பின மைந்தன்” உவமையிலும் நாம் இதனையே காண்கிறோம் **(லூக் 15 அதி)**. மேலும் **லூக் 19:10** கூறுகிறபடி இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்தார். இன்றும் அவர் ஆத்துமாக்களை தம் ஊழியர்கள் (நம்மூலம்) தேடிக்கொண்டிருக்கிறார்.

அதே நேரத்தில் நாமும் ஆண்டவருடைய வருகைக்காய் காத்திருக்கிறோம். மரணத்தின் மூலமாவது, மறுரூப மகிமையின் மூலமாவது நாம் ஆண்டவரை சந்திக்க காத்துக்கொண்டிருக்கிறோம். உண்மையிலேயே இது நடக்கும்பொழுது ஜீவ அப்பமாகிய கிறிஸ்துவை நாம் முழுமையாய் பெற்றுக்கொள்வோம். நமது ஆவிக்குரிய, சரீர சோர்வுகள் யாவும் அகன்றுபோகும். எனவே நாம் ஆண்டவருடைய வாஞ்சையை பூர்த்தி செய்து, அவரண்டை சேர்ந்து, கனிகளை கொடுத்து அவருடைய வருகைக்கு காத்திருக்கும்பொழுது, நிச்சயமாகவே அவர் நமக்காக வருவார். நம்மை தம்மண்டை சேர்த்துக்கொள்வார். எனவே இப்படிப்பட்ட மேன்மையான பாக்கியத்திற்கு காத்திருக்கும் நாம், இவ்வுலக காரியங்களிலும் அவரையே சார்ந்திருந்து அவருக்கே காத்திருப்போம். நிச்சயமாகவே முடிவு உண்டு; நம் நம்பிக்கை வீண் போகாது **(நீதி 23:18)**. ஏனெனில் **“கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்” (ஏசா 40:31)**. ஆமென், அல்லேலூயா.

# கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம்

**குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே (1 பேதுரு 1:19).**




மேற்கண்ட வசனத்தில் கூறப்பட்டுள்ளபடி கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம் சிந்தப்பட்டதாலேயே, இன்று நாம் பாவத்திலிருந்து விடுதலை பெற்றவர்களாய், கிறிஸ்துவில் ஐக்கியம் கொள்கிறவர்களாய், நித்திய வாழ்வைக்குறித்து நிச்சயம் உடையவர்களாய் வாழமுடிகிறது. **யோ 3:16** கூறுகிறபடி **"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்"**, இங்கு அவரை தந்ததின் நோக்கமே அவருடைய இரத்தம் நமக்காய் ஊற்றப்பட வேண்டும் என்பதற்காகவே.

**எபிரெயர் 9:12** கூறுகிறது **"வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்"**, என்று. எனவே நித்திய மீட்பாகிய

இரட்சிப்பு நமக்கு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாகவே வருகிறது. மேலும் **1 யோ 1:7** கூறுகிறது **"அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்"**, என்று. மனுகுலத்திற்காய் சிந்தப்பட்ட விலையேறப்பெற்ற கிறிஸ்துவின் இரத்தத்தை இன்று பிரயோஜனப்படுத்தாதவர்களாய், தங்கள் வாழ்க்கையை பலர் வாழ்ந்து முடித்திருக்கின்றனர். உலகத்தில் உள்ள பணம், பொன் போன்றவற்றை எல்லாம் மதிப்புமிக்கதாக எண்ணி அவற்றை இரவும், பகலும் தேடும் மனிதர்கள், தங்களை தேடி வந்து தன்னுடைய விலையேறப்பெற்ற இரத்ததையே ஊற்றிக் கொடுத்த கிறிஸ்துவை குறித்து அக்கறை அற்றவர்களாய் உள்ளனர்.

**மத்தேயு 26:28** கூறுகிறது **"இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது"**. ஆனால், இன்று உலக மக்களால் அதிகமாய் வீணடிக்கப்படுவது கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தமே ஆகும். மனிதர்கள் தெரிந்தோ, தெரியாமலோ அவருடைய கிரயத்தின் மதிப்பை உணராதவர்களாய், தங்கள் வாழ்வையே வீணடிக்கின்றனர். **1 கொ 6:20** கூறுகிறது **"கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்"**, என்று.

இதில் மேலும் வேதனை தருகிற ஒரு காரியம் **எபிரெயர் 10:29** கூறப்பட்டுள்ளபடி **"தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்"**, இங்கு நாம் காண்கிறது அவருடைய பலியின் மேன்மையை அறிந்தும் உணராதவனுடைய முடிவாகும்.

இன்று உலகம் முழுவதும் ஆண்டவர் நமக்காய் இரத்தம் சிந்தின காரியங்கள் நினைவு கூறப்படுகின்றன. மேற்கூறப்பட்டுள்ள வசனங்களின் செய்திகள் பல்வேறு விதங்களில் அறிவிக்கப்படுகின்றன. ஆனால் மனிதர்களின் மனமோ இன்னும் கடினமாகவே உள்ளது. மனிதர்களின் ஞானம் பல்வேறு காரியங்களில் அபரிதமாய் வளர்ந்து இருந்தாலும், கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையை உணராமல், ஜீவனிள்ளாதவைகளின் மேலும், மாயையானவைகளின் மேலும் மனிதர்களின் நம்பிக்கை காணப்படுகிறது. இதிலும் கொடுமையானது,

கிறிஸ்துவின் இரத்ததால் கழுவப்பட்டோம் என்று கூறியும், அதன் மேன்மையை உணராதவர்களாய் வாழ்வதாகும்.

எனவே இன்றே நாம் மனந்திரும்புவோமாக, உலகத்தில் உள்ள எந்த ஒரு பொருளை காட்டிலும் விலையேறப்பெற்றது கிறிஸ்துவின் இரத்தமாகும், அதன் மேன்மையை உணர்ந்தவர்கள் ஒருபோதும் பாதை மாறிப்போக மாட்டார்கள். எனவே கிறிஸ்துவை அறிவிக்கும் போது அங்கு முக்கியமாக கூறப்பட வேண்டியது அவருடைய விலையேறப்பெற்ற இரத்தமே ஆகும்.

ஏனெனில் **வெளி 19:11-13** வசனங்கள் கூறுகிறது **“பின்பு, பரலோகம் திறந்திருக்கக் கண்டேன்; இதோ, ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப் பட்டவர்; அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார். அவருடைய கண்கள் அக்கினிஜுவாலையைப்போலிருந்தன, அவருடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள் இருந்தன; அவருக்கேயன்றி வேறொருவருக்குந் தெரியாத ஒரு நாமமும் எழுதியிருந்தது. இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார்; அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே”**. ஆமென், அல்லேலூயா.

# தேவ ஆளுகை

**உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து, தமக்குச் சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறார் (தானி 4:25).**




இன்று பெரும்பாலான மனிதர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களை குறித்து, ஆளுகைகளை குறித்து பெருமையோடு காணப்படுகின்றனர். மேலும் மேலும் அதிகாரங்களை பெற துடிக்கின்றனர். ஆனால் தங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரம் எதற்கு என்பதை அறியாமல், தங்களின் சுயலாபத்திற்காய் அதை பயன்படுத்த துடிக்கின்றனர். இன்னும் சில மனிதர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தின் மூலம் தேவ இராஜ்யத்தையே எதிர்க்கின்றனர். வேதாகமத்திலும், உலக வரலாற்றிலும் இப்படிப்பட்ட மனிதர்களை நாம் காணலாம். ஆகிலும் மேற்கண்ட **தானி 4:25** வசனம் கூறுகிறபடி உன்னதமான தேவனே ஆளுகை செய்கிறவர் என்பதையும், தம்முடைய சித்தப்படி மனிதர்களுக்கு ஆளுகைகளை கொடுக்கிறார் என்பதையும் நாம் காணலாம். எனவே சரீர பிரகாரமாக நாம் சில மனிதர்களின் ஆளுகைகளின் கீழ் இருந்தாலும், நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகிய அனைத்தையும் ஆண்டு நடத்துகிறவர் தேவனே என்பதை நாம்

உணர வேண்டும். இதனையே நமது ஆண்டவரும் பின்வரும் யோ 19:10,11 வசனங்களில் கூறியுள்ளார், "அப்பொழுது பிலாத்து: நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா என்றான். இயேசு பிரதியுத்தரமாக: பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது; ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு என்றார்".

பிலாத்துவை போல தனது இராஜ்யத்தை குறித்து மேன்மை பாராட்டின நேபுகாத்நேச்சாரிடம் தேவன், தாமே சகலத்தையும் ஆண்டு நடத்துகிறவர் என்பதை விளங்க பண்ணினார். இதனை பின்வரும் வசனங்களில் காணலாம் "பன்னிரண்டு மாதம் சென்றபின்பு, ராஜா பாபிலோன் ராஜ்யத்தின் அரமனைமேல் உலாவிக்கொண்டிருக்கும்போது: இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமைப்பிரதாபத்துக்கென்று, ராஜ்யத்துக்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று சொன்னான். இந்த வார்த்தை ராஜாவின் வாயில் இருக்கும்போதே, வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரே, ராஜ்யபாரம் உன்னைவிட்டு நீங்கிற்று. மனுஷரினின்று தள்ளப்படுவாய்; வெளியின் மிருகங்களோடே சஞ்சரிப்பாய்; மாடுகளைப்போல் புல்லை மேய்வாய்; இப்படியே உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து, தமக்குச் சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறாரென்பதை நீ அறிந்துகொள்ளுமட்டும் ஏழு காலங்கள் உன்மேல் கடந்துபோகும் என்று உனக்குச் சொல்லப்படுகிறது என்று விளம்பினது" தானி (4:29-32).

தேவன் இவ்வாறு தமது வல்லமையை வெளிப்படுத்தியிருந்தும் தேவனுக்கு எதிர்த்து நின்ற பெல்ஷாத்சார் என்னும் நேபுகாத்நேச்சார் குமாரனின் ஆளுகைக்கு ஒரே இரவில் தேவன் முடிவுண்டாக்கினார். இதனை நாம் தானி 5:22-28,30 வசனங்களில் காணலாம் "அவருடைய குமாரனாகிய பெல்ஷாத்சார் என்னும் நீரோவென்றால், இதையெல்லாம் அறிந்திருந்தும், உமது இருதயத்தைத் தாழ்த்தாமல், பரலோகத்தின் ஆண்டவருக்கு விரோதமாக உம்மை உயர்த்தினீர்; அவருடைய ஆலயத்தின் பாத்திரங்களை உமக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள்; நீரும், உம்முடைய பிரபுக்களும், உம்முடைய மனைவிகளும், உம்முடைய வைப்பாட்டிகளும் அவைகளில் திராட்சரசம் குடித்தீர்கள்; இதுவுமன்றி, தம்முடைய கையில் உமது சுவாசத்தை வைத்திருக்கிறவரும், உமது வழிகளுக்கு எல்லாம் அதிகாரியுமாகிய தேவனை நீர் மகிமைப்படுத்தாமல் காணாமலும் கேளாமலும் உணராமலும் இருக்கிற வெள்ளியும் பொன்னும் வெண்கலமும்

**இரும்பும் மரமும் கல்லுமாகிய தேவர்களைப் புகழ்ந்தீர். அப்பொழுது அந்தக் கையுறுப்பு அவரால் அனுப்பப்பட்டு, இந்த எழுத்து எழுதப்பட்டது. எழுதப்பட்ட எழுத்து என்னவென்றால்: மெனே, மெனே, தெக்கேல், உப்பார்சின் என்பதே. இந்த வசனத்தின் அர்த்தமாவது: மெனே என்பதற்கு, தேவன் உன் ராஜ்யத்தை மட்டிட்டு, அதற்கு முடிவுண்டாக்கினார் என்றும், தெக்கேல் என்பதற்கு, நீ தராசிலே நிறுக்கப்பட்டு, குறையக் காணப்பட்டாய் என்றும், பெரேஸ் என்பதற்கு, உன் ராஜ்யம் பிரிக்கப்பட்டு, மேதியருக்கும் பெர்சியருக்கும் கொடுக்கப்பட்டது என்றும் அர்த்தமாம் என்றான். அன்று இராத்திரியிலே கல்தேயரின் ராஜாவாகிய பெல்ஷாத்சார் கொலைசெய்யப்பட்டான்”**.

மேற்கண்ட வசனங்களின் மூலம் நாம் கற்றுகொள்ளும் சத்தியம் என்னவென்றால் தேவனே சகலத்தையும் ஆண்டு நடத்துகிறவர் என்பதையும், தேவ பிள்ளைகளை இவ்வுலக அதிகாரங்கள் ஒன்றும் செய்ய முடியாது என்றும், தேவனை எதிர்த்து நிற்கும் எந்த அதிகாரத்திற்கும் தேவன் முடிவுண்டாக்குவார் என்பதுமாகும். எனவே இப்பொழுதும் தேசத்தை யார் ஆள போகிறார்கள் என்று நமது இந்திய மக்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் இக்கட்டத்திலும், தேவபிள்ளைகளாகிய நாம் வேத சத்தியத்தின்படி அமைதியோடு தேவனையே சார்ந்திருப்போம். ஏனெனில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறியபடி **“பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது” (யோ 19:11)**. ஆதலால் மனித அதிகாரங்களை நாம் சார்ந்துகொள்ளவோ அல்லது அதற்கு அடிமைபடவோ / பயப்படவோ தேவையில்லை. ஆமென், அல்லேலூயா.

# தேவ பெலன்

**சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார் (ஏசா 40:29).**




நாம் அநேக நேரங்களில் நமது ஆவியிலும், சரீரத்திலும் பெலவீனப்பட்டு போகிறோம். யோபுவின் வாழ்க்கையில் ஏற்பட்டதுபோல சத்துருவினால் உண்டாகும் சோதனைகள் நிமித்தமும், வேதனைகளின் நிமித்தமும் நம்முடைய ஆவி சோர்ந்துபோகிறது. அதன் விளைவாக நமது சரீரமும் சோர்ந்துபோகிறது. எலியா தீர்க்கதரிசியின் வாழ்க்கையிலும், இத்தகைய ஆவிக்குரிய, சரீர சோர்வே காணப்பட்டது **(1 இரா 19)**.

சில நேரங்களில் சரீரத்தில் உண்டாகும் பாடுகள், சோதனைகள் நிமித்தம் நாம் ஆவிக்குரிய வாழ்வில் சோர்ந்து போகிறோம். எப்படியிருப்பினும் இத்தகைய சோர்வுகள் நமது ஆவிக்குரிய மற்றும் சரீரத்திற்குரிய இவ்வுலக வாழ்க்கையில் வெற்றியோடு வாழமுடியாதபடி நம்மை பெலவீனப்படுத்துகிறது.

இத்தகைய பெலவீன சூழ்நிலைகளில் தேவ பெலன் நமக்கு தேவையாய் இருக்கிறது. **1 சாமு 30** அதிகாரத்தில் தாவீது மற்றும் அவன் மனுஷருடைய, மனைவி, பிள்ளைகள் மற்றும் பொருட்கள் அனைத்தையும் அமலேக்கியர் கொள்ளை அடித்து சென்றபொழுது **(1 சாமு 30:1-3)**, **"தாவீதும் அவனோடிருந்த ஜனங்களும் அழுகிறதற்குத் தங்களில் பெலனில்லாமல் போகுமட்டும் சத்தமிட்டு அழுதார்கள்" (1 சாமு 30:4)**. மேலும் **"தாவீது மிகவும் நெருக்கப்பட்டான்; சகல ஜனங்களும் தங்கள்**

**குமாரர் குமாரத்திகளினிமித்தம் மனக்கிலேசமானதினால், அவனைக் கல்லெறியவேண்டும் என்று சொல்லிக்கொண்டார்கள்" (1 சாமு 30:6).**

இங்கு தாவீது சரீரத்திலும் பெலனில்லாமல், ஆவியிலும் நெருக்கப்பட்டார். ஆகிலும் **1 சாமு 30:6** கூறுகிறது **"தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டான்"**. ஆம் இங்கு கர்த்தருக்குள் அவர் தன்னை திடப்படுத்தி கொண்டபொழுது, சோர்ந்துபோன ஆவியிலும், சரீரத்திலும் பெலனைப்பெற்றுக்கொண்டார். இங்கு நாம் அறிந்துகொள்ளும் வேத சத்தியம் என்னவென்றால் தேவ பெலன் நம்மேல் வரும்பொழுது, அது நம்முடைய ஆவி, ஆத்துமா மற்றும் சரீரம் முழுவதையும் பெலனடைய செய்கிறது. சில வேளைகளில் பவுலின் வாழ்க்கையில் உண்டானது போல, அவருடைய சரீர உபாதை நீங்காவிட்டாலும், அதை தாங்கி கொள்ளும்படியான தேவகிருபை அவருக்கு கொடுக்கப்பட்டது **(2 கொ 12:9)**.


உலக வரலாற்றில் எத்தனையோ தேவபிள்ளைகள் சரீரத்தில் பெலவீனத்தோடு காணப்பட்டாலும், அதன் மத்தியிலும் வல்லமையாய் தேவ ஊழியத்தை செய்ய காரணம் அவர்கள் மேல் இருந்த தேவபெலனே ஆகும். அதுவே நமது ஆவியையும், ஆத்துமாவையும், சரீரத்தையும் உயிர் அடையச்செய்கிறது. மேலும் சில நேரங்களில் நம்முடைய பெலவீனங்களுக்கு நாமே காரணமாகிவிடுகிறோம். நாம் நமது ஆவிக்குரிய வாழ்வில் பாவத்திற்கு இடம் கொடுக்கிறபொழுது, அது முதலில் நமது ஆவியை பாதிக்கிறது, பிறகு அது நம்முடைய சரீரத்திலும் பெலவீனத்தை ஏற்ப்படுத்துகிறது.

**மத் 9:1-7** வசனங்களில் தம்மிடம் சரீர சுகத்திற்காக கொண்டுவரப்பட்ட திமிர்வாதக்காரனை நோக்கி ஆண்டவர் **"மகனே, திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார்" (மத் 9:2)**. இங்கு சரீரத்தில் உள்ள பெலவீனத்திற்கு அவனுடைய ஆவிக்குரிய வாழ்வில் இருந்த பாவம் காரணமாயிருந்தது. எனவே தேவ பிள்ளைகளாகிய நாம் நமது சரீரத்திலோ, ஆவியிலோ பெலவீனத்தை உணரும் போது, நம்மை நாமே தற்பரிசோதனை செய்து கொள்வது மிகவும் முக்கியமாகும்.

எது எப்படியிருப்பினும் கிறிஸ்து நமக்கு தேவபெலனாயிருக்கிறார் **(1 கொ 1:24)**. ஆகவே **"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலி 4:13)**. ஆமென், அல்லேலூயா.

# தேவன் – சிருஷ்டிகர்த்தர்

**ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் (ஆதி 1:1)**




மேற்கண்ட **(ஆதி 1:1)** என்ற வசனத்திலிகுந்து நமது பரிசுத்த வேதாகமம் துவங்குகிறது. **ஆதியாகமம் 1ஆம்** அதிகாரம் முழுவதும் தேவன் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காரியத்தையும் எவ்வாறு சிருஷ்டித்தார் என்பதை விளக்குகிறது. தேவன் நினைத்திருந்தால் அனைத்தையும் ஒரே நொடி பொழுதில் சிருஷ்டித்திருக்க முடியும். ஆனால் அவரோ நேரமெடுத்து ஒவ்வொன்றையும் சிருஷ்டித்தார். ஒவ்வொரு நாள் முடிவிலும் தாம் சிருஷ்டித்ததை நோக்கிப்பார்த்து நல்லது என்று கண்டார். **(ஆதி 1:10,12,18,21,25)**. இங்கு நாம் அறிந்து கொள்ளும் சத்தியம் என்னவென்றால், தேவன் சகலற்றையும் ஒன்றன் பின் ஒன்றாக ஒழுங்கும் கிரமுமாய் சிருஷ்டித்தார். தான் சிருஷ்டித்த ஒவ்வொன்றை குறித்தும் மகிழ்ந்தார் **(சங் 104:31)**. சிறு பூச்சி புழுவில் இருந்து பெரிய விலங்குகள் வரை, செடிகொடிகள், சூரியன், சந்திரன், சமுத்திரம், மலைகள் என்று சிறிய காரியனானாலும், பெரிய காரியமானாலும், ஒவ்வொன்றையும் ஒரு நோக்கத்தோடு, அவை அனைத்தும் ஒரு ஒழுங்கை பின்பற்றும்படியாய் சிருஷ்டித்தார்.

எல்லாவற்றிற்கும் மேலாக மனிதனை தன் மனதில் வைத்தே இவை எல்லாவற்றையும் அவனுக்காகவே உண்டாக்கினார். மனிதன் தேவனுடைய சிருஷ்டிப்பில் ஒரு பகுதி மாத்திரமல்ல, மொத்த

சிருஷ்டிப்பும் அவனை சுற்றியே இருந்தன. தேவன் படைத்த ஒவ்வொன்றும் மனிதனுடைய பிரயோஜனத்திற்காக சிருஷ்டித்தார். மேலும் அனைத்தின் மேலும் அவனுக்கு அதிகாரத்தையும் கொடுத்தார் **(ஆதி 1:28, சங் 115:16)**. தேவன் பூமியை சிருஷ்டித்து எத்தனையோ ஆண்டுகள் கடந்த பின்பும், இன்றும் இந்த பூமி இளமையாகவே காணப்படுகிறது. பூமியின் இயற்கை (தேவ செயலின்) அழகு இன்றுவரை குறையவே இல்லை. மனிதன் உருவாக்கினவைகள் நாட்கள் ஆக ஆக மகிமையிழந்து முடிவில் ஒன்றும் இல்லாமல் போகும். ஆனால் தேவனுடைய சிருஷ்டிப்பின் அழகோ இன்றும் மாறாமல் இருக்கிறது. மனிதர்களுக்கு வேண்டியவைகளை இன்றும் அளவில்லாமல் கொடுத்துக்கொண்டேயிருக்கிறது. இதைக்குறித்து **சங்கீதம் 104** விளக்குகிறது. அதை நாம் பின்வருமாறு தியானிக்கலாம்.

**சங் 104:5-9** வசனங்களில் **"பூமி ஒருபோதும் நிலைபேராதபடி அதின் ஆதாரங்கள்மேல் அதை ஸ்தாபித்தார். அதை வஸ்திரத்தினால் மூடுவதுபோல ஆழத்தினால் மூடினீர்; பர்வதங்களின்மேல் தண்ணீர்கள் நின்றது. அவைகள் உமது கண்டிதத்தால் விலகியோடி, உமது குமுறலின் சத்தத்தால் விரைந்துபோயிற்று. அவைகள் மலைகளில் ஏறி, பள்ளத்தாக்குகளில் இறங்கி, நீர் அவைகளுக்கு ஏற்படுத்தின இடத்தில் சென்றது. அவைகள் திரும்பவும் வந்து பூமியை மூடிக்கொள்ளாதபடி கடவாதிருக்கும் எல்லையை அவைகளுக்கு ஏற்படுத்தினீர்"**, இங்கு, பூமியை எவ்வாறு சிருஷ்டித்து, அதிலிருந்த தண்ணிரை எவ்வாறு ஒழுங்குப்படுத்தினார் என்பதை காணாலாம். அவைகள் மலைகள், பள்ளதாக்குகள் வழியாய் சென்று கடலில் கலக்கும்படியாய் செய்து, அதன்மூலம் மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், மரங்கள் ஆகிய அனைத்திற்கும் வேண்டிய நீர் தேவையை சந்திக்கும்படி செய்கிறார்.

ஆனால் இவை எல்லாம் தானாய் உருவாகி, தானாய் நடைபெறுகிறது என்று சொல்லுகிறவர்கள் எவ்வளவு அறிவீனமானவர்கள் என்பதும், சத்துரு உலக ஞானம் என்பதின் மூலம் இப்படிப்பட்ட மனிதரின் மனக்கண்களை குருடாக்கி வைத்திருப்பதையும் காணலாம். ஆம் தேவனுடைய கிருபை, வல்லமைகளை உணர்ந்து கொள்ள நம் மாம்ச கண்கள் மாத்திரமல்ல நம் மனகண்களும் தெளிவாய் இருக்க வேண்டும்.

மேலும் **சங் 104:13** கூறுகிறது **"உமது கிரியைகளின் பலனாலே பூமி திருப்தியாயிருக்கிறது"**, என்று. ஆம் இன்று வரை மனிதர் முதல் விலங்குகள், பறவைகள், செடிகொடிகள் வரை தேவன் அனைத்தையும் திருப்தியாக போஷித்து வருகிறார். மனிதன் தான் உழைக்காமல், விளை நிலங்களையும் மற்ற இயற்கையின் காரியங்களையும் அழித்து

வருகிறான். மேலும் **சங் 104:14,15** வசனங்கள் கூறுகிறது **“பூமியிலிருந்து ஆகாரம் உண்டாகும்படி, அவர் மிருகங்களுக்குப் புல்லையும், மனுஷருக்கு உபயோகமான பயிர்வகைகளையும் முளைப்பிக்கிறார். மனுஷனுடைய இருதயத்தை மகிழ்ச்சியாக்கும் திராட்சரசத்தையும், அவனுக்கு முகக்களையை உண்டுபண்ணும் எண்ணெயையும், மனுஷனுடைய இருதயத்தை ஆதரிக்கும் ஆகாரத்தையும் விளைவிக்கிறார்”**, இங்கு ஆண்டவர் எதோ மனிதனுக்கு உணவை மட்டும் தருகிறவர் அல்ல, அவன் உள்ளத்திற்கும், உடலிற்க்கும் வேண்டிய அனைத்தையும் பூமியில் இருந்து தந்து மகிழ்ச்சியாக்குகிறவராய் இருக்கிறார்.

மேலும் **சங் 104:20-23** வசனங்களில் **“நீர் இருளைக் கட்டளையிடுகிறீர், இராக்காலமாகும்; அதிலே சகல காட்டு ஜீவன்களும் நடமாடும். பாலசிங்கங்கள் இரைக்காக கெர்ச்சித்து, தேவனால் தங்களுக்கு ஆகாரம் கிடைக்கும்படித் தேடும். சூரியன் உதிக்கையில் அவைகள் ஒதுங்கி, தங்கள் தாபரங்களில் படுத்துக்கொள்ளும். அப்பொழுது மனுஷன் சாயங்காலமட்டும் தன் வேலைக்கும், தன் பண்ணைக்கும் புறப்படுகிறான்”**, தேவன பகலையும் இரவையும் படைத்து, அதை எவ்வாறு ஒழுங்கும் கிரமுமாய், மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் பயனுள்ளதாக வைத்திருக்கிறார் என்பதை காணலாம்.

எனவே **சங் 104:24** கூறுகிறது **“கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது! அவைகளையெல்லாம் ஞானமாய்ப் படைத்தீர்; பூமி உம்முடைய பொருள்களினால் நிறைந்திருக்கிறது”**, ஆம் பூமியில் உள்ள ஒவ்வொன்றும் தேவனுக்கு சொந்தமானது. ஒருபுறம், மனிதன் பாவம் செய்து அதன்மூலம், முழுமனுக்குலமே பாவத்திற்க்குட்பட்டு, மனிதன் தானாய் தனக்கு ஏற்படுத்தி கொண்ட இராஜ்யங்களை பிசாசானவன் தன்னுடைய கட்டுபாட்டுக்குள் வைத்திருக்கலாம். பூமியை தீட்டுப்படுத்தி, குற்றமற்ற இரத்தம் சிந்துதல்களையும், அக்கிரம கிரியைகளையும் பூமியில் நடப்பித்திருக்கலாம். இவையெல்லாம் மனிதன் பாவத்திற்கு (சாத்தானுக்கு) தன்னை விற்றுப்போட்டதால் உண்டானது. ஆனாலும் இன்றும் பூமியில் முளைக்கும் ஒவ்வொறு செடிகொடிக்குள்ளும் தேவனுடைய ஜீவன் இருக்கிறது. இப்பூமியில் உள்ள அனைத்தும் அவருடையவைகளே.

மேலும் சமுத்திரத்தில் தேவனுடைய கிரியை எவ்வாறு காணப்படுகிறது என்பதை **சங் 104:25-30** காணலாம் **“பெரிதும் விஸ்தாரமுமான இந்தச் சமுத்திரமும் அப்படியே நிறைந்திருக்கிறது; அதிலே சஞ்சரிக்கும் சிறியவைகளும் பெரியவைகளுமான எண்ணிறந்த ஜீவன்கள் உண்டு. அதிலே கப்பல்கள் ஓடும்; அதிலே விளையாடும்படி நீர் உண்டாக்கின**


**திமிங்கிலங்களும் உண்டு. ஏற்றவேளையில் ஆகாரத்தைத் தருவீர் என்று அவைகளெல்லாம் உம்மை நோக்கிக் காத்திருக்கும். நீர் கொடுக்க, அவைகள் வாங்கிக்கொள்ளும்; நீர் உம்முடைய கையைத்திறக்க, அவைகள் நன்மையால் திருப்தியாகும். நீர் உமது முகத்தை மறைக்க, திகைக்கும்; நீர் அவைகளின் சுவாசத்தை வாங்கிக்கொள்ள, அவைகள் மாண்டு, தங்கள் மண்ணுக்குத் திரும்பும். நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது, அவைகள் சிருஷ்டிக்கப்படும்; நீர் பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர்"**.

எனவே இவ்வாறு அருமையாய் படைத்த மனிதனையும், அவனுக்காக உண்டாக்கின பூமியையும், தேவன் தீட்டுப்பட்டுபோக விடமாட்டார். **சங் 104:35** கூறுகிறது **"பாவிகள் பூமியிலிருந்து நிர்மூலமாகி, துன்மார்க்கர் இனி இராமற்போவார்கள். என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, அல்லேலூயா",** ஆம் பாவிகளையும், துன்மார்க்கரையும் இப்பூமியில் இருந்து அகற்றி போட்டு, தம்முடைய மக்களோடு ஆண்டவர் இப்பூமியில் 1000 வருடம் ஆட்சிசெய்வார். அதன் பிறகு **சங் 104:30** கூறப்பட்டுள்ளபடி **"நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது, அவைகள் சிருஷ்டிக்கப்படும்; நீர் பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர்",** அவர் பூமியின் ரூபத்தையும், புதிதாக்குவார். புதிய வானத்தையும், புதிய பூமியையும் உண்டாக்கி தம்மக்களோடு எந்நாளும் அரசாளுவார். அங்கு பாவத்திற்கோ, பாவிக்கோ இடமில்லை. பொய்க்கு பிதாவான பிசாசும் நித்திய அக்கினியிலே தள்ளப்படுவான்.

எனவே தேவன் படைத்த இந்த அருமையான பூமியிலே வாழ்கின்ற நாம் இந்த பூமியில் தேவன் படைத்த ஒழுங்கின்படி வாழ்ந்து, தேவன் நமக்கென்று படைத்த எல்லாவற்றையும் பிரயோஜனப்படுத்தி, புதிய வானம், புதிய பூமியிலும் வாழ பங்குள்ளவர்களாய் காணப்படுவதற்கு இப்பூமிக்குரிய வாழ்விலேயே நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்வோம். ஆமென், அல்லேலூயா.

# அவரை அறிகிற அறிவினாலே

**நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன் (2 தீமோ 1:12)**




வேதாகமத்தில் **2 பேதுரு** புத்தகம் முழுதும் பிதாவாகிய தேவனையும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிகிற அறிவினாலே ஒரு தேவபிள்ளை பெற்றுக் கொள்ளகூடிய ஆசிர்வாதங்களை விளக்குகிறது. அதனை நாம் பின்வருமாறு தியானிப்போம்.

**2 பேதுரு 1:2-11** வசனங்கள் கூறுகிறது **"தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது. தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள்**

**விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது. இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன்செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண்சொருகிப்போன குருடனாயிருக்கிறான். ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்".**

மேற்கண்ட வசனங்களில் **வசனம் 2** கூறுகிறது அவரை அறிகிற அறிவினால் நமக்கு கிருபையும், சமாதானமும் பெருகுகிறது என்று. மேலும் **வசனம 3** கூறுகிறது, தேவபக்தியான வாழ்க்கைக்கு தேவையான யாவற்றையும், இவ்வுலக வாழ்க்கைக்கு தேவையான யாவற்றையும் அவரை அறிகிற அறிவினாலே நாம் பெற்றுக் கொள்கிறோம் என்று. அதுமாத்திரமல்ல **வசனம் 4** கூறுகிறதுபோல உலகத்தில் உள்ள பொல்லாத காரியங்களுக்கும், செயல்களுக்கும் தப்பி, திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவரகளாகும் பொருட்டு அருமையான் வாக்குத்தத்தங்களும் அவரை அறிகிற அறிவினாலே நமக்கு கொடுக்கப்படுகிறது.

அவரை அறிகிற அறிவினால் மேற்கூறப்பட்டுள்ள அருமையான காரியங்களை நாம் பெற்றுக்கொள்ளும் பொழுது, அதனால் நம் வாழ்க்கையில் கீழ்காணும் கனிகளை உடையவர்களாய் மாறுவோம். (1) விசுவாசம் (2) தைரியம் (3) ஞானம் (4) இச்சையடக்கம் (5) பொறுமை (6) தேவ பக்தி (7) சகோதர சிநேகம் (8) அன்பு. **வசனம் 8** கூறுகிறபடி, இவ்வகை சுபாவங்கள் நமக்குள் பெருகினால், அதுவே நாம் அவரை அறிகிற அறிவில் விருத்தியடைந்துள்ளோம் என்பதற்கு சாட்சியாகும். **வசனம் 9** கூறுகிறபடி, மேற்கண்ட காரியத்தில் ஒருவன் குறைவுபடும் பொழுது ஒருவன் தான் தேவனால் சுத்திகரிக்கப்பட்டவன் (இரட்சிக்கப்பட்டவன்) என்பதையே மறந்து, கண் சொருகிப்போன குருடனை போலாகிறான். எனவே நாம் ஜாக்கிரதையாய் வாழும் பட்சத்தில், கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நித்திய

ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் நமக்கு பரிபூரணமாய் அளிக்கப்படும் **(வசனம் 10,11)**.

மேலும் **2 பேதுரு 2:20-22** வசனங்கள் கூறுகிறது **"கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப்பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது".**

மேற்க்கண்ட வசனங்கள் மூலம் நாம் அறிந்து கொள்ளும் சத்தியம் என்னவென்றால், அவரை மனதார அறிந்து உணர்ந்த பிறகும், ஒருவன் பின் வாங்கிப்போனால் அவனுடைய பின்னிலைமை இரட்சிக்கப்படுவதற்கு முன்பிருந்த முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். ஏனெனில் தேனால் நாம் வாழ்க்கையில் பெற்ற ஆசிர்வாதங்கள், அற்புதங்கள் ஆகியவற்றால் உண்டாகிற மாற்றத்தை காட்டிலும், அவரை அறிகிற அறிவினால் உண்டாகிற மாற்றம் மேன்மையானதாகும். அதிலிருந்தும் ஒருவன் பின்வாங்கிபோவானானால் அவனை பிறகு மீட்டெடுப்பது முடியாத காரியமாகும்.

இப்பொழுது நாம் தேவனை அறிகிற அறிவு என்றால் என்ன என்பதை குறித்து தியானிப்போம். நாம் என்று தேவனுடைய வார்த்தையை (சத்தத்தை) கேட்டு இரட்சிக்கப்பட்டோமோ அன்றிலிருந்தே அவரை அறிகிற அறிவு நமக்குள் தோன்ற ஆரம்பிக்கிறது. தேவனுடைய வார்த்தையாகிய பரிசுத்த வேதாகமம் மூலம் அவரை அறிகிற அறிவில் பெருகுகிறோம். **ரோமர் 10:17** கூறுகிறது **"ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்"** என்று. மேலும் தேவனோடு நாம் கொண்டுள்ள ஐக்கியத்தின் மூலம், தனிப்பட்ட உறவின் மூலம் அவரை அறிகிற அறிவில் பெருகுகிறோம்.

அவருடைய சித்தத்தை அறிந்து அதன்படி நம்முடைய வாழ்க்கையை நடத்தும் பொழுது, தேவன் நம்முடைய வாழ்க்கைக்காக வைத்துள்ள திட்டத்தை அறிந்தவர்களாக காணப்படுகிறோம். வேதாகமத்தில் தேவ மனிதர்களான யோசேப்பு, தாவீது, யோபு போன்றோர் தேவனை குறித்த அறிவில் தேறினவர்களாக காணப்பட்டனர். மற்றவர்கள் அவர்களை

புரிந்து கொள்ளாத பொழுதும், அவர்களுடைய வாழ்க்கையில் எதிர்மறையான காரியங்கள் நடந்தபொழுதும், அவர்களோ தேவனை அறிந்திருந்தபடியால் அமைதியாக தங்கள் வாழ்க்கையை தேவனுக்கு அர்பணித்து வாழ்ந்தனர். அவர்களுடைய வாழ்க்கையின் முடிவு மிகவும் சம்பூரணமுள்ளதாய் இருந்தது.

பவுல் கூறுகிறார் **“அதினிமித்தம் நான் இந்தப் பாடுகளையும் அனுபவிக்கிறேன்; ஆயினும், நான் வெட்கப்படுகிறதில்லை; ஏனென்றால், நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள்வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்” (2 தீமோ 1:12)**. ஆம் நாம் தேவனோடு ஐக்கியமுடையவர்களாய், நம் வாழ்க்கையை அவர் கரத்தில் ஒப்புவித்து, அவருடைய சித்தத்தை அறிந்து, அவரை அறிகிற அறிவில் வளர்ந்து, ஒவ்வொரு நாளும் வாழ்வோமானால் நிச்சயமாகவே மேற்க்கண்ட அனைத்து ஆசிர்வாதங்களையும் இம்மையிலும், மறுமையிலும் பெற்று மகிழ்ச்சியோடு வாழலாம். ஆமென், அல்லேலூயா.

# தேவ அடைக்கலம்

**அநாதி தேவனே உனக்கு அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம் (உபா 33:27)**




நம் வாழ்க்கையில் அநேக நேரங்களில் பிசாசினாலும், மற்ற மனிதர்களினாலும், சூழ்நிலைகளினாலும் நாம் தாக்கப்படும் பொழுது, நாம் எந்த திசையில் போவது, எப்படி இந்த பிரச்சனையில் இருந்து விடுபடுவது என்று தெரியாமல் தவிக்கும்பொழுது, நம்முடைய வேதனையான சூழ்நிலையில் யாருடைய துணையுமின்றி நாம் நிற்கும்பொழுது, நம்மால் எதிர்க்க முடியாது என்ற சூழ்நிலை வரும்பொழுது, நாம் செய்ய வேண்டிய ஒன்றே ஒன்று தேவனுடைய அடைக்கலத்திற்க்குள் வந்துவிடுவதே ஆகும்.

சத்துருவானவன் நமக்கு எதிர்த்து நின்றாலும், சக மனிதர்கள் நம்மை எதிர்தாலும் அல்லது நாம் நினைத்ததற்கு மாறாய் செயல்பட்டாலும், சூழ்நிலைகள் எதிராய் இருந்தாலும், நாம் எப்பொழுதும் வந்தடையதக்க அடைக்கலம் தேவனே ஆகும். ஏனெனில் அவர் அநாதி தேவன். மேலும் வேதம் கூறுகிறது **"தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்" (சங் 46:1)** என்று. ஆம் நம்முடைய ஆபத்து காலத்தில் அவர் நமக்கு அடைக்கலமாய் மாத்திரமட்டுமல்ல, நம்முடைய பிரசன்னைகளை எதிர்கொள்ளக்கூடிய பெலனையும் நமக்கு தருகிறவராய், நமக்கு துணையாளராய் இருக்கிறார்.

மேலும் **சங் 18:2** கூறுகிறது **“கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும், என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார்”**, உலகத்தில் பணம், பொருள், மனிதர்கள் போன்ற எத்தனையோ காரியங்கள் நமக்கு பாதுகாப்பையும், பெலனையும், துணையையும் தருவதாய் கூறலாம். ஆனால் சங்கீதக்காரன் கூறுவது போல நாம் நம்பியிருக்கிற துருகம் அவராகவே இருக்கவேண்டும். ஏனெனில் அவரே உயர்ந்த அடைக்கலமானவர். எப்பேர்பட்ட பெரிய பிரச்சனைகள், போராட்டங்கள் வந்தாலும் அதையும் தாண்டி நம்மை காக்க வல்ல உயர்ந்த அடைக்கலமானவர் அவரே.

மற்ற காரியங்கள் எல்லாம் ஓரளவுக்கு நமக்கு பாதுகாப்பையும், பெலனையும், துணையையும் தரலாம். ஆனால் அவரே அநாதியானவர். நித்திய கன்மலையாகிய தன்னுடைய அடைக்கலத்திலே நம்மை பாதுகாக்கிறவர், அவருடைய நித்திய புயங்களே நமக்கு ஆதாரம். மற்ற ஆதாரங்கள் எல்லாம் மண்ணின் மேல் கட்டிய வீட்டை போன்றது. பெரு வெள்ளம் வந்து காற்று அடிக்கும்பொழுது ஒன்றுமில்லாமல் போகும். ஆனால் நித்திய கன்மலையாம் கிறிஸ்துவின் அடைக்கலத்திலே இருக்கும்பொழுது எந்த பெருவெள்ளமும், புயல் காற்றுமான போராட்டங்களோ, பிரச்சனைகளோ நம்மை ஒன்றும் செய்யமுடியாது. பக்தனாகிய நோவா கிறிஸ்துவாகிய அடைக்கல பேழைக்குள் தன்னையும் தன் குடும்பத்தையும் காத்துக்கொண்டார். பெருவெள்ள அழிவுக்கு தப்பினார்.

மேலும் **ரூத் 2:12** கூறுகிறது **“இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு(ரூத்) அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக”**. ஆம் தன்னுடைய மிகவும் மோசமான, துக்ககரமான ஆதரவற்ற சூழ்நிலையிலே இஸ்ரவேலின் தேவனை பற்றி பிடித்து கொண்ட மோவாப்பிய பெண்ணாகிய ரூத், அவருடைய அடைக்கலத்திற்குள் வந்தபொழுது, நிறைவான பலனாக தேவன் கிறிஸ்துவின் மீட்பின் திட்டத்திற்குள் ரூத்தை கொண்டுவந்தார். தேவ மனிதாரகிய தாவீதும் தன்னுடைய வாழ்க்கையின் அநேக சூழ்நிலைகளில் தேவ அடைக்கலத்தையே சார்ந்து கொண்டார். அதனை நாம் அவருடைய சங்கீதங்களிலே காணலாம்.


இப்பொழுதும் சபையாகிய நாம் பிரதான மேய்ப்பராகிய இயேசு கிறிஸ்துவின் அடைக்கலத்திற்குள் இருக்கிறோம். அவருடைய கரத்தில் (அடைக்கலத்தில்) இருந்து ஒன்றும் நம்மை பிரிக்க முடியாது. ஏனெனில் நமக்காக அவர் தமது ஜீவனையே கிரயமாக தந்து நம்மை தமக்காக

தெரிந்துகொண்டிருக்கிறார். நாமாக அவருடைய அடைக்கலத்திற்குள் இருந்து வெளியே வந்தால் ஒழிய அவர் ஒருபோதும் தம்முடைய அடைக்கலத்திற்குள் இருந்து நம்மை விட்டுவிடமாட்டார்.

இப்படிப்பட்ட அடைக்கலத்திற்குள் இருக்கிற நாம் மற்ற மனிதர்களும் கிறிஸ்துவின் அடைக்கலத்திற்குள் வந்துவிடவேண்டும் என்ற வாஞ்சையோடு அவர்களுக்கும் இரட்சிப்பின் சுவிசேஷத்தை சொல்லவேண்டும். இந்த பொல்லாத உலகத்தின் மத்தியில் கிறிஸ்துவின் அடைக்கலத்திற்குள் நாம் வாழும்பொழுது, ஒரு நாள் கிறிஸ்து வருவார், அவர் வந்து நம்மை நித்திய அடைக்கலமாம் பரலோகத்திற்கு அழைத்து செல்வார். ஆமென், அல்லேலூயா.

# கபடற்றவர்கள்

**ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்; ஆகையால், சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள் (மத் 10:16).**




மேற்கண்ட மத் 10:16 வசனம் கூறுகிறது போல ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்க்கும் ஒரு முக்கியமான சுபாவம் கபடற்ற தன்மையாகும். கபடற்ற தன்மையை பல விதங்களில் நாம் காணலாம். பொதுவாக கபடற்ற தன்மை என்பது எந்த காரியத்தை குறித்தும், மனிதரை குறித்தும் இருதயத்தில் எந்தவித ஊள்நோக்கமும் இல்லாமல், தெளிந்த சுத்தமான மனத்தோடு பிறரோடு பழகுவதும், காரியங்களை செய்வதுமாகும். உதாரணமாக ஒரு சிறுபிள்ளை, செய்யும் காரியங்களையோ, மற்ற மனிதரோடு பழகும் செயலையோ எந்தவித ஊள்நோக்கமும் இல்லாமல் கபடற்ற தன்மையோடு செய்கிறது. எனவே தான் ஆண்டவர் பரலோக இராஜ்யம் அப்படிபட்டவர்களுடையது என்றார்.

**அப் 4:13 கூறுகிறது "பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு, அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதைமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்களென்றும் அறிந்துகொண்டார்கள்"** , ஒருவிதத்தில் படிப்பற்ற பேதைகளாய் அவர்கள் காணப்பட்டாலும், அதுவே அவர்களை வேறு எதையும் சார்ந்து கொள்ளாமல், வாழ்க்கையின் சூழ்நிலைகளை எண்ணாமல் எல்லாவற்றையும் விட்டு ஆண்டவரை பின்பற்ற செய்தது. **"ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே", (யோ 6:68)** என்று பேதுருவை கூறசெய்தது. அந்த ஜீவ வசனங்களே பேதுருவை **அப்போஸ்தலர் 3ஆம்** அதிகாரத்தில் தைரியமாக பேசசெய்தது.

மேலும் வசனம் சொல்கிறது அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்களென்றும் யூத ஆசாரியர்கள் அறிந்துகொண்டனர் என்று. இதிலிருந்து நாம் அறிந்து கொள்ளும் சத்தியம் என்னவென்றால், நம்முடைய பேதைமையை மற்ற மனிதர்கள் அறியாமையாய் கண்டாலும், சுத்த இருதயத்தோடு இருக்கும் பேதைமையை கபடற்ற தன்மையாகவே தேவன் காண்கிறார். சுருக்கமாக சொன்னால், நாம் பெரிய புத்திசாலிகளாக, படிப்பாளிகளாக எல்லாவற்றையும் அறிந்தவர்களாக, நம்முடைய புத்தியை பயன்படுத்தி காரியங்களை செய்கிறவர்களாக இருப்பதைவிட, எதையும் அறியாத பேதைமை தன்மையில் இருந்தாலும், அதனுள் இருக்கும் கபடற்ற தன்மையையே ஆண்டவர் பெரியதாக பார்க்கிறார். அப்படிபட்டவர்களுக்கு வேண்டிய கிருபைகளை தேவனே தருகிறார். எனவேதான் உலகபிரகாரமாக புத்திசாலிகளாய், திறமைசாலிகளாய் இல்லாதோரையும் கொண்டு தேவன் வல்லமையான காரியங்களை செய்கிறார். அவர் எதிர்பார்பதெல்லாம் அவரை சார்ந்து செயல்படும் கபடற்ற ஒரு இருதயத்தையே ஆகும்.

கபடற்ற மனத்தோடு இருப்பவர்கள் நிச்சயமாகவே சுத்த மனசாட்சியை உடையவர்களாய் இருப்பார்கள். பவுல் சொல்கிறார் **அப் 23 : 1 இல் "இந்நாள்வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நல்மனச்சாட்சியோடே தேவனுக்குமுன்பாக நடந்துவந்தேன்"**, என்றார். மேலும் **அப் 24 : 16 இல் "நான் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன்"**, என்றார். ஆம், இப்படியாக அப்போஸ்தலனாகிய பவுல் சுத்த மனச்சாட்சியோடு, கபடற்ற தன்மையில் காணப்பட்டதாலேயே அவருடைய ஊழியம் மகிமையாய் இருந்தது.

மேலும் பழைய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்த யோசேப்பு, ரூத் போன்றோரின் வாழ்க்கையில் இப்படிப்பட்ட கபடற்ற தன்மை காணப்பட்டதாலேயே அவர்கள் வாழ்க்கையில் இன்னல்கள் பல நேரிட்டாலும் இறுதியில் அவர்களுடைய முடிவு சம்பூரணமாய் இருந்தது. இக்காலத்தில் இருக்கும் ஊழியர்கள் ஆனாலும் சரி, விசுவாசிகள் ஆனாலும் சரி, சுத்த இருதயத்தோடு, கபடற்ற மனத்தோடு தேவனுக்கு முன்பாக இவ்வுலக வாழ்க்கையை வாழ்வதையே தேவன் எதிர்பார்க்கிறார்,

ஆனால் அதற்கு பதிலாக பலர் தங்களின் புத்தியையும், திறமையையும், சூழ்நிலையையும் சார்ந்து கிறிஸ்தவ வாழ்வு வாழ முற்படுகின்றனர். சிலர் ஊழியத்தையும் செய்ய விழைகின்றனர். இன்னும் சிலர் தங்களின் பொல்லாத யோசனையினால் தேவ பக்தியை ஆதாய தொழிலாகவும் மாற்றிவிட்டனர். இதனால் உலக மனிதர்களுக்கும், தேவ பிள்ளைகள் என்று கூறிகொள்கிற இவர்களுக்கும் வித்தியாசம் இல்லாமல் போகிறது. ஏனெனில் அவர்கள் கிறிஸ்துவின் மேல் அஸ்திபாரம் போடவில்லை.

ஆனால் கபடற்ற மனத்தோடு ஆண்டவரையே சார்ந்திருக்கிறவர்கள், அவரையே நம்பி அவர்மேல் தங்கள் அஸ்திபாரத்தை போடுகின்றனர். உலக பிரகாரமாக மற்றவர்கள் கண்களுக்கு இவர்கள் பேதைகளாய், பிழைக்க தெரியாதவர்களாய் காணப்பட்டாலும் நாள் ஒன்று வரும், அன்று **“இயேசு நாத்தான்வேலைத் தம்மிடத்தில் வரக்கண்டு அவனைக்குறித்து: இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன்” (யோ 1:47)**, என்று கூறியது போல நம்மையும், என் புறாவே (கபடற்றவளே), என் உத்தமியே **(உன் 6:9)** என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அழைப்பார். ஆமென், அல்லேலூயா.

# கர்த்தர்மேல் நம்பிக்கை

**கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். (எரே 17:7)**




இவ்வுலகில் நாம் வாழும் அனுதின வாழ்க்கையில், நம் ஆவி, ஆத்துமா மற்றும் சரீரத்திற்கு வேண்டிய தேவைகள் பல காணப்படுகின்றன. சிலர் அழிந்து போகிற பொன், பொருள், சுயபெலன், மனுஷ தயவு ஆகியவற்றை மட்டும் சார்ந்து தங்கள் வாழ்க்கையை இந்த அநித்தியமான சரீரம் அழிந்துபோகும் வரை வாழ்ந்துவிடலாம் என்று எண்ணுகின்றனர். இவர்களுக்கு நித்திய வாழ்வை குறித்தோ அழிந்துபோகிற இந்த சரீரம் மறுரூபமாகி மகிமையை அடைய வேண்டும் என்ற எண்ணமோ, தங்கள் ஆவி, ஆத்துமாவை குறித்த கரிசனையோ இல்லாமல் செத்த மனசாட்சியோடு சுயநீதியோடு வாழ்கின்றனர்.

ஆனால் தங்கள் நித்திய வாழ்வை குறித்த கரிசனை உடையவர்கள், சரீர மீட்பை குறித்த அறிவுடையவர்கள், நிச்சயமாக கர்த்தர் மேல் தங்கள் நம்பிக்கையை வைத்தே இவ்வுலக வாழ்வை வாழ முடியும். சுய நீதியையோ, மற்ற மனுஷரையோ, பொருட்களையோ சார்ந்து வாழ்வோர் ஒருபோதும் நித்திய வாழ்வை பெற்றுக்கொள்ள முடியாது. **எரே 17:5 இல் "மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்"**, என்று கூறப்பட காரணம் நாம் தேவனுடைய கரத்தை விடுகிற அதே நேரத்தில் சாத்தான் நமது கரத்தை பிடித்துக்கொள்கிறான். நாம் தேவனுடைய பாதுகாப்பை விட்டு விலகுகிற அதே நேரத்தில் சத்துருவின் வலைக்குள் சிக்கிகொள்கிறோம்,

நமது கால்கள் தேவனுடைய பாதையை விட்டு விலகுகிற அதே நேரத்தில் பாதாளத்தின் பாதையை நோக்கி செல்கிறோம். சவுலை விட்டு தேவனுடைய ஆவி நீங்கினபோது, பொல்லாத ஆவி அவனை பிடித்துக் கொண்டது **(1 சாமு 16:14)**.

மேலும் **"எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?" (எரே 17:9)** என்று வசனம் கூற காரணம், தேவன் இல்லாத இருதயத்திற்குள் சத்துரு உட்புகுந்து விடுகிறான். சத்துரு நமது இருதயத்திற்குள் புகுவதற்கு நமது மாம்சத்தையே உபயோகிக்கிறான். மாம்சத்திற்கு சில மாயையான இன்பங்களை தருவதன் மூலமாக, நம் சரீரத்தின் போக்கில் நமது ஆவி, ஆத்துமாவை செயல்பட வைக்கிறான். இதன் மூலம நமது மாம்சமும், மனதும் இச்சித்தவைகளை செய்து, பிற மனுஷர் மேலும், நமது மாம்ச பலத்தின் மேலும் நம்பிக்கை வைத்து தேவனை விட்டு விலக செய்கிறான். இவ்வாறே ஏவாள் வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்குட்பட்டாள். கண்களின் இச்சையும் (பார்வைக்கு இன்பம்), மாம்சத்தின் இச்சையும் (புசிப்புக்கு நல்லது), ஜீவனத்தின் பெருமையும் (புத்தியைத் தெளிவிக்கிறது) அவளை விழதள்ளிற்று **(ஆதி 3:6)**.

ஆனால் **"கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப்போலிருப்பான்" , எரே (17:7,8)** என்று வசனம் கூறுவது போல நாம் நம்பியிருக்கிற துருகம் அவராகவே இருக்கவேண்டும், அப்பொழுது மேற்கூறப்பட்டுள்ள ஆசிர்வாதங்கள் நமக்கு கிடைக்கும். முதலாவதாக தண்ணீரண்டையிலே நாட்டப்படுவோம். இங்கு கூறப்பட்டுள்ள சத்தியம், கர்த்தரை நாம் நம்பிக்கையாக கொண்டிருக்கும் போது நாம் செழித்து இருக்கும்படியாக, நம்முடைய ஆவிக்குரிய, சரீரத்திற்குரிய தேவைகள் யாவும் சந்திக்கப்படும்படியாக, கர்த்தருக்குள்ளான ஒரு திருப்தியுள்ள வாழ்வு வாழும்படியாக, தேவ பாதுகாப்பின், போஷிப்பின் வட்டத்திற்குள் நாம் வாழமுடியும்.

இரண்டாவதாக, வேர் விடுகிற அனுபவம். இங்கு நாம் அறிந்து கொள்ளும் சத்தியம், நாம் செழித்து இருப்பது மாத்திரமல்ல, நாம் விருத்தியடையும்படியான ஆசிர்வாதத்தையும் தேவன் அளிக்கிறார். நம்முடைய ஊழியத்திலும், உலக பிரகாரமான வேலைகளிலும், குடும்பத்திலும், தனிப்பட்ட ஆவிக்குரிய வாழ்விலும் வேர்விட்டு

விருத்தியடையும்படியாய், நம்முடைய எல்லைகள் பெரிதாகும்படியாய் செய்கிறார். மூன்றாவதாக, உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிற அனுபவம். இங்கு நாம் அறிந்து கொள்கிற சத்தியம், தேவனை நம்பிக்கையாக கொண்டிருக்கும் பொழுது நாம் நம் வாழ்க்கையில் எதிர்மறையான சூழ்நிலைகள் இருக்கும்பொழுதும், நாம் தவித்து போகும்படியான காரியங்கள் நிகழும்பொழுதும், தேவன் மேல் இருக்கிற நம்பிக்கையின் நிமித்தம் நாம் எப்பொழுதும் போல் நிறைவுள்ளவர்களாய் காணப்படுவோம்.

இறுதியாக, மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனி கொடுக்கிற அனுபவம். ஒருவேளை நம் வாழ்க்கையில் சில குறைவுகள், இழப்புக்கள் ஏற்படினும் நமது வாழ்வு தேவனுக்கு முன்பாக எப்பொழுதும் போல கனிகொடுக்கிறதாய் காணப்படும். வாழ்க்கையில் ஏற்பட்ட வறட்சியான அனுபவங்கள் நம்மை கனியற்றவர்களாய் மாற்ற முடியாது. அது மேலும் நாம் தேவனுக்குள்ளாய் வேர் ஊன்றவே செய்யும். இதையே நாம் யோபு, யோசேப்பு போன்றோரின் வாழ்க்கையில் காண்கிறோம். அவர்கள் வாழ்ந்திருந்த காலத்திலும், இழப்புக்கள், வேதனைகளை, எதிர்மறையான சூழ்நிலைகளை, மனித எதிர்ப்புகளை கண்ட நேரத்திலும் தேவன் மேல் வைத்த நம்பிக்கையினிமித்தம் கனியுள்ளவர்களாய் காணப்பட்டனர். யோபு **"அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்" (யோபு 13:15)** என்று அறிக்கையிட்டார். யோசேப்பை குறித்து **ஆதி 49:22 கூறுகிறது "யோசேப்பு கனிதரும் செடி; அவன் நீர் ஊற்றண்டையிலுள்ள கனிதரும் செடி; அதின் கொடிகள் சுவரின்மேல் படரும்"** என்று.

எனவே கர்த்தரையே நாம் நம் நம்பிக்கையாக கொண்டிருப்போம். ஒரு நாள் அவர் வருவார் அவர் வந்து நம்மை தம்மோடு அழைத்து செல்வார். இந்த நம்பிக்கையில் நிலைத்திருப்போம். மாரநாதா, அல்லேலூயா, ஆமென்.

# காயங் கட்டுகிற தேவன்

**நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். (ஏசா 53:5)**



நம் வாழ்வில் நமது சரீரத்திலும், ஆத்துமாவிலும் காயங்கள் உண்டாகிறது. ஒன்றில் ஏற்படும் காயம் மற்றொன்றையும் பாதிக்கிறது. நமது சரீரத்தில் ஏற்படும் காயங்களுக்கு மருந்தை நாம் இவ்வுலக வைத்தியர்களிடம் இருந்து பெற்றுக்கொள்கிறோம். அதன் மூலம் நமது சரீரத்தில் தேவ தயவினால் சுகம் உண்டாகிறது.

ஆனால் நமது ஆத்துமாவிலும், ஆவிக்குரிய வாழ்விலும் உண்டாகும் காயங்களுக்கு எந்த மனிதராலும் மருந்து தர முடியாது. அது சத்துருவினால் உண்டான காயமாக இருந்தாலும், அல்லது நாம் நமது சுயத்தை சார்ந்ததினால் உண்டான காயமாய் இருந்தாலும், அல்லது தேவனால் அனுமதிக்கப்பட்ட காயமாய் இருந்தாலும், அதை ஆற்ற நம்மாலோ, மற்ற மனிதராலோ முடியாது. எப்படியிருப்பினும், நமது சரீரத்திலோ, ஆத்துமாவிலோ, எதில் காயம் உண்டானாலும் அதைக் குறித்து தேவன் கரிசனை உள்ளவராய் இருக்கிறார். நமது சரீரத்தில் உண்டாகும் காயங்களை (வியாதி, பலவீனம், பாடுகள்) தேவன்

பலவிதங்களில் மற்ற மனிதரையோ, மருந்தையோ, அல்லது ஒரு அற்புதத்தையோ செய்து குணமாக்குகிறார்.

இதனால் நமது சரீரத்திலும் ஆத்துமாவிலும் உண்டான வேதனை நீங்கி நாம் சொஸ்தமடைகிறோம். இதனை ஆண்டவர் இப்பூமியில் சுற்றி திரிந்த காலத்திலும் பல மனிதர்களுக்கு செய்தார், **"பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார்" (மத் 4:23)**.

ஆனால் ஆத்துமாவில் உண்டாகும் வியாதிக்கு, சுகத்தை பெற்றுக்கொள்ள நமக்கு விசேஷமான ஒன்று தேவைப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் மக்கள் பாவம்செய்ததினால் உண்டான காயத்தை குறித்து, **ஏரே 30:12, 13** வசனங்களில், **"கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: உன் புண் ஆறாததாயும் உன் காயம் கொடிதாயும் இருக்கிறது. உன் காயங்களைக் கட்டும்படி உனக்காக ஏற்படுவாரில்லை; உன்னைச் சொஸ்தப்படுத்தும் ஔஷதங்களுமில்லை"**. மேலும **ஏரே 8:21, 22** வசனங்களில், **"என் ஜனமாகிய குமாரத்தியின் காயங்களினால் நானும் காயப்பட்டேன்; கரிகறுத்திருக்கிறேன்; திகைப்பு என்னைப் பிடித்தது. கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ? இரணவைத்தியனும் அங்கே இல்லையோ? பின்னை ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற்போனாள்?"**, என்றும் அங்கலாய்கிறார்.

இப்படிப்பட்ட காயங்களை ஆற்றும்படிக்கே, நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் காயங்களை ஏற்றுக்கொண்டார். **ஏசா 53:5** கூறுகிறது, **"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்"**. இங்கு நாம் அறிந்து கொள்ளும் சத்தியம், அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம் என்பதாகும்.

அவர் அடிக்கப்பட்டு காயப்பட்டதால் நாம் நமது காயங்கள் நீங்கி குணமாகிறோம். இதுவே தேவ திட்டம். முந்தின மனுஷனாகிய ஆதாமின் மீறுதலினால் உண்டான காயத்தை, பிந்தி வந்தவராகிய கர்த்தராகிய இயேசுவின் காயத்தின் தழும்புகள் குணமாக்கிற்று. இதுவே முழுமனுக்குலத்திற்கும் உண்டான நற்செய்தி. இதை அறிவிக்கவே ஆண்டவர் நம்மை தெரிந்துகொண்டிருக்கிறார். ஏனெனில் நம்மை அவர் குணமாக்கியிருக்கிறார். இந்த நற்செய்தியாகிய வார்த்தைகளை கேட்டு

விசுவாசிக்கும் ஒவ்வொரு ஆத்துமாவையும், ஆவியையும் அது சொஸ்தமாக்குகிறது.

நமது சரீரத்தில் உண்டாகும் காயங்கள் சில நாட்கள் தான் நமக்கு வேதனையை தரும். ஆனால் நமது ஆவியில் காயத்தோடு காணப்படுவோமானால், அது நமது நித்திய வாழ்வை பாதிக்கும். மேலும் நாம் பெற்று கொண்ட சுகத்தை காத்துக்கொள்ளவும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். எனவே சரீரத்திலோ, ஆவியிலோ, எதில் காயம் உண்டானாலும், நமது பரம வைத்தியராகிய, பரிகாரியாகிய அவரையே சார்ந்து கொள்வோம். அவர் காயங் கட்டுவார், குணமாக்குவார். அப்பொழுது நாம் சரீரத்திலும், ஆவியிலும் ஆரோக்கியத்தோடு மறுரூபமடைந்து நித்திய காலமாய் வாழுவோம். ஆமென், அல்லேலூயா.

# சூழ்நிலைகளை மாற்றுக்கிற தேவன்

**காரியம் மாறுதலாய் முடிந்தது (எஸ்தர் 9:1)**




நம் வாழ்கையில் நாம் சந்திக்கிற அநேக சூழ்நிலைகள், சில வேளைகளில் நம்மை நிலைகுலைய செய்துவிடுகிறது. வியாதியின் ஊடாய் கடந்து செல்லும்பொழுதும், பிரச்சனைகளின் ஊடாய் கடந்து செல்லும்பொழுதும், ஊழியத்தில் தோய்வுகள் ஊண்டாகிறபொழுதும், நம்முடைய ஆவியும், ஆத்துமாவும், சரீரமும் சோர்ந்து போகிறது. சில துன்பமான சூழ்நிலைகள் தொடர்ந்து வரும்பொழுதும், ஒன்றன்பின் ஒன்றாக பிரச்சனைகளும், போராட்டங்களும், வியாதிகளும் உண்டாகும் போதும், நமக்கும் நம்மை சார்ந்திருப்பவர்களுக்கும் உண்டாகிற வேதனைகளை காணும்பொழுதும், இத்துன்ப சூழ்நிலை எப்பொழுது மாறுமோ என்று ஏங்கி தவிக்கிறவர்களாய் நாம் காணப்படுகிறோம்.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையே எஸ்தர் புத்தகத்தில் காணப்படுகிறது. **எஸ்தர் 8:6** கூறுகிறது **"என் ஜனத்தின்மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படிப் பார்க்கக்கூடும்? என் குலத்துக்கு வரும் அழிவை நான் எப்படிச் சகிக்கக்கூடும்? என்றாள்"** , ஆம் இங்கு மரணபோராட்டத்தை கண்ட எஸ்தரும், மொர்தெகாயும் மற்றும் யூத மக்களும் அதை சகிக்க முடியாதவர்களாய் காணப்பட்டனர். பிரச்சனையில் இருந்து தப்பிக்க முடியாத, தவிர்க்கமுடியாத அந்த இக்கட்டான சூழ்நிலையில் இருந்து வெளிவரமுடியாதவர்களாய் தவித்தனர்.

ஆனால் **எஸ்தர் 9:1** கூறுகிறபடி **“காரியம் மாறுதலாய் முடிந்தது”** . ஆம் பொல்லாத பிசாசினாலும், மனிதர்களினாலும், சூழ்நிலைகளினாலும், நம்முடைய பாவத்தினாலும், அறியாமையினாலும், தேவ திட்டங்களினாலும், நம்முடைய வாழ்க்கையில் அனுமதிக்கப்பட்ட சில இக்கட்டான சூழிநிலைகளில் நாம் போராடி கொண்டிருந்தாலும், இனி தப்பிக்க வழி இல்லை, இனி ஓரடி கூட முன்னெடுத்து வைக்க வாய்ப்பில்லை, எந்த மனிதராலும், எப்படி முயற்சித்தாலும் எதுவும் நடக்க போவதில்லை என்ற சூழ்நிலையின் மத்தியிலும், சரியான நேரத்தில் தேவன் கிரியைசெய்து, நம்முடைய சூழ்நிலைகளை மாற்றி, காரியம் மாறுதலாய் அமையும்படியாய் ஆண்டவர் செய்வார்.

வேதாகம் முழுவதும், பழைய ஏற்பாட்டில் இருந்து, புதிய ஏற்பாடு வரை, ஏன் இன்றைய காலகட்டத்திலும் கூட தேவன் இவ்வாறாய் செயலாற்றுகிறவராய் இருக்கிறார். ஆதியாகமத்தில், யோசேப்பின் வாழ்க்கையில் இருந்த இக்கட்டான சூழ்நிலைகளை தேவன் ஒரேநாளில் மாற்றிப் போட்டார். யோபுவின் வாழ்க்கையிலும் தேவன் இவ்வாறே கிரியை செய்தார். புதிய ஏற்பாட்டில் கானா ஊர் கல்யாணத்தில் தண்ணீரை திராட்சரசமாய் மாற்றின் காரியம், நாயீன் ஊர் விதவையின் மகனை உயிரோடு எழுப்பிய காரியம், மரித்த லாசருவை உயிரோடு எழுப்பிய காரியம், இன்னும் 38 ஆண்டுகள் வியாதியாய் கிடந்தவன் பெற்றுக்கொண்ட விடுதலை, இவை யாவும் ஒரு சில மணித்துளிகளில் தேவன் கண்ணீரை ஆனந்த களிப்பாய் மாறப்பண்ணின சூழ்நிலைகள் ஆகும்.

மேலும் **“இரையாதே அமைதலாயிரு” (மாற் 4:39)** என்று சொல்லி கொந்தளிப்பான சூழ்நிலையை அமைதியான சூழ்நிலையாய் மாற்றினார். ஆம், இன்றும் எத்தனையோ தேவ பிள்ளைகள் தங்கள வாழ்வில் கடந்து செல்லும் இக்கட்டான சூழ்நிலைகளை தேவன் சரியான நேரத்தில் மாற்றுகிறவராய், விடுதலை தருகிறவராய் இருக்கிறார். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு என்று கூறப்பட்டுள்ளபடி வேதனையான சூழ்நிலைகள் வந்தாலும், அவர் நம்மை தீமையினின்று காக்கிற தேவனாய் இருக்கிறார். ஆம் காரியங்கள் மாறுதலாய் நடக்கும்பொழுது, நாம் நம்மை நடத்துகிற தேவனின் வல்லமையையும், அன்பையும் உணர்ந்து கொள்கிறோம். இன்னும் அவரை கிட்டிசேர்கிறோம். நமக்கு மிகுந்த மகிழ்ச்சியும், தேவன் நம்மை இவ்வுலகத்தில் வைத்திருக்கிற நோக்கத்தையும் புரிந்துகொள்கிறோம். மேலும் சத்துருவை எதிர்த்து போராட கூடிய பெலனையும் பெற்றுக்கொள்கிறோம். நம்மை போல் இக்கட்டான சூழ்நிலையில் கடந்து போவோரை ஆறுதல்படுத்தவும்,

அவர்களை விடுவிக்கவும் செய்ய வேண்டிய காரியங்களை அறிந்துக்கொள்கிறோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக **"இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்." (1 கொரி 15:51,52)**.

**"அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின" (வெளி 21:4)**. ஆம் நாம் இப்பொழுது இருக்கிற சூழ்நிலைகள் எப்படி இருந்தாலும், இனி நாம் இந்த உலகத்தில் சந்திக்க போகிற சூழ்நிலைகள் எப்படி இருந்தாலும், அவை எல்லாவற்றையும் நன்மையாக்கும் தேவன் ஒருவர் நமக்கு இருக்கிறார். ஆகவே நாம் எதைக்குறித்தும் கவலைப்படாமல், அவரையே சார்ந்துகொள்வோம், விடுதலைபெறுவோம், மறுரூபமாவோம், ஆமென், அல்லேலூயா.

# கலங்கின நேரங்களில்



நம்முடைய வாழ்க்கையில் மிகவும் துயரமான நேரங்களில், கண்ணீரின் பள்ளத்தாக்கை நாம் கடந்து செல்லும்பொழுது, நாம் செய்வதறியாது நிலைதடுமாறிப்போகிறோம். **“மனுஷனுடைய இருதயத்திலுள்ள கவலை அதை ஒடுக்கும்” என்று நீதி 12:25** கூறுகிறது. மேலும் **“இருதயத்தின் கசப்பு இருதயத்திற்கே தெரியும்” என்று நீதி 14:10** கூறுகிறது. இதனால் நாம் ஆவியிலும், ஆத்துமாவிலும் சோர்ந்து போகிறோம். மேலும் **“மனுஷனுடைய ஆவி அவன் பலவீனத்தைத் தாங்கும்; முறிந்த ஆவி யாரால் தாங்கக்கூடும்?” என்று நீதி 18:14** கூறுகிறது.

எனவே இதனால் நாம் சரீரத்திலும் பெலவீனமடைந்து சோர்ந்து போகிறோம். தாவீது தன் துயரத்தை குறித்து கூறும்பொழுது **“தண்ணீரைப்போல ஊற்றுண்டேன்; என் எலும்புகளெல்லாம் கட்டுவிட்டது, என் இருதயம் மெழுகுபோலாகி, என் குடல்களின் நடுவே உருகிற்று. என் பெலன் ஓட்டைப்போல் காய்ந்தது; என் நாவு மேல்வாயோடே ஒட்டிக்கொண்டது; என்னை மரணத்தூளிலே போடுகிறீர்.” (சங் 22:14,15)** என்கிறார். யோபும் தன் துயரத்தை குறித்து கூறும்பொழுது **“எனக்குச் சுகமுமில்லை, இளைப்பாறுதலுமில்லை, அமைதலுமில்லை; எனக்குத் தத்தளிப்பே நேரிட்டது.” (யோபு 3:26)** என்கிறார். மேலும் யோபு **“என்**

**சஞ்சலம் நிறுக்கப்பட்டு, என் நிர்ப்பந்தம் எல்லாம் தராசிலே வைக்கப்பட்டால் நலமாயிருக்கும். அப்பொழுது அது கடற்கரை மணலைப்பார்க்கிலும் பாரமாயிருக்கும்; ஆகையால் என் துக்கம் சொல்லிமுடியாது." (யோபு 6:2,3)** என்கிறார். இவர்களை போல் வேதாகமத்தில் பல தேவ பிள்ளைகள் தாங்க முடியாத வேதனைகளுக்குள்ளாக கடந்து சென்றுள்ளனர்.

1 சாமு முதலாம் அதிகாரத்தில் அன்னாளை குறித்து நாம் காண்கிறோம். **1 சாமு 1:10 கூறுகிறது "அவள் போய், மனங்கசந்து, மிகவும் அழுது, கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி"** என்று. அவளே தன வாயால் **"நான் மனக்கிலேசமுள்ள ஸ்திரீ; நான் திராட்சரசமாகிலும் மதுவாகிலும் குடிக்கவில்லை; நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன். உம்முடைய அடியாளைப் பேலியாளின் மகளாக எண்ணாதேயும்; மிகுதியான விசாரத்தினாலும் கிலேசத்தினாலும் இந்நேரமட்டும் விண்ணப்பம்பண்ணினேன்" (1 சாமு 1:15,16)** என்று அறிக்கையிட்டாள். ஈசாக்கை ஆண்டவர் பலியிட சொன்னபொழுதும் ஆபிரகாம் இப்படிப்பட்ட மனகிலேசத்திற்குள்ளாய் கடந்துபோயிருப்பார். சிறைசாலையில் யோசேப்பு வாடிய பொழுதும் இப்படிப்பட்ட வேதனைக்குள்ளாய் கடந்துபோயிருப்பார்.

மேலும் புதிய ஏற்பாட்டில் லாசரு மரித்தபொழுது மார்த்தாளும், மரியாளும் ஆண்டவருக்கு முன்பாக கண்ணீர் விட்டனர். **யோ 11:33-35 கூறுகிறது "அவள் அழுகிறதையும் அவளோடேகூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கித் துயரமடைந்து: அவனை எங்கே வைத்தீர்கள் என்றார். ஆண்டவரே, வந்து பாரும் என்றார்கள். இயேசு கண்ணீர் விட்டார்."** என்று. ஆம் இன்றும் இப்படிப்பட்ட துயரமான சூழ்நிலைக்களுக்குள்ளாய் கடந்து போகிற மக்கள் உண்டு. ஆறுதல் அடைய முடியாதபடி பலவிதமான வேதனைகள், வியாதிகள், இழப்புக்கள் வழியாய் கடந்துபோகிற மக்கள் உண்டு. சமீபத்தில் நேபாளத்தில் நிகழ்ந்த பூமி அதிர்ச்சியினால் எத்தனையோ மக்கள் ஒரே நேரத்தில் மாண்டுபோயினர். லட்சக்கணக்கான மக்கள் தங்கள் உயிரையும், உடைமைகளையும், உற்றார் உறவினர்களையும் இழந்து தவிக்கின்றனர். இன்னும் இலங்கையிலும், பல தேசங்களிலும் நடக்கும் துயரங்களால் பாதிக்கப்படுகின்ற மக்களை பற்றி நாம் அனுதினமும் கேட்டுக்கொண்டுதானிருக்கிறோம்.

இப்படிப்பட்ட துயரங்களுக்குள்ளாய் செல்லும் நமக்கு ஒரே ஆறுதல் ஆண்டவருடைய பாதபடி மட்டுமே. மேலும் **யோ 11:35 கூறுகிறது** போல ஆண்டவரும் நம்மோடு கூட அழுகிறார். நமக்கு ஏற்படும் துன்பங்களை அவர் அனுமதித்திருந்தாலும், நம்மோடு கூட அவரும்

வேதனைப்படுகிறார். நாம் துயரத்தில் இருந்து மீள வேண்டும் என்பதே அவர் விருப்பம். அதை அவர் செய்ய வல்லவராயும் இருக்கிறார். நாம் செய்யவேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்று தான், ஆண்டவருடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக்கொடுப்பதே ஆகும்.

கெத்செமனே தோட்டத்தில் **"அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது." (லூக் 22:44).** இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் அவர் கூறியது **"பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்." (லூக் 22:42).** ஆம் நம்முடைய துயர சூழ்நிலைகளுக்குள்ளாய் நிற்க முடியாதபடி நாம் தவிக்கலாம். ஆகிலும் அதன் மத்தியிலும் ஆண்டவருடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக்கொடுப்பதே சிறந்ததாகும்.

நமக்கு அதற்கான காரணம் தெரியாமலிருக்கலாம். ஆகிலும் அவர் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து அவர் பாதபடியில் காத்திருப்பதே சிறந்ததாகும். அதுவே நமக்கு ஆறுதலையும், விடுதலையையும் தரும். தேவன் தாமே தம்முடைய அன்பினாலும், அரவணைப்பினாலும் நம்மை ஆற்றி தேற்றி வழிநடத்துவாராக. துன்பமில்லா நித்திய ஜீவகரையில் சேப்பாராக. ஆமென், அல்லேலூயா.

**"கலங்கின நேரங்களில் கைதூக்கி எடுப்பவரே**
**கண்ணீரின் பள்ளதாக்கில் என்னோடு இருப்பவரே"**
**(பாடல் லேவி – ஜான் ஜெபராஜ்)**

# பயப்படாதே




நம் வாழ்க்கையில் நாம் அநேக காரியங்களை குறித்து கவலைப்பட்டு கலங்குகிறோம். என்ன ஆகுமோ, என்ன நடக்குமோ, எப்படி நடக்குமோ என்று தவிக்கிறோம். வியாதியினால், வறுமையினால், பிற மனிதர்களினால், சாத்தானால், இன்னும் பிற சூழ்நிலைகளினால் ஏற்படுகின்ற பயம் நம்மை சில வேளைகளில் நிலைகுலைய செய்துவிடுகிறது. தேவனை குறித்தோ, மற்ற எதை குறித்தோ சிந்திக்க முடியாதபடி பயம் நம்மை சில நேரங்களில் ஆட்கொள்கிறது. குறிப்பாக நமக்கோ அல்லது நம்மை சார்ந்தவர்களுக்கோ உண்டாகிற வியாதியினால் ஏற்படுகிற பயம் நம்மை வேதனையிலும், பயத்திலும் தள்ளுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் முழுமனதோடு வேதத்தை வாசிப்பதோ, ஜெபிப்பதோ முடியாமல் போகிறது. இப்படிப்பட்டதொரு பொல்லாத சூழ்நிலையில் தேவன் என்ன செய்வார் என்பதையும், நாம் என்ன செய்யவேண்டும் என்பதையும் பின்வருமாறு காண்போம்.

வேதாகமத்தில் இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் தேவ பிள்ளைகள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை நாம் முதலாவது காண்போம். **1 சாமுவேல் 30 அதிகாரத்தில்** தாவீது மற்றும் அவருடைய மனுஷர் அனைவரது மனைவி, பிள்ளைகளையும் அவர்களது உடைமைகளையும்

அமலேக்கியர் கொள்ளை அடித்து சென்ற பொழுது **“தாவீதும் அவனோடிருந்த ஜனங்களும் அழுகிறதற்குத் தங்களில் பெலனில்லாமல் போகுமட்டும் சத்தமிட்டு அழுதார்கள்” (1 சாமு 30:4)**. மேலும் **“தாவீது மிகவும் நெருக்கப்பட்டான்; சகல ஜனங்களும் தங்கள் குமாரர் குமாரத்திகளினிமித்தம் மனக்கிலேசமானதினால், அவனைக் கல்லெறியவேண்டும் என்று சொல்லிக்கொண்டார்கள்; தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டான்” (1 சாமு 30:6)**. இப்படிப்பட்ட ஒரு பயங்கரமான சூழ்நிலை தாவீதின் மனதையும், சரீரத்தையும் வெகுவாய் பாதித்தது.

ஒருபுறம் அவனது சொந்த மனைவி, பிள்ளைகள், உடைமைகளை இழந்த சூழ்நிலை; அழுகிறதற்கு பெலனில்லாமல் போகும் மட்டும் அழுததினால் சரீரத்தில் உண்டான சோர்வு மற்றும் உடன் இருந்த மனிதர்களினாலேயே உண்டான நெருக்கம். இவை எல்லாவற்றின் மத்தியிலும் தாவீது ஒன்றை மாத்திரம் செய்தார். அவர் தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டார். இதனால் பயந்து போகாமல், திட்டமிட்டு செய்ய வேண்டிய காரியங்களை செய்தார். இழந்துபோன அனைத்தையும் மீட்டு கொண்டதுமல்லாமல் தன் எதிரிகளை கொள்ளையும் இட்டார் **(1 சாமு 30:19,20)**. யூதாவின் மூப்பருக்குச் சிலவற்றை அனுப்பி **“கர்த்தருடைய சத்துருக்களின் கொள்ளையில் உங்களுக்கு உண்டாயிருக்கும் ஆசீர்வாத பாகம் என்று சொல்லச்சொன்னான்” (1 சாமு 30:26)**. ஒரு பயங்கரமான இழப்பின் சூழ்நிலை முடிவில் ஒரு ஆசிர்வாதமான சூழ்நிலையாக மாறியது. இதற்கு காரணம் தாவீது தன்னை தேவனுக்குள் திடப்படுத்தி கொண்டதேயாகும். நாமும் நமது சூழ்நிலைகளில் அமைதியாக தேவனுக்குள் நம்மை திடப்படுத்திக் கொண்டு, செய்ய வேண்டிய காரியங்களை செய்வோமானால் நமது சூழ்நிலையை தேவன் நிச்சயம் ஆசிர்வாதமாக மாற்றுவார்.

இதுவே யோபுவின் வாழ்விலும் நடந்தது. அவருடைய சூழ்நிலையும் அவரது மனதையும், உடலையும் நெருக்கி இருந்தது. அவரது மனைவி, நண்பர்களே அவரை ஏளனமாக பேசினர். தேவனை குறித்தும், மற்ற எதை குறித்தும் சிந்திக்க கூட முடியாதபடி இருள் மூடியிருந்தது. அதன் மத்தியிலும் அவர் ஒரு அறிக்கை செய்தார். அது **“அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்” (யோபு 13:15)** என்பதாகும். ஆம் எது நடந்தாலும், என்னால் எதுவும் இயலாமல் போனாலும், நான் மரித்தே போனாலும், அவரை மாத்திரமே நம்பி இருப்பேன் என்ற ஒரு மேலான விசுவாசம் அவருடைய வாழ்க்கையை இரட்டிபான ஆசிர்வாதமுள்ளதாய் மாற்றிற்று. தன் துயர சூழ்நிலையிலும், தன் நண்பர்களுக்காய் தேவனை நோக்கி வேண்டினார். கர்த்தர்

அவருடைய சூழ்நிலையை அற்புதமாய் மாற்றினார். **"யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். யோபுக்கு முன் இருந்த எல்லாவற்றைப்பார்க்கிலும் இரண்டத்தனையாய்க் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார்"** என்று **யோபு 42:10** கூறுகிறது.

நாம் மேற்கண்ட இரண்டு தேவ மனிதர்களும் ஒன்றையே செய்தனர். அவர்களுடைய இருதயத்தின் ஆழத்தில் தேவன் மேல் ஒரு அசைக்கமுடியாத விசுவாசம் இருந்தது. அது அவர்களை அந்த பொல்லாத சூழ்நிலைகளை தாங்கிகொள்ளவும், தேவனுக்குள்ளாய் தங்களை திடப்படுத்தி கொள்ளவும், தேவன் தங்களுக்கு சொன்ன காரியங்களை செய்யவும் அவர்களை பலப்படுத்தினது. அதுவே அவர்களுக்கு ஆசிர்வாதத்தையும் கொண்டு வந்தது. மேலும் சாமுவேலின் தாயாகிய அன்னாள், எசேக்கியா இராஜா போன்றோரின் வாழ்க்கையிலும் நிகழ்ந்தது இதுவே. அவர்களது சரீர பெலவீனத்திலும், வியாதி படுக்கையிலும் அவர்கள் கர்த்தருடைய சமூகத்திலேயே தங்கள் கண்ணீரை சிந்தினர். இங்கு நாம் அறிந்துகொள்ளும் சத்தியம், தேவ சமூகத்தில் நாம் நமது கண்ணீரை சிந்தும் பொழுது அல்லது நமது விண்ணப்பதை தெரிவிக்கும் பொழுது, அவரால் உண்டாகிற ஒரு விசுவாசமும், சமாதானமும் நம்மை நிறைக்கிறது. இதுவே நாம் நமது துக்கத்தில் அமிழ்ந்துபோகாமல் தொடர்ந்து செயல்படவைக்கிறது.

புதிய ஏற்பாட்டு காலத்தில் பவுல், பேதுரு ஆகியோரின் அனுபவத்தை காணும் பொழுது, அது இன்னமும் மேன்மையுள்ளதாய் காணப்படுகிறது. **அப்போஸ்தலர் 12ஆம் அதிகாரத்தில்** ஏரோது பேதுருவை கட்டி காவலில் வைத்திருந்தபொழுது **"அப்படியே பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காகத் தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார்கள். ஏரோது அவனை வெளியே கொண்டுவரும்படி குறித்திருந்த நாளுக்கு முந்தின நாள் இராத்திரியிலே, பேதுரு இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு, இரண்டு சேவகர் நடுவே நித்திரைபண்ணிக்கொண்டிருந்தான்; காவற்காரரும் கதவுக்கு முன்னிருந்து சிறைச்சாலையைக் காத்துக்கொண்டிருந்தார்கள்"** என்று **அப் 12:5,6** வசனங்கள் கூறுகிறது. மறுநாள் காலையில் தன் நிலை எப்படியிருக்கும் என்று பேதுரு அறிந்திருந்தும், அமைதியாக அவரால் உறங்கமுடிந்தது.

ஒரு புறம் சபையார் அவருக்காக ஊக்கத்தோடு ஜெபித்து கொண்டிருந்தனர். ஆனால் கிறிஸ்துவோடு கூட இருந்து, அவருடைய பாடு, மரணம் மற்றும் உயிர்தெழுதல் அனைத்தையும் கண்டிருந்த

பேதுருவினால், தனது வாழ்வில் நடக்கும் அனைத்தும் தேவ சித்தத்தின்படியே, தேவ ஆளுகைக்குள்ளாய் நடக்கிறது என்றும், எனவே எதைக்குறித்தும் பயப்படவும், கவலைப்படவும் தேவையில்லை என்பதை அவர் அறிந்திருந்தார். நமக்கும் தேவனோடு ஒரு நல்ல ஐக்கியம் இருக்குமானால், தேவனை அப்பா பிதாவாக நாம் காண்போமானால், நாமும் பேதுருவை போல் அமைதியாக இருப்போம். தேவன் அந்த நடு இரவிலும், சத்துருவின் கண்களை மறைத்து பேதுருவை அற்புதமாய் வெளியே கொண்டு வந்ததுபோல், நமக்கு எதிராய் இருக்கிற பிசாசின் கண்களுக்கு நம்மை விலக்கி காத்துக் கொள்வார். நமது வேதனையில் இருந்து விடுதலையை தருவார்.

**அப்போஸ்தலர் 16ஆம் அதிகாரத்தில் 23-26 வசனங்களில்**, பவுலும், சீலாவும் சிறைச்சாலையில் உட்காவலைரையிலே அடைப்பட்டு, கால்கள் தொழு மரத்தில் மாட்டிவைக்கப்பட்ட நிலைமையிலும் அவர்களால் ஜெபம் பண்ணி தேவனை துதித்துப்பாட முடிந்தது. இது விசுவாசத்தின், தேவ ஐக்கியத்தின் ஒரு மேலான அனுபவமாகும். இதனால் தேவன் செய்த கிரியை வல்லமையானதாகும். சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக பூமியையே அசைத்து, பவுல், சீலாவின் கட்டுகளை மட்டுமல்ல அனைவரது கட்டுகளும் கழன்று போகும்படியாய் தேவன் செய்தார். மேலும் இந்நிகழ்வினால் சிறைச்சாலைகாரன் வாழ்விலும், குடும்பத்திலும் இரட்சிப்பு உண்டானது **(அப் 16:31-34)**. ஒரு பயங்கரமான இரவு சூழ்நிலை, விடியற்காலையில் ஆசிர்வாதமான ஒன்றாக மாறியிருந்தது **(அப் 16:35-40)**.

நாமும் பயங்கரமான சூழ்நிலையாகிய இருண்ட வேளைகளுக்குள்ளாய் கடந்து போய்கொண்டிருக்கலாம். ஆனால் பேதுருவைபோல, பவுலைபோல அமைதியாக நம்மால் செயல்பட முடியுமானால், தேவன் விடுதலையை அந்த வினாடியே கட்டளையிடுவார். சத்துருவின் கண்கள் மறைக்கப்படும், பூமி அதிரும், கட்டுகள் அறுந்து போகும், தேவன் நம்மூலமாய் இரட்சிப்பையும், ஆசிர்வாதத்தையும் நமக்கும், பிறருக்கும் கொண்டு வருவார். ஆகவே அவரையே சார்ந்திருப்போம். அவர் நிச்சயம் நம்மை கைவிடவே மாட்டார். ஆமென், அல்லேலூயா.

# கனிகொடுத்தல்

**கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப்போலிருப்பான் (எரே 17:7,8)**




இவ்வுலகத்தில் வாழும் மக்களை இரண்டு வகையாக பிரிக்கலாம். ஒரு சாரார் தங்கள் வாழ்க்கையை குறித்த தேவ நோக்கத்தை உணர்ந்தவர்களாக, அதற்கேற்றபடி தங்கள் வாழ்க்கையை நடத்துகிறவர்களாக, வாழ்க்கையின் எந்த ஒரு காரியத்திலும், அது ஆவிக்குரிய காரியமானாலும் சரி, இவ்வுலகத்திற்குரிய காரியமானாலும் சரி, தேவனையே சார்ந்து, அவரையே நம்பி வாழ்கின்றனர். தங்கள் வாழ்க்கையில் நடைபெறும் ஒவ்வொரு காரியமும், தேவ சித்தப்படியும், அவரின் திட்டப்படியும், அவருடைய ஆளுகைக்குட்பட்டும் நடக்கிறது என்பதை அறிந்திருக்கின்றனர். ஆதலால் அவர்கள் இவ்வுலகத்தில் வேறு எதையும் சாராமல், அவரையே சார்ந்து ஜீவிக்கின்றனர். இவ்வுலகத்தின் எந்தவொரு காரியமும், மாற்றங்களும், அவர்களின் வாழ்க்கையின் ஓட்டத்தை மாற்றவோ, தடைப்பண்ணவோ முடியாது. எனவே அவர்கள் மற்ற எதை குறித்தும் கவலைபடமாட்டார்கள். வேதாகமத்தில் பல தேவ

மனிதர்களின் வாழ்க்கையில் நாம் இப்படிப்பட்ட காரியங்களை காணலாம் (உதாரணமாக: யோசேப்பு, மோசே, தாவீது, எலியா, ஏசாயா, எரேமியா, பவுல் போன்றோர்). இப்படிப்பட்டவர்களையே பாக்கியவான் என்று **எரேமியா 17:7** கூறுகிறது. மேலும் **எரே 17:8** இன்படி, இப்படிப்பட்ட மக்கள் வாழ்க்கையின் எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் தேவனுக்கேன்று கனிகொடுக்கிறவர்களாய் காணப்படுவார்கள். அவர்களின் மூலமாய் தேவதிட்டம் குறித்த காலத்தில், குறித்த நேரத்தில் நிறைவேறியே தீரும். அதை எந்த வல்லமையினாலும் தடுக்க முடியாது. ஏனெனில் அவர்கள் ஜீவ தண்ணீராம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவில் நாட்டப்பட்டவர்கள் **(எரே 17:8) (யோ 4:14).**

**"யோசேப்பு <u>கனிதரும்</u> செடி; அவன் நீர் ஊற்றண்டையிலுள்ள கனிதரும் செடி; அதின் கொடிகள் சுவரின்மேல் படரும்" (ஆதி 49:22).** ஆம் யோசேப்பு தன் வாழ்க்கையில் எத்தனையோ விதமான சூழ்நிலைகளுக்குள்ளாய் தன் வாலிப நாட்களிலேயே கடந்து சென்றார். தன் தாய், தகப்பன், சகோதரரோடு ஒரு அமைதியான வாழ்க்கையை வாழ்ந்தார். தன் சகோதரரின் வாழ்க்கை தரம் எப்படியிருந்தாலும், தன் சிறு வயதில் இருந்தே தேவனையே தன் நம்பிக்கையாக கொண்டிருந்து, தேவன் தனக்கு வெளிப்படுத்தின காரியங்கள் நிச்சயமாக நிறைவேறும் என்று அவர்மேல் நம்பிக்கை கொண்டிருந்தார். சூழ்நிலைகள் யாவும் அதற்கு விரோதமாய் இருந்தாலும், போத்திபாரின் வீட்டிலும், சிறைச்சாலையிலும், உண்மையாய் தன் பணிகளை செய்தார். தேவ திட்டத்திற்கு எதிராய் இருக்கிற சூழ்நிலையில் தான் ஏன் வாழவேண்டும் என்று அவர் நினைக்கவில்லை.

ஏனெனில் எப்படிப்பட்ட எதிர்மறையான சூழிநிலையிலும் அவர் கனிதரும் செடியாய் இருந்தார். ஏற்றகாலத்தில் தேவன் அவரை உயர்த்தி, அவரால் அநேகர் போஷிக்கப்படும்படியாய், விசேஷமாக இஸ்ரவேல் குடும்பத்தார், சந்ததியாய் போஷிக்கப்படும்படியாக அவரை வைத்தார். இவ்வாறாகவே மற்ற தேவ மனிதர்களும் கனிதருகிறவர்களாய் இருந்தனர். அதே வேளையில், இவ்வுலகதில் இன்னொரு சாராரான மனிதர்களும் உண்டு. **"மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 17:5).** இவர்கள் தேவனை அறியாதவர்களாகவும் அல்லது அறிந்தும் அவருக்கு கீழ்படியாதவர்களாகவும், மற்ற மனுஷரை சார்ந்து கொண்டு அல்லது தங்கள் ஆஸ்தி, பெலன், அறிவு ஆகியவற்றை சார்ந்து கொண்டு, தேவ திட்டத்தை பற்றி அறிவில்லாமல், தாங்களாகவே தங்களுக்கு என்று சில


காரியங்களை நியமித்து கொண்டு, அவற்றை அடையவும், அனுபவிக்கவுமே தங்கள் வாழ்க்கையின் காலங்களை செலவிடுகின்றனர்.

வேதாகமத்திலும் பழைய ஏற்பாட்டில் சவுல், அப்சலோம், நேபுகாத்நேச்சார், புதிய ஏற்பாட்டில் பரிசேயர், சதுசேயர் போன்றோர் தங்களைகுறித்த தேவ நோக்கத்தை அறியாமல், தாங்களாகவே சில காரியங்களை சார்ந்து கொண்டு, கனியற்ற சபிக்கப்பட்டவர்களாக காணப்படுகின்றனர். உலகின் இக்காலகட்டத்திலும் இப்படிப்பட்ட மனிதர்களே வாழ்கின்றனர். ஒரு பக்கம் தேவனுக்காய், தேவ திட்டத்திற்காய், தேவ இராஜ்யத்தின் விரிவாக்கத்திற்காய், தேவனையே சார்ந்து இரவும் பகலும் ஓடும் மக்கள். மற்றொரு புறம், இவ்வுலகத்தை ஆதாயப்படுத்தி கொள்ளும்படியாய், தங்கள் நித்திய ஜீவ வாழ்க்கையையும் நஷ்டப்படுத்தி, இவ்வுலகத்தின் மக்கள் மேலும், செல்வம், புகழ், பதவி, அதிகாரம் ஆகிய இவைகளின் மேலும் தங்கள் நம்பிக்கையை வைத்து அதற்காக ஓடும் மக்கள்.

இவை எல்லாவற்றிற்கும் தேவன் ஒரு முடிவை வைத்திருக்கிறார். ஏனெனில் **“என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்” (யோ 15:2)**. எனவே தேவனுக்கென்று நற்கனி தரும் மரங்களாய் நாம் வாழ்வோம். அவரையே சார்ந்துகொள்வோம். ஆமென்.

# மனுஷருள்ளத்திலிருப்பதை

**மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்கவேண்டியதாயிருக்கவில்லை (யோவான் 2:25).**




இவ்வுலகத்தில் மனிதனால் எத்தனையோ காரியங்களை கண்டுபிடிக்க முடிந்தாலும், ஆகாயத்தில் உள்ளவைகளையும், ஆழ்கடலின் அடியில் இருப்பதையும் ஆராய முடிந்தாலும், மனித உடலின் ஒவ்வொரு பாகத்தையும் ஆராய முடிந்தாலும், மனிதனின் உள்ளத்திலிருப்பதை மற்றொரு மனிதனால் அறிந்து கொள்ளமுடியாது. நம்முடைய சொந்த குடும்பத்தில் உள்ளவர்களின் மனநிலையை கூட நம்மால் கணிக்க இயலாது. எந்த கருவியும் மனதின் சிந்தனையை துல்லியமாக கூற இயலாது.

ஏனெனில் **"எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?"** என்று **(எரே 17:9)** கூறுகிறது. மேலும் **"மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே**

**பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு,"** என்று **ஆதி 6:5** கூறுகிறது. நன்மை, தீமை இன்னதென்று அறிந்து கொள்ளும் இருதயம், நன்மையை காட்டிலும் தீமையையே செய்ய தீவிரிக்கிறது. இதற்கு காரணம் **"அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்." (எபே 2:3).** ஏனெனில் ஆண்டவர் சொன்னபடி **"உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" (லூக் 12:34).**

ஆம் தேவனுடைய சித்தத்தையும், ஐக்கியத்தையும், அவருடைய ஆசிர்வாதத்தையும் காட்டிலும், உலக பொருளும், உலக இன்பங்களும், உலக ஐக்கியங்களும் நமக்கு பெரியதாய் இருக்கும் பொழுது, நாம் நமது மாம்சமும், மனதும் விரும்பினவைகளை செய்கிறோம். பரலோக பொக்கிஷத்தை காட்டிலும், உலக காரியங்களை நாம் பெரியதாக நினைத்து அதின்மேல் நமது சிந்தையை, இருதயத்தை வைக்கும் பொழுது, நமது வாழ்க்கை முழுவதுமே அவற்றால் ஆட்கொள்ளபடுகிறது. இதனால் நம்மை குறித்த தேவசித்தத்தையும், திட்டத்தையும் நாம் மறந்து போனவர்களாய் உலகத்தின் பின்னே ஓடிகொண்டிருக்கிறோம். எத்தனையோ ஊழியங்களும், பிரசங்கங்களும், அற்புதங்களும் நடந்தாலும் மனுஷருடைய மனம் மாறாமல் இருப்பதற்கு இதுவே காரணமாகும்.

ஆண்டவர் சொன்னபடி **"நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான்; பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான்; இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும்" (லூக் 6:45).** இங்கு நாம் கவனிக்க வேண்டிய ஒரு சத்தியம் இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும் என்பதாகும். எனவே பொல்லாத இருதயத்தில் இருந்து வரும் பேச்சுகள் பொல்லாதவைகளானதும், அடங்காததுமாயும் இருக்கிறது. எனவே **"நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது!" (யாக் 3:6).** அநேக நேரங்களில் நம்மாலேயே நம்முடைய சிந்தையை கட்டுப்படுத்த முடியாதவர்களாய் போகிறோம். எனவே இப்படிப்பட்ட இருதயத்தை பற்றி நன்கு அறிந்தவரால் மட்டுமே அதை சரிசெய்ய முடியும்.

அதற்காகவே அவர் நமக்காக சிலுவையில் பலியானார். **எபி 9:14** கூறுகிறது **“நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்தக்கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!“.** **மேலும்** **“உள்ளத்திலே யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம்; இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது.“**, என்று **ரோ 2:29** கூறுகிறது. இப்படியாக ஆண்டவருடைய இரத்தத்தால் கழுவப்பட்டு, ஆவியானவராலே இருதயத்தில் விருத்தசேதனம் பண்ணப்பட்டோமானால், **1 கொரி 2:16** கூறுகிறபடி **“எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது”** என்று உறுதிப்படுத்தி கொள்ளலாம்.

நம்முடைய இதய கதவின் வாசற்படியில் நின்று தட்டுகிறார் **(வெளி 3:20)**. அவருக்கு திறப்போமானால் **அப்போ 4:32** கூறுகிறபடி **“விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள்.“**, ஆம் கிறிஸ்துவின் சிந்தையாகிய அந்த ஒரே இருதயமே நம் அனைவருக்குள்ளும் இருக்கும். அது தேவ சித்தத்தை, தேவ திட்டத்தை நிறைவேற்ற இணைந்து செயல்படும். ஆமென், அல்லேலூயா.

# கூடாதகாரியம்

<u>Heb. 6:4-6</u>
"it is **impossible** for those who have once been enlightened, who have tasted the heavenly gift, who have shared in the Holy Spirit, who have tasted in the goodness of the word of God and the powers of the coming age, if they fall away, to be brought back to **repentance**, because to their loss they have crucified the Son of God all over again and subjected him to public disgrace"

பரிசுத்த வேதாகமம் கூறுகிறது **"தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை" (லூக் 1:37)**, என்று. ஆனால் அதே நேரத்தில் செய்ய முடியாத, கூடாதகாரியம் என்று கூறப்பட்டிருக்கும் ஒரு செயல் இருக்குமானால் அது **எபிரெயர் 6:4-6** வசனங்கள் வரை கூறப்பட்டிருப்பதாகும், **"ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரமஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்"**. பாவத்தில் வாழும் மனிதனை காட்டிலும், பாவ சேற்றில் இருந்து மீட்டெடுக்கப்பட்டும் மறுபடியும் தானாகவே அதில் விழுந்து போன மனிதனுடைய நிலைமை மிகப்பரிதாபம். மேற்க்கண்ட வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஒவ்வொரு வார்த்தையும் மிக முக்கியமானதாகும். அவற்றை நாம் இப்பொழுது தியானிப்போம்.

1. **ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும்:** மனந்திரும்பின ஒரு பாவி, பாவ இருளிலிருந்து, கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி தன் மேல் பட்டபடியால் வெளிச்சத்திற்கு வருகிறான். இனி அவன் ஒருபோதும் இருளுக்கு உரியவன் கிடையாது. மேலும் அவனிடத்தில்

உள்ள ஒளியை பிரகாசிப்பதின் மூலம் அவன் மற்றவரையும் இருளிலிருந்து மீட்கிறான். விசேஷமாக ஆண்டவருக்காக ஊழியம் செய்யும் பொழுது, நாம் பிரகாசிக்கிற நட்சத்திரங்களாய் காணப்படுவோம். மோசேயின் முக பிரகாசத்தை பார்க்கிலும் மேன்மையான பிரகாசத்தை கர்த்தர் நமக்கு தருகிறார். ஆனால் இப்படிப்பட்ட அனுபவத்தை பெற்ற பின்பும் மறுதலித்து போனால் அப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்து மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியமாகும்.

**2. பரமஈவை ருசிபார்த்தும்:** தேவன் நமக்கு பாராட்டின ஈவு மிகப்பெரியதாகும். எப்பேர்ப்பட்ட மோசமான பாவியையும் அவருடைய ஈவு மீட்டெடுக்கிறது. நமக்கே தெரியும் நாம் எப்படிப்பட்ட பாவ வாழ்க்கை வாழ்ந்தோம் என்றும், இப்பொழுது நாம் இருக்கும் சூழ்நிலைக்கு நாம் சற்றும் தகுதியானவர்கள் அல்ல என்றும் நாமே அறிவோம். இந்த அறிவு மனந்திரும்பின ஒவ்வொருவருக்கும் உண்டு. அதுமாத்திரமல்ல தேவன் நமக்கு இப்பொழுது தந்திருக்கும் தாலந்துகள், வரங்கள், நன்மைகள் யாவும், தகுதியற்ற நமக்கு அவருடைய பரமஈவால் கொடுக்கப்பட்டதாகும். இப்படிப்பட்ட பரமஈவின் அனுபவத்தை ருசிபார்த்த பின்பும் மறுதலித்து போனால், அப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்து மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியமாகும்.

**3. பரிசுத்த ஆவியைப் பெற்றும்:** நாம் இரட்சிக்கப்பட்டதால் பெறும் மிகபெரிய சிலாக்கியம், பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொள்வதாகும். அவரால் நடத்தப்படுவதாகும். அவருடைய சமாதானத்தால், சந்தோஷத்தால் நிறைந்திருப்பதாகும். நம்முடைய சிந்தனை, செயல் யாவும் ஆவியானவரால் நிரப்பபட்டு, கட்டுபடுத்தப்பட்ட அனுபவமாகும். இப்படிப்பட்ட அனுபவத்தை பெற்றும் மறுதலித்து போனால், அப்படிப்பட்ட மனிதரை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியமாகும்.

**4. தேவனுடைய நல்வார்த்தை:** தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை. அவருடைய வார்த்தையை, சத்தத்தையே நாம் கேட்டிருக்கிறோம். அதுவே நம்மை இரட்சித்தது. தேவ வார்த்தையே நம் இருதயத்தில் கிரியைச்செய்து நம்மை இரட்சித்தது. அந்த வார்த்தையே நாம் தேவனை அறிந்து கொள்வதற்கும், அவருக்கு பிரியமான வாழ்க்கை எதுவென்று உணர்ந்து கொள்வதற்கும் நமக்கு உதவினது. மேலும் தேவனுடைய சித்தத்தையும், நம்மை குறித்த தேவ திட்டத்தையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் அறிந்துகொள்வதற்கும் தேவனுடைய வார்த்தை நமக்கு உதவினது. ஆனால் இதை எல்லாம் அறிந்த பின்பும், மறுதலித்து போனால், அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியமாகும்.

இப்படியாய் மறுதலித்து போனவர்கள், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் தங்களுக்காய் சிந்தின இரத்தத்தின் மேன்மையை உணராதபடியால், அவரை தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறவர்களாய் காணப்படுகின்றனர். இதுவே அவர்களின் முந்தின நிலையை காட்டிலும் மோசமான, கேடுள்ள ஒரு நிலையாகும். இக்காரியங்களை குறித்து **எபிரெயர் 10:26-29** வசனங்கள் மேலும் பல சத்தியங்களை நமக்கு தருகிறது. அவற்றை நாம் அடுத்த தியானத்தில் தொடர்ந்து தியானிபோம். மேற்க்கண்ட சத்தியங்களை, நாம் நம் மனதில் இருத்தி, ஒருபோதும் நமக்கு இப்படிப்பட்ட நிலைவராதபடி ஜாக்கிரதையாய் இருந்து, தேவ கிருபையையும், தயவையும், பாதுகாப்பையும் பெற்று, அவருக்கு பயனுள்ளவர்களாய் வாழ்வோம். ஆமென், அல்லேலூயா.

# நன்றியறிதல்

## நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள் (கொ 3:15)




கொலோசெயருக்கு எழுதிய நிருபத்தில் அப்போஸ்தலராகிய பவுல் பல காரியங்களை குறிப்பிட்டு சொல்லி கொண்டு வரும் வேளையில், மேற்காணும் நன்றியறிதல் பற்றியும் குறிப்பிடுகிறார். இந்த வார்த்தை பார்பதற்கு சாதாரணமாயிருந்தாலும், பல வேத சத்தியங்கள், இந்த சிறிய வார்த்தையாகிய நன்றியறிதல் என்பதற்குள்ளாக அடங்கியிருக்கிறது. இந்த நன்றியறிதல் என்னும் குணம் இல்லாததினாலேயே இன்று பலர் தேவனுக்கு எதிராகவும், சக மனிதர்களுக்கு எதிராகவும் பல காரியங்களை செய்கின்றனர். நன்றியறிதல் என்னும் இக்குணம் எவ்வளவு முக்கியமானது என்பதை பின்வருமாறு காண்போம்.

முதலாவது நன்றியறிதல் உள்ளவர்கள் தேவனுக்கு முன்பாகவும், சக மனிதர்களுக்கு முன்பாகவும் எவ்வாறு இருப்பார்கள் என்பதை காண்போம். நன்றியறிதல் உள்ள மனதில் இருந்தே மெய்யான துதி

ஸ்தோத்திரங்கள் வெளிவரும். தேவன் செய்த, செய்கின்ற, செய்ய போகின்ற ஒவ்வொன்றையும் குறித்து நன்றியறிதலுள்ள மனதுடனே இருப்பவர்களே அவரை மெய்யாய் ஸ்தோத்தரித்து உயர்த்துவார்கள். மற்ற மனிதர்களுக்கும் அவர் செய்த நன்மைகளை அறிவிப்பார்கள். இக்கட்டு காலங்களில், நெருக்கங்கள் ஏற்பட்டாலும் பின்வாங்கி போகமாட்டார்கள். தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களை செய்யமாட்டார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக அவரில் மெய்யாய் அன்பு கூறுவார்கள்.

மேலும் இக்குணத்தால், சக மனிதர்களுடனும் நல்ல ஐக்கியத்தை உடையவர்களாய் இருப்பார்கள். மற்றவர்கள் செய்த நன்மைகளுக்கு நன்றியறிதலாய் தாங்களும் சக மனிதர்களுக்கு தங்களால் இயன்றமட்டும் உதவுவார்கள். ஆனால் நன்றியறிதல் குணம் இல்லாதவர்கள் ஆண்டவரும், மற்ற மனிதர்களும் தங்களுக்கு செய்த நன்மைகளை மறந்து, துணிகரமாய் அவர்களுக்கு எதிராகவே காரியங்களை செய்வார்கள். இந்த குணம் இல்லாதவர்களிடத்தில், ஆவியின் கனிகளையோ, வரங்களையோ காணமுடியாது.

தங்கள் நிலைமை முற்காலத்தில் எப்படியிருந்தது, எப்படிப்பட்ட சூழ்நிலைகளை எல்லாம் தேவகிருபையினால், மனுஷர் தயவினால் தாங்கள் கடந்துவந்தோம் என்பதை, நன்றியறிதல் உள்ள இருதயமே நினைவில் வைத்திருக்கும். அவ்வாறு நன்றியறிதல் இல்லையெனில், வீண்பெருமையும், சுய நலனுமே அவர்களிடத்தில் மேலோங்கி நிற்கும்.

எனவே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம் ஒவ்வொருவருக்காகவும் சிலுவையில் அறையப்பட்டு, பாடுபட்டு, மரித்து, அடக்கம்பண்ணபட்டு, மூன்றாம் நாள் உயிரோடெழுந்து, அவர் நிறைவேற்றி முடித்த அவருடைய கிரியையை நன்றியறிதலுள்ள இருதயத்தில் இருத்தியிருப்போமானால், நாம் அவருக்கென்று கனி கொடுக்கிறவர்களாய் காணப்படுவோம். மேலும் நம்முடைய சக மனிதர்களுக்கும் நம்மால் மிகுந்த பலன் உண்டாகும். தேவன் தாமே நம் ஒவ்வொருவருக்கும் இக்கிருபையை தருவாராக. ஆமென், அல்லேலூயா.

# ஆவியோடும், உண்மையோடும்

**உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார் (யோ 4:23,24).**

**மேற்க்கூறப்பட்ட வசனத்தில் ஆண்டவரை நாம் ஆராதிக்க வேண்டும் என்றால், தொழுது கொள்ள வேண்டும் என்றால், இரண்டு காரியங்கள் கூறப்பட்டுள்ளது. ஒன்று ஆவியோடு, மற்றொன்று உண்மையோடு. அதற்கான காரணங்களும் இவ்விரு வசனத்திலேயே கூறப்பட்டுள்ளது. முதலாவது தேவன் ஆவியாயிருக்கிறபடியால், ஆவியாயிருக்கிற தேவனை நாம் மாம்ச சிந்தையோடு, மாம்ச பெலத்தால் ஆராதிக்கவோ, தொழுது கொள்ளவோ முடியாது. உலகத்தில் அநேக மக்கள் தாங்கள் நம்புகிற தெய்வங்களை தங்கள் மாம்ச பெலத்தால், சில காரியங்களை செய்து தொழுது கொள்கின்றனர். ஆனால் நம் ஆண்டவரோ, நாம் நம் ஆவியால், அவரைப் பற்றிய சிந்தையோடு, அவரோடு ஐக்கியப்பட்டு அதன்மூலம் நம் சரீரத்தையும் கட்டுப்படுத்தி அவரை ஆராதிக்க விரும்புகிறார்.**

**உலக மக்கள் தங்கள் சரீரத்தை கட்டுபடுத்துவதன் மூலம் தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையை மேம்படுத்த நினைக்கின்றனர். ஆனால் ஆவியாயிருக்கிற நம் ஆண்டவரோ, அவரோடு நாம் ஆவியில் ஐக்கியபடுவதின் மூலம், நம் மாம்ச சரீரத்தையும் பாவங்களற சுத்திகரித்து, நாம் தம்**மை தொழுதுகொள்ள செய்கிறார். எனவே சரீர பிரகாரமாக நாம் செய்யும் பக்திக்குரிய செயல் அல்ல, ஆவிக்குரிய பிரகாரமாக நாம் ஆண்டவரிடத்தில் கொண்டுள்ள பயபக்தியே நாம் தேவனை ஆராதிக்க நம்மை தகுதியுள்ளவர்களாக்குகிறது.

அடுத்ததாக கூறப்பட்டுள்ள காரியம் உண்மை ஆகும். இன்று பல ஆவிக்குரிய சபைகளில் ஆவியோடு ஆராதிப்பதை குறித்து போதிக்கப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் உண்மையோடும் ஆராதிக்க வேண்டியதை பற்றி அதிகமாக போதிக்கபடுவதில்லை. ஒருவர்

ஆவியானவரால் நடத்தப்பட்டு உண்மையாய் ஆராதிப்பாரானால், அவருடைய வாழ்க்கையில் உண்மை தன்மை காணப்படவேண்டும். உண்மையாயிருத்தல் என்று கூறும்பொழுது ஆவிக்குரிய காரியங்களில் மட்டுமில்லாமல், இவ்வுலக காரியங்களிலும் உண்மையாயிருத்தல் வேண்டும். ஏனெனில் **"அநீதியான உலகப்பொருளைப்பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால், யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்?" (லூக் 16:11)** என்று ஆண்டவரே கூறியிருக்கிறார்.

வேதத்தில் தேவனை உண்மையாய் ஆராதித்த தேவமனிதர்கள் ஒவ்வொருவரும் ஆவிக்குரிய காரியங்களில் மட்டுமல்ல, உலக பிரகாரமான காரியங்கள் ஒவ்வொன்றிலும் மனுஷர் முன்பாகவும் உண்மையுள்ளவர்களாய் இருந்தார்கள். ஆபிரகாம், யோசேப்பு, தாவீது, யோபு, தானியேல் என பல பரிசுத்தவான்களின் வாழ்க்கையில் அவர்கள் ஆவியோடும், உண்மையோடும் எவ்வாறு தேவனை தொழுது கொண்டார்கள் என்பதை நாம் காணலாம். ஆனால் அதே வேளையில் பொருளாசையை சார்ந்து, வாழ்க்கையில் உண்மையில்லாமல், ஆனால் ஆவிக்குரியவர்களாய் தங்களை அடையாளபடுத்த நினைத்தவர்களின் முடிவை நாம் அப்போஸ்தலர் 5ஆம் அதிகாரத்தில் அனனியா, சப்பீராள் வாழ்க்கையில் காணலாம்.

வேதனைக்குரிய காரியம் என்னவென்றால் இன்றும் நம் சபைகளில் இப்படிப்பட்டவர்கள் காணப்படுவதே ஆகும். இதன் நிமித்தம் சத்திய மார்க்கம் தூஷிக்கப்படுகிறது **(2 பேதுரு 2:2)**. உலகபிரகாரமான வாழ்க்கையில் உண்மையற்றவர்களாய் காணப்படுகிற சபை மக்களாலும், தேவ ஊழியத்தை ஆதாய தொழிலாக்கி தேவனுக்கு உண்மையற்றவர்களாய் இருக்கிற ஊழியர்களாலும் அநேகர் இடறல் அடைகின்றனர். எனவே நமது வாழ்க்கையில் எந்த நிலையிலும் உண்மையை காத்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஏனெனில் நாம் ஆவியோடு ஆராதிப்பதை தேவன் மட்டுமே பார்க்க முடியும். ஆனால் உண்மையாய் வாழ்வதை நம் சகமனிதர்களும் காணமுடியும். அவர்கள் சமாரிய ஸ்தீரியை போல் அந்நியர்களாய் இருந்தாலும், நமது உண்மையான வாழ்க்கையின் மூலம் ஆண்டவரிடத்தில் அவர்களும் வழிநடத்தப்படுவார்கள். எனவே உண்மையாய் தேவனை ஆராதிக்க, தேவ ஜனமாயிருக்க, ஒருவர் எத்தேசத்தாராய் இருந்தாலும் எப்படிப்பட்ட சூழ்நிலையில் வாழ்ந்தாலும், எந்தவித பேதமும் இன்றி, தேவன் எதிர்ப்பார்பதெல்லாம் இந்த இரண்டு காரியங்களை மட்டுமே ஆகும்.

சமாரிய ஸ்தீரி அன்று இந்த சத்தியத்தை கேட்டு ஆண்டவரை ஏற்றுக்கொண்டால் மற்றவர்களும் ஆண்டவரை அறிந்துகொள்ள செய்தால். நம்மையும் தேவன் இவ்வாறே தேடி வந்தார். எனவே நாமும் சமாரிய ஸ்திரியை போல நம்மை தேவனிடத்தில் ஆவியோடும், உண்மையோடும் அர்பணித்து மற்றவர்களையும் அவரிடத்தில் வழிநடத்துவோமாக. ஆமென் அல்லேலூயா.

# இயேசுவின் வீரன் - தியானங்களின் தொகுப்பு

**www.jesussoldierindia.wordpress.com**

